Koviloor Digital Library

நாரத பக்தி ஸூத்ரம்

(மூலமும் - உரையும்)

தமிழில்

Sri Andal - Sri Rangamannar (Srivilliputtur)

வெளியிடுவோர் :
அகில பாரத ஸாது ஸங்கம்
ஸ்ரீவில்லிபுத்தூர்.

Acc. No 11978

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

உ

நாரத பக்தி ஸூத்ரம்

(மூலமும் - உரையும்)

தமிழில்

உரை : K G K

வெளியிடுவோர் :

அகில பாரத ஸாது ஸங்கம்

ஸ்ரீவில்லிபுத்தூர்

Koviloor Digital Library

வடிவமைப்புடன் அச்சிட்டோர் :
நாராயணா கம்ப்யூட்டர் பிரஸ்
ஸ்ரீவில்லிபுத்தூர்
போன் : 261772

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 11978

இப்புத்தகத்தின் மூலம் வரும் வருவாய் அகில பாரத ஸாது ஸங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் மூலம் ஸ்ரீஸ்ரீ அண்ணாவின் நூல்களை வெளியிட பயன்படுத்திக்கொள்ளப்படும்.

பதிப்புரிமை பெற்றது.

Koviloor Digital Library

4-2 23

ஸ்ரீ ராம:

ஸ்ரீ நாரதரே பக்தி மார்க்கத்துக்கு ப்ரதான ஆசார்யன். ப்ரஹ்லாதன் த்ருவன் போன்ற குழந்தைகளுக்கு பக்தி மார்க்கத்தை காண்பித்த நாரதர் குழந்தைகளுக்கும் புரியும்படி நாரத பக்தி ஸூத்ரங்களை அமைத்துள்ளார். அதற்கு ஒரு உரை கடயநல்லூர் டா.ரா. கிருஷ்ணன் எழுதியதைப் பார்த்தேன். மிகவும் தெளிவாக அமைந்துள்ள உரை படிக்கப் படிக்க இனியதாக பக்தர்களுக்கு பக்தி மார்க்கத்தின் தெளிவைத் தரும். நிர்மலானந்தன் அனேக ஆசிகள்.

— ஸ்ரீ

இவ்வார் ஆசிகள்

16-4-2002

Koviloor Digital Library 4-2



ஸ்ரீ ஸ்ரீ அண்ணா

சங்கரோ சங்கர சாக்ஷாத்
வ்யாஸோ நாராயணோ ஹரி : ||

Koviloor Digital Library

ஸ்ரீ ஹரி :

மகாத்மா ஸ்ரீஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச் செய்த ஸ்ரீ கோவிந்த சதக கீர்த்தனைகளில்

நாரதரை நமஸ்கரிக்கும் கீர்த்தனை

ராகம் : கேதாரம் தாளம் : ஆதி

நாரதம் ப்ரணமாமி ஸந்ததம் (நா)

வல்லவி ரமண ஹ்ருதி நிவஸந்தம்
வல்லகிரணித ஸ்வர மகரந்தம் (நா)

தேவல தும்புரு ஸக்ய விலோலம்
தீனோத் தாரண காரண லீலம் (நா)

ப்ரதிபத மதுர ப்ரவசன தீரம்
ப்ரகடித க்ருஷ்ணப்ரேம விகாரம் (நா)

நாரதரை நமஸ்கரிக்கிறேன். கிருஷ்ணனின் ஹ்ருதயத்தில் வசிப்பவரும், ஸ்வரமான தேனை வீணையில் பொழிபவரும், தேவலர், தும்புரு இவர்களின் நண்பரும், தீனர்களை உத்தாரணம் செய்வதையே விளையாட்டாக உடையவரும், பேச்சினில் ஒவ்வொரு பதத்தையும் அழகாகச் சொல்வதில் தீரரும், கிருஷ்ணப்ரேம தத்வத்தை வெளிப்படுத்துபவருமான நாரதரை வணங்குகிறேன்.

Koviloor Digital Library 4 - 2

ஸ்ரீ :
ஸ்ரீ ஹரி :

மகாத்மா ஸ்ரீஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி மகராஜின் ஆரா அமுது

உலகின்கண் உள்ள பல்வேறு நூல்கள். இவைகள் இதிகாச, புராணங்கள் என்று பலவகைப்பட்டவை. இதில் படிக்க வேண்டியது என்று தேர்ந்து தெளிந்தால் அது புராணங்களில் கடைசியாக ஸ்ரீ வியாச பகவான் அருளிய ஸ்ரீமத் பாகவதமே. ஸ்ரீமத் பாகவதம் என்பது ஒரு நூல் மட்டுமல்ல. அது ஸ்ரீக்ருஷ்ண ஸ்வரூபம். பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் தனது அவதார காரியங்களை முடித்துக் கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருள தீர்மானித்துவிட்டான் என்பதை புரிந்து கொண்ட யோகிகளும், முனிவர்களும் அதைக் காண அங்கு கூட்டமாக கூடி விட்டார்கள். எந்த முறையில் ஸ்ரீக்ருஷ்ணன் தனது பூத உடலை விட்டு கோலோகத்திற்கு எழப்போகிறான் என்று பார்க்க ஆர்வம் மிகுதியால் கூடிவிட்டார்கள். ஸ்ரீக்ருஷ்ணன் தனது யோகதாரணையால் அங்கேயே மறைந்தான். ஆனால், அவன் ஸ்தூலமாக சென்று ஸ்ரீமத் பாகவதம் என்ற மகாபுராண நூலில் மறைந்து விட்டான். இதுவே, ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீக்ருஷ்ண ஸ்வரூபம் என்பதற்கு போதுமான சான்றாகும்.

எனவே ஸ்ரீமத் பாகவதம் கேட்பது படிப்பது என்பது ஸ்ரீக்ருஷ்ண தரிசனமாகும். இதுவே, ஒருவனுடைய சிந்தனையை க்ருஷ்ணமயமாக்கிவிடும். அவரவர்களுக்கு குலதெய்வத்திடமும் பக்தி உண்டு. அது மரியாதை பக்தி. உண்மையான பக்தி என்பது ஸ்ரீ க்ருஷ்ணனிடம் மட்டுமே இதுவே ஸ்ரீ க்ருஷ்ண பக்தி - புஷ்டியான பக்தி. ஸ்ரீக்ருஷ்ணனை இஷ்டதெய்வம் என்பதை மனது ஏற்றுக்கொண்டுவிட்டால் அங்கு புஷ்டியான பக்திக்கு ஏது குறை. ஆனால், இந்த க்ருஷ்ண பக்தி என்பது குருநாதன்தான் கொடுக்க வேண்டும். குலதெய்வமான சிவபெருமானிடம் அனுமானுக்கு மரியாதை பக்தி. ஆனால் ராமனிடமே தன் ஹ்ருதயத்தை கொடுத்து விட்டார். எதுபோல் எனில் மனைவிக்கு கணவனிடம் உள்ள அன்பை ஒத்தது. மற்ற எல்லோரிடமும் மனைவிக்கு அன்பு உண்டு. ஆயின், அது மரியாதை நிமித்தம் ஏற்படுவது. தன் கணவனிடம் மட்டும் தனியாக ஏற்படும் இதயபூர்வமான அன்பை ஒத்தது. இதுவே, ஸ்ரீக்ருஷ்ணனான இஷ்டதெய்வத்திடம் ஏற்படும் அனுராகம். இந்த அனுராகம் மட்டும் ஸ்ரீக்ருஷ்ணனாக தந்தால்தான். பகவான் முதலில் ஸாதுக்களுடைய சங்கத்தை தருகிறான். பின் ஸத்குருவை அனுப்பி பிரகாசிக்க செய்கிறான். இந்த அனுபவங்கள் எல்லாவற்றிற்கும் அனுபவித்தவர்கள் இதயங்களே சாட்சி. சொல்வதாலோ, எழுதுவதாலோ இவைகளின் உண்மையான நிலையை விளக்கிவிட முடியாது. அவரவர் அனுபவத்தினாலேதான் அவர்கள் இதயம் எப்படி பரிபூர்ண அன்பினால் நிரம்பிவிட்டது என்பதை உணர முடியும்.

க்ருஷ்ண பக்தி கைகூடி விட்டவனுக்கு ஸ்ரீப்ருந்தாவனமே - அந்த நினைவே அந்தப்புரம். ஸ்ரீப்ருந்தாவனம் என்ற பெயரே பலருடைய காதில்

Koviloor Digital Library

விழுந்திருக்காது. ஏனெனில், இதை பாக்கியவான்களுக்கு மட்டுமே தெரியப் பண்ணுகிறார் பகவான். ஆயின் இந்த புண்ணிய எல்லை வரை போவார்கள். எதை எதையோ கண்டு வருவார்கள். ஆயின், இந்த புண்ணிய பூமியின் உள்ளே செல்ல மாட்டார்கள். ஏனெனில், இது ஸ்ரீக்ருஷ்ணனின் அந்தப்புரம். க்ருஷ்ணதாஸர்களக்கு, தாஸிகளுக்கு மட்டுமே அங்கே செல்ல அனுமதி உண்டு என்கிறபோது சாமானியன் எப்படி செல்ல முடியும்? எனவே, செல்ல வேண்டுமென்ற புத்தியே உதிக்காமல் ஸ்ரீக்ருஷ்ணன் சர்வ ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்கிறான். அப்படியே தப்பித்தவறி ஒருவர் சென்றாலும், அதன் மகிமை உணராமல் எல்லா இடங்களையும் பார்ப்பதுபோல் பார்த்து வருவான். ஒருவன் க்ருஷ்ண பக்தனான பின்பு அதன் பெருமையெல்லாம் தெரிந்து, தெரிந்த விஷயங்களெல்லாம் குருவினுடைய அனுகிரஹத்தால் புரிந்து ப்ருந்தாவனம் செல்வானால் அவனுக்கு இதன் மஹிமை புரியும். தனது சொந்த ஊர்போல் உணர்வான். விபத்திலும், ஆபத்திலும் க்ருஷ்ண நாமமே நாவில் வருபவர்களே க்ருஷ்ணபக்தர்கள். இவர்கள் க்ருஷ்ணனால் அபிமானிக்கப்பட்டவர்கள். இவர்களுக்கு இவர்கள் இருப்பிடமே ப்ருந்தாவனமாகிவிடும். ஸ்ரீக்ருஷ்ணன் சொந்த சொத்து என்றாகிவிடும். ஆழ்வார்கள் நெஞ்சில் ஸ்ரீப்ருந்தாவனம்தான் இருந்தது. கூரத்தாழ்வார் மதுரையையே ப்ருந்தாவனம் என்று எண்ணி அழுகிறார். ஸ்ரீசங்கரர் யமுனாஷ்டகம்தான் பாடினார். ஆச்சார்யர்கள், ஸாதுக்கள் எல்லோருக்கும் ஸ்ரீப்ருந்தாவனமே உயிராய் இருந்தது. நாம் எந்த நாட்டில் எந்த ஊரில் இருந்தாலும் ஸ்ரீப்ருந்தாவனம் இருக்கும் திசையை நோக்கி வணங்க வேண்டாமா? பரமபதத்தை, வைகுண்டத்தை விட்டுவிட்டு பகவான் இங்கல்லவோ விளையாட வந்தான். பகவானது பாததூளி பட்ட இடத்தை விட வைகுண்டம் பெரிதா? பரமபதம் பெரிதா?

பகவானை அடைய போடப்பட்ட பல்வேறு மார்க்கங்களில் பக்தியே சிறந்தது. சிறந்தது மட்டுமல்ல எளிதானது. அத்தோடு இனிமையானதும் கூட. பக்தி என்பது மற்ற கர்மாக்கள் போல் ஏதும் தனியாக செய்வது அல்ல. பகவானிடம் தன்னை ஆத்மஸமார்ப்பணம் பண்ணிவிடுவதுதான் பக்தி. அப்படி ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணியவனக்கு தான் செய்வது எல்லாமே பக்தியாகிவிடுகிறது. ஞானமார்க்கம், யோகமார்க்கம் இவற்றையெல்லாம்விட பக்திமார்க்கமே சிறந்தது. பக்தியை உதாஸீனம் செய்துவிட்டு எவர் வேறெந்த மார்க்கத்தில் சென்றாலும் பலன் காணமுடியாது. ''ஜகன்மித்யா'' என்றும், பரமாத்மா தனியானது இல்லை என்றும் சொல்லலாமா? சொல்லலாம். ''ப்ருமாத்மனா ஸம்ஸ்ம்ருதி'' என்று பிரம்மம் தான் என்றாகிவிட்டால் அவனுக்கு வேறு ஏதும் இல்லை என்பதால் அவன் மட்டும் சொல்லலாம். மற்றவர்கள் அத்வைத பேச்சுக்காக சொல்லலாம். அத்வைத பேச்சு என்பது என்ன விளையாட்டா? அது அனுபவத்தில் ஸித்திக்க வேண்டாமா? இவர்களுக்கு குடும்பத்தில் ஆசை இல்லையா? எதிலும் ஆசையை விலக்காத ஒருவனுக்கு அத்வைத பேச்சு விளையாட்டுதானே. ''ஜகன்மித்யா'' என்பது யாருடைய அனுபவமோ! மற்றவர்களுக்கு பக்தி தவிர வேறு கதி கிடையாது. வேறு மார்க்கத்தில் தான் ஜீவன்முக்தராய் இருக்கிறோம் என்பவர்களுக்கு வேறு விஷய வாசனைகள் ஏன் வருகிறது? ஏன் இவர்களால் விஷய வாசனைகளை

விலக்க முடிவதில்லை. ஸமதமாதி குணங்கள் அற்றவர்களாக, காம, கோபங்களுக்கு ஆசைப்பட்டவர்களாக இவர்கள் ஏன் இருக்கிறார்கள்? இப்படி இருந்துகொண்டு அத்வைதம் பேசலாமா? இவர்கள் கபடர்கள். விஷய வாசனைகளிலிருந்து தன்னை விலக்கிக்கொள்ள முடியாத இவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் கீழே விழுந்துவிடுவார்கள். ஆத்மாராமர்களையும், பூரண ஞானிகளைக் கூட ஸ்ரீக்ருஷ்ணன் நினைத்தால் இவர்களுக்கு அகந்தையை ஏற்படுத்தி கீழே தள்ளிவிடுவான். இவர்களுக்கு காம, கோபங்களை உண்டாக்கிவிடுவான். எனவேதான், மஹா பெரியவர்கள் என்று தன்னை சொல்லிக்கொண்டவர்கள் கூட கீழே விழுந்துவிட்ட சரித்திரங்கள்தான் ஏராளமாக இருக்கின்றனவே.

எனவே, பக்தி என்பது பூரணசரணாகதி. இது தவிர வேறு கதி இல்லை ஜீவனுக்கு. பகவானிடம் தன்னைப்பற்றி கூறும்போது உன்னைச் சேர்ந்தவன் என்று அலறுவதை தவிர வேறு கதி இல்லை அல்லவா! இது ஒன்றுக்காக மட்டும் பகவான் உன்னை தன்னுடையவன் என்று ஏற்றுக் கொண்டுவிடுவானே! ''ஸ்ரீக்ருஷ்ண தவாஸ்மி'' என்று இரு. க்ருஷ்ணா நான் உன்னைச் சேர்ந்தவன் என்று இரு. இப்படி இருந்தால் நீ ஒருபோதும் கீழே விழமாட்டாய். இந்த நிலையே பாகவத தர்மம் எனப்படுகிறது.

''ஸ்ருண்வன் க்ருணன் ஸம்ஸ்மரயந்யசிந்தயன்'' என்று இரு. ஸ்ரீக்ருஷ்ணனை பற்றிரே கேட்பது, பேசுவது, சிந்திப்பது என்று இருந்துவிட்டாலே பக்தி மார்க்கத்தில் உன்னத ஸ்திதிக்கு போய்விடலாம். க்ருகஸ்தர்களும் கூட சன்னியாச நிலைக்கு உயர்ந்து விடலாம். இந்த நிலைக்கு குருபக்தி வேண்டும். குருதான் வாஸ்தவம். குருதான் சத்தியம் என்று இருந்தாலே குருவின் நிலை சிஷ்யனுக்கும் வந்துவிடும். இதன்பின் உனக்குரிய சாதனைகளை குருவே பண்ணிவைப்பார். குரு உன்னை ஏற்றுக்கொண்டுவிட்டால் அதுவே போதாதா? சபரியைப்போல் சரணாகதி பண்ணிவிட்டால் பகவான் உன்னை தேடி வரமாட்டானா? எல்லாம் குருநாதர் பண்ணுகிறார். ''நான் பேனா மட்டுமே மை போட்டு இதை எழுத வைப்பது எல்லாம் குருதானே'' என்று இரு. சன்னியாச க்ருகஸ்தனைவிட க்ருகஸ்த சன்னியாசியாக இரு. கிடைத்தபோது பகவத் குணத்தை கேட்போம். நாமும் சொல்லுவோம். தனக்குத்தானே சிந்தித்துக் கொண்டு இருப்போம். இயல்பாகவே நமக்கு என்று அமைந்த வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முயற்சியே செய்ய வேண்டாம். ஏன் முயற்சி செய்ய வேண்டும்? பகவானுடைய பூர்ண க்ருபையால் அல்லவா நமது வாழ்க்கையானது நடந்து கொண்டிருக்கிறது. அவன் அமைத்துக் கொடுத்த இந்த வாழ்க்கையைவிட நமது சுயமுயற்சியினால் வேறு எந்த வாழ்க்கையை நாம் அமைத்தக்கொண்டு விட முடியும்? எனவே, வாழ்க்கைமுறையை மாற்றிக்கொள்ள முயற்சியே செய்ய வேண்டாம். நடப்பவை தானாகவே நடக்கட்டும் என்று இருக்க வேண்டும். ஆனால், மனத்தில் மட்டும் எப்போதும் எந்த நிலையிலும் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் க்ருஷ்ண சிந்தனையோடு இருந்தால் அதுவே போதும். அதுவே சுகம். அதுவே நிம்மதி. ஏன் அதுவே சொர்க்கம்!

Koviloor Digital Library

பெரியோர்கள் எப்போதும் ஆத்மவிசாரம் செய்து கொண்டு இருப்பார்கள். பகவத் ஸ்வரூபத்திலே அல்லும், பகலும் நிலைத்து இருப்பார்கள். நாமமற்ற, உருவமற்ற, குணமற்ற எங்கும் வ்யாபித்து இருக்கின்ற பரமாத்ம தத்துவம் என்பது இவர்களது சித்தமாகும். இதுவே, இவர்களது உபாசனை, தியானம் ஆகும். இந்த நிலையில் தியானம் கைகூடிவிட்ட ஆத்மாராமர்களான பரமஹம்ஸர்களைத்தான் ஸ்ரீக்ருஷ்ணன் தன்பால் அகர்ஷிக்கிறான். இந்த நிலையை அடைந்து விடுகின்ற சுகப்ரம்மம், ஜடபரதர், ப்ரம்மேந்த்ராள் போன்ற பரமஹம்ஸ ஸ்ரேஷ்டர்களுடைய மனதை கண்ணன் ஆகர்ஷிக்கிறான் என்றால் நம்போன்ற ஸம்ஸாரிகளுக்கு வேறு கதி என்ன? ப்ரம்மஸ்வரூபமாக பகவானை த்யானம் செய்து பலனடைந்தவர்களான இந்த பெரியவர்களே கண்ணன்பால் ஓடிவந்தால், பலனே வேறு என்ன என்று தெரியாத, வேறு எந்த பலனையும் அடையாத ஸம்ஸாரிகள் கண்ணனை தேடி ஓடிவரவேண்டாமா?

ஸம்ஸாரிகளுக்கு எப்போது கரையேறப் போகிறோம் என்றம், கரையேறும் வழி எது என்றும், திசை எது என்றும் தெரியாத இருள் மயமான நிலையில் ஸ்ரீக்ருஷ்ண கதை தவிர வேறு கதி ஏது? மனிதர்களுக்கு எவ்வளவுதான் செய்தாலும், செய்நன்றி மறந்துவிடுவார்கள். ஆனால், தெய்வம் மட்டும் நன்றி மறக்காது. குறைந்த அளவிலான பக்தியே செய்தாலும், அது வீணாகாது. நம்மில் மற்றவர்களுக்கு நாம் ஏதாவது செய்தால் மட்டுமே அவர்கள் மகிழ்ச்சியுறுவார்கள். ஆனால், பகவானோ நாம் அவனை நினைத்தால்கூட என்னை நினைத்தானே என்று பெருமகிழச்சி அடைகிறான். வெளிப்படையான பூஜையில்கூட அல்ல மனதினால் பூஜை செய்தவிட்டாலே பகவான் சந்தோஷப்படுகிறான். மனத்தளவில் பூந்தோட்டம் போட்டு பூப்பறித்து மாலை கட்டி பகவானுக்கு அணிவிப்பதாக எண்ணி நாம் சந்தோஷப்பட்டாலே பகவான் பரம ப்ரீதி உடையவனாக ஆகிறான். நம் விஷயத்தில் கடன்பட்டவனாகி விடுவதாக சொல்கிறான். மனதாலே பகவானுக்கு அபிஷேகம் செய்து அலங்காரம் செய்து, பலவிதமான பணியாரங்கள் பண்ணி, நிவேதனம் பண்ணினால்கூட அந்த ஆத்மார்த்தமான பூஜையை அங்கீகரித்து நம்மை தன் நினைவில் வைத்தக்கொள்கிறான். பகவான் சம்மந்தப்பட்ட கனவு கண்டால்கூட அதுவும் பாக்கியமே. இதனாலும் பகவானுக்கு சந்தோஷமே.

ஏனெனில், மனதினை ஈடுபடுத்தாமல் வெளியே எவ்வளவு ஆடம்பரமான பூஜை செய்தாலும், பகவான் மயங்கமாட்டான். வெளிவேஷம் என்று ஒதுக்கிவிடுவான். மனது என்பதோ அபூர்வமானது. ஆயின், சஞ்சலஸ்பாவம் உடையது. எதை எதையோ எண்ணிக்கொண்டிருப்பது இதன் ஸ்பாவமாகி விடுகிறது. இதை நம் முயற்சியால் அடக்க முடியுமா? முடியவே முடியாது. அது தானாக போன போக்கிற்கு போகும். எந்த விஷயத்திலும் கொண்டு வந்து அதை நிலைநிறுத்த முடியாது. ஆனால், அப்யாஸத்தால் - அதுவும் பல ஜென்மங்களில் செய்த அப்யாஸத்தாலே வரும். இந்த நிலை மானஸீகமான பக்தியில் கைகூடுகிறது என்றால் இதை பகவான் அங்கீகரிப்பதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது. கொஞ்சங்கொஞ்சமாக ஆசைகளை மனதில் இருந்து அகற்ற பழகிக்கொள்ள வேண்டும். பழகப்பழக ஒருநாள் உலக ஆசைகளையே ஒழிக்கும்

நிலை வரும். அந்த நிலையானது பகவத் குணங்களை கேட்பதாலும், சொல்வதாலும், சிந்திப்பதாலுமே வரும். வேறெந்த வகையிலும் அடங்காத, அடக்கமுடியாத மனமானது சுலபமாக அடங்கும். வழி கதாச்ரவணம், கீர்த்தனம்தான். இயற்கையாக மனமானது லீலைகளில் அதாவது, கேளிக்கை விளையாட்டுகளில் ஓடும். குணங்களில் ஓடும். ரூபத்தில் ஓடும். கவர்ச்சியில் ஓடும். அதிகமான கேளிக்கை விளையாட்டுகள் விளையாடிய கண்ணன் லீலைகளிலோ, குணங்களிலோ ஸ்ரீக்ருஷ்ணனுடைய ரூப லாவண்யங்களிலோ, எல்லாவற்றுக்கும் மேலான அவனது கவர்ச்சியிலோ மனதை திருப்பிவிட்டால்!

எல்லாவற்றுக்கும் மதிப்பும் உண்டு. ஸ்ரீக்ருஷ்ணனுக்கு மதிப்பு போட முடியுமா? ஏன் அது சத்தியபாமாவால் முடிந்ததா? ஆனால் ருக்மணிதேவியால் முடிந்தது. என்ன காரணம்? பக்தியே காரணம்! சாதாரண மயக்கங்கள் எளிதாக தெளிந்துவிடும். இந்த க்ருஷ்ண பக்தியாகிய போதையானது எளிதில் தெளியாது. தெளியவில்லை. மஹாப்ரபு ஸ்ரீக்ருஷ்ண சைதன்யருக்கு தெளியவில்லை. மீராவுக்கு தெளியவில்லை. நம்மாழ்வாருக்கு தெளியவில்லை.

தேவாமிர்தமே சாப்பிட்டாலும் க்ருஷ்ணநாம ருசிக்கு ஈடாகுமோ? இது ''ஆராவமுதில்லையோ'' மனதை யோகிகள் தன் கடும் தவத்தால் அடக்கியும் முடியவில்லை. ஆனால் கோபிகைகளால் முடிந்தது. அவர்களால் கண்ணனை மறக்கவே முடியவில்லையே! எவ்வளவோ காலங்கள் தவம் செய்து யோகிகளின் மனதானது மானை நினைக்கிறது. ஆனால், குடும்பஸ்த்ரிகளாகி குடும்ப வேலைகளில் மூழ்கிபோன கோபிகைகளால் க்ருஷ்ணனை மறக்க முடியவில்லையே! த்யானத்தில் வராத த்யானம் கோபிகைகளுக்கு பக்தியால் கைகூடிவிட்டது. காரணம் த்யானம் நாம் பண்ணக்கூடாது. பகவான் பண்ணி வைக்க வேண்டும். பக்தி என்பது ஸ்வபாவமாகவே அமைய வேண்டும். இதற்கு வழி கதாஸ்ரவணம். எவருடைய யோக்கியைதையை வைத்தும் பகவத் கருணை இல்லை. பகவத் தயையினாலேயே கருணை. தயை தயை இதனாலேயே கருணை. இதனால்தான் பூதனைக்கும் மோக்ஷம். த்ருணிக்ருத, த்ரணவர்த்தாதி அசுரர்களுக்கும் மோக்ஷம். ஏன்? கம்சனுக்கும் கூட மோக்ஷம்.

பகவானுடைய க்ஷேத்திரங்களில் நமக்கு ஆசை. அவனது த்வ்யதாமத்தில் ஆசை. அவன் எழுந்தருளியுள்ள க்ஷேத்திரங்களுக்கு சென்று தர்சனம் செய்து சந்தோஷப்பட வேண்டும் என்று நமது தனியாத ஆசை. இகத்தில் மட்டுமல்ல - பரத்திலும். இந்த பூவுலக வாழ்வில் மனித உடலை நீத்தபின்பு த்வ்யதாமமான பரமபதத்தில் பகவானுடன் இருக்கவே ஆசை.

ஆனால், பகவானுக்கு என்ன ஆசை தெரியுமா? அவனுக்கு பூலோக சொர்க்கமான கோகுலம், ப்ருந்தாவன பூமியின் மீது ஆசை. பகவானது உத்தம ப்ரீதி ப்ருந்தாவனம். கடைசி ப்ரீதிதான் வைகுண்டம். எனவேதான் வைகுண்டத்தை விட்டு கோகுலம் வந்தான். ப்ருந்தாவனம் வந்தான். ''பரம புருஷா என்றோ, வைகுண்ட வாசா என்றோ'' பகவானை நாம் கூப்பிடும்போது அவனுக்கு அதில் சந்தோஷம் இல்லை. ஆனால் வ்ரஜபூமியான ப்ருந்தாவனத்தை சம்மந்தப்படுத்தி அவனை அழைத்தால் அவனுக்கு அதுவே சந்தோஷம். ''நந்தலாலா,

Koviloor Digital Library

ப்ருந்தாவனவிஹாரி, கிரிதாரி'' என்று அழைத்தாலோ பகவானுக்கு அவ்வளவு மகிழ்ச்சி. எனவேதான் ப்ரம்மம் ஸ்ரீப்ருந்தாவனம் வந்தபின்புதான் ''பூர்ணப்ரம்மஸனாதனம்'' என்று அழைக்கப்பட்டது. ப்ரதேச விசேஷத்தால், மண்ணின் மகிமையால் அவன் பூர்ணப்ரம்மஸனாதனம். இங்கு வந்தபின்புதான் அவன் ''குறை ஒன்றும் இல்லாத கோவிந்தன்'' என்று அழைக்கப்பட்டான். இப்படி குறையே இல்லாதவனை குறையே இல்லாத பக்தியினாலேயே அடைய முடியும். கோகுலவாஸிகள் அவனை பூர்ணமாக அனுபவித்ததால் ப்ருந்தாவனவாஸிகள் அவனை பூர்ணமாக அனுபவித்ததால் அவன் ''பூர்ணப்ரம்மஸனாதனம்''. இவர்கள் அவனிடம் பூர்ண பக்திசெய்ததால் ''பூர்ணப்ரம்மம்'' நந்தனும், யசோதையும், ராதையும், கோபிகைகளும் பலபத்ரன் ஸ்ரீதாமா போன்றவர்களும் அவனை பூர்ணமாக அனுபவித்ததால் அவன் ''பூர்ணப்ரம்மம்''.

க்ருஷ்ண கதை கேட்பது என்பது மட்டும் அவனாக அழைத்து உட்கார வைத்தால்தான் உண்டு. ராதையின் க்ருபை இல்லாமல் லோகாதீதமான ப்ரம்மானந்தம் எவருக்கும் கிட்டாது. இதனாலேயே ப்ரம்மம் ப்ரம்மானந்தமாக இறங்கி வந்தவிட்டது. இதுவே, கண்ணனின் பாலலீலைகள். ப்ருந்தாவன மண் பகவானின் சரணங்களுக்கு மிருதுவாக இருந்தது. எனவே, இது ''ஸ்வபதரமணம்'' வேதவித்துக்களான மகரிஷிகளால் ஆராதிக்கப்பட்டும், யக்ஞபுருஷன் எச்சில் தீட்டு தெரியாத இடையர்களுடன் சாப்பிட்டானே எனவே, ''பூர்ணப்ரம்மம்'' பகவத் கீதை பூராவும் தெரியாவிட்டாலும் கூட ''மாமேகம் சரணம் வ்ரஜ'' என்னையே சரணடைவாய் என்று அவன் சொன்னதை மட்டும் தெரிந்துகொண்டால் போதும். க்ருஷ்ணா நீயே துணை என அவனை நெடுஞ்சாண்கிடையாக நிலம் தோய பணிந்துவிட்டாலே போதும். அவனுக்கு ஸம்ஸார துக்கம் என்பது மறுபடியும் கிடையாது. இங்கேயே, நவநிதிகளும் கிடைக்கும். இன்னும் மோக்ஷமும் கிடைக்கும்.

இவ்வளவு சுலபமான பக்தியை உதாசீனம செய்துவிட்டு யோகசாதனம் செய்வதாலும், ஆத்ம விசாரம் பண்ணுவதாலும், என்ன கிடைத்துவிடப் போகிறது? இந்த சாதனைகள் பண்ணுவதாலேயே சோதனையும் நிறைய உண்டு. பக்தி என்பது இங்கே லகுவாக தெரிந்தாலும் இது கைவரப்பெற்றது என்னவோ, ஜென்ம ஜென்மமாய் பண்ணிய சாதனைகளின் பலனால்தான் என்கிறான் பகவானே. ப்ரயாசைப்பட்டு, கஷ்டப்பட்டு சாதனைகள் பண்ண வேண்டாம். அவனது க்ருபையை, காருண்யத்தை ஒருகணம் நினைத்துப் பார்த்தாலே போதும். இதுவே சாதனையாய் விட்டால் க்ருஷ்ணன் க்ருபை செய்துகொண்டே இருக்கமாட்டானா? அதை நினைத்துக்கொண்டே இருந்தால் இன்னும் க்ருபை செய்கிறான். ''க்ருஷ்ணா கருணாலோலா'' என்று சொல்லிக்கொண்டே இருந்தாலே போதும் வாழக்கை தானே நடக்கும். சுகமாக நடக்கும். பேராசைப்படாமல் ஆசைப்படாமல் நமக்கு வேண்டாதவற்றை விலக்கி வேண்டியனவற்றை அவனே தருவான். இதைவிட என்ன க்ருபையை எதிர்பார்க்க முடியும்.

உலகத்தில் உள்ள எண்பத்தி நான்கு லட்சம் ஜீவராசிகளில் ஒன்றாய்

Koviloor Digital Library

பிறக்காமல் மனிதனாய் பிறந்து க்ருபை இல்லையா? மனிதனாக பிறந்தது நம் சாமர்த்தியமா? அதிலும், எல்லா அங்கங்களும், நிறைவான மனிதனாக பிறந்தது க்ருபை இல்லையா? வ்யாதிகளில் இருந்து நம்மை விலக்கி நாமே நமது உணவை அருவெறுக்காமல் உண்ணப்பண்ணியது க்ருபை இல்லையா? இதிலும், ஸ்வாதீனமான புத்தியுடன் புத்திக்கலக்கம் - மாராட்டம் இன்றி நம்மை இருக்க வைத்தது க்ருபை இல்லையா? கௌரவமான குடும்பத்தில் நம்மை பிறப்பித்து கௌரவமான ஒரு வாழ்க்கையையும் நமக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறானே. இது க்ருபை இல்லையா? ஸத்ஸங்கத்திலும் அதிலும் உண்மையான ஸத்ஸங்கம் அமைத்து கொடுத்திருப்பதுதான் க்ருபையின் எல்லைநிலம். இதற்கு நாம் பகவானுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறோம் என்று நினைப்பதுதான் சரணாகதியின் உச்சக்கட்டம்.

ஆனால், இதை எல்லோரும் புரிந்துகொள்வார்களா? மாட்டார்கள். "நான் அவனது ஜனம்" என்று இருப்பவர்களே புரிந்துகொள்வார்கள். இவர்களே குடும்பத்தில் இருந்துகொண்டு சுகியாய் இருப்பார்கள். சௌக்கியமாக இருப்பார்கள். கவலையற்று இருப்பார்கள். எனவே, எதையும் விடவேண்டாம். விடும் முயற்சியும் வேண்டாம். காரியங்கள் அது தானாக விடவேண்டும். நாமாக விடக்கூடாது. பழுத்த இலைகள் தானாக விழுவதுபோல் காரியங்கள் நம்மை விட்டுப்போகும். கர்மாக்கள் அதுவாக நம்மை விட்டுப்போகும். அதுவாக விடவும் க்ருஷ்ண ஸங்கல்பமே காரணம். சுகப்ரம்மம்போல் ப்ரும்மேந்திராளைப் போல் விடவேண்டும். தானகா விட்டவர்கள் நிலை பரிதாபகரமானது. குடும்பத்தில் இருந்துகொண்டே இருந்த கோபிகைகளை பந்தம் தானாக விட்டது. எனவே, எதுவும் பகவானுடைய ப்ரீதிக்காக செய்ய வேண்டும். பகவத் சம்மதமாக செய்ய வேண்டும்.

தர்மத்தில் இருப்பவனுக்குத்தான் தர்மம் சொன்னால் புரியும். அதுபோல பக்தி நிஷ்டை உடையவனுக்குத்தான் இங்கே சொல்லப்பட்டவைகள் புரியும். தர்மத்தில் இல்லாதவனிடம் தர்மத்தைப் பற்றி சொன்னால் மகிழ்ச்சி அடைய மாட்டான். அதுபோல், பக்தி இல்லாதவனிடமும் எதையும் சொல்வதானல் பயனில்லை. ஆனால், சத்தியம் எப்படி பொது தர்மமோ அதுபோலவே, பக்தியும் பொதுதர்மம். இது வினயம் உள்ளவர்களுக்கே புரியும். பக்தியில் முக்கியமானது வினயமே.

உலகின்கண் எல்லாரும் துக்கப்படுகிறார்கள். படுகின்ற துக்கத்தில் தாரதம்யம் அதாவது அளவு வேறுபடுகிறதே தவிர - துக்கமே இல்லை. அல்லது நான் கவலையே படவில்லை என்று எவரும் கூற இயலாது. அப்படி துக்கம் அல்லது கவலை ஏற்படும்பொழுதெல்லாம் மனிதன் இதற்கு பரிகாரம் என்று தேடியலைகிறான். விமோசனம் என்ன என்று தேடுகிறான். கொஞ்சம் துக்கமோ கவலையோ குறைந்ததுபோல் தோன்றினாலும் மறுபடி துக்கப்படுகிறான். கவலைப்படுகிறான். எனவே சம்சாரத்தில் துக்கம் என்பது இயற்கை. பரிகாரம் செய்துகொள்வதால் மட்டும் முழுவதுமாக தீர்ந்துவிடாது. மாற்று ஏற்பாடுகள் ஏதும் நிரந்தரம் அல்ல. போலீஸ் ஸ்டேஷன்கள் அதிகமாக எண்ணிக்கையில்

Koviloor Digital Library

கூடிவிட்டதால் மட்டும் குற்றங்கள் குறைந்து போய்விடவில்லை அல்லவா! அதுபோல.

துக்கமே கூடாது என்றால் - அதற்கு நிரந்தர விமோசனம் ஜன்மமே எடுக்கக்கூடாது எனில் அது நம்கையில் இல்லை. பிரம்மதேவனே படைப்புத் தொழிலில் சளைத்துவிட்டான். ஒரே ஜீவனே திரும்பத்திரும்ப ஜன்மம் எடுக்கும் பொழுது பிரம்மன் தான் என்னசெய்வான்? இந்த ஜன்மாவுக்குத்தான் விமோசனம் எங்கே இருக்கிறது? மனதிலோ துக்கம், கவலை. இது அலையாக அலையாக மீண்டும் மீண்டும் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. இதற்கு எல்லைதான் எங்கே என்றும் தெரியவில்லை. மனதில்தான் கவலை என்றால் உடலிலோ பலவகைப்பட்ட வியாதிகள். ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுத்துவரும் படையினைப்போல் வியாதிகள் ஒன்றுபோனால் மற்றொன்று இல்லை ஒன்று இருக்கும்போதே பிறிதொன்று என்று எண்ண இயலாத அளவில் வியாதிகள். இந்த நிலையில் நிம்மதி எங்கே என்றுதான் தெரியவில்லை. அந்த நிம்மதி என்பதுதான் என்ன? அதன் உருவம் என்ன? நிறம் என்ன? அது எங்கிருக்கிறது? எங்கிருந்து வருகிறது? எங்கிருந்தாவது வருமா? தெரியவில்லை. நிம்மதியைத்தேடி வெளியில் அலைந்ததுதான் மிச்சம். ஒரு துக்கத்துக்கும் மற்றொரு துக்கத்துக்கும் உள்ள இடைவெளிதான் நிம்மதியா?

உண்மையில் நிம்மதி என்பது ப்ரேமையே! அன்பு - தூய அன்பு அதுவே ப்ரேமை - அதுவே நிம்மதி - ஆனந்தம்.

ஆனந்தம் என்பது ப்ரம்மஸ்வரூபம். உலக ஆனந்தம் என்பதல்ல ப்ரம்மஸ்வரூபவம். இந்த உலகானந்தம் அல்பமானது. அழியக்கூடியது. ஆசைப்படும் சுகத்திற்கு எல்லாம் எல்லை உண்டு. முடிவு உண்டு. இந்த ஆனந்தமே நிலையானது என்ற எண்ணி இறுமாந்திருக்கும்போதே மரணம் என்பது தெரிகிறதே. மரணம் என்று ஒன்று எவருக்கும் நிச்சயம் உண்டு என்று தெரிந்தும் பரிகாரம் தேடுகிற வழியை நாடவில்லையே? இங்கு இவன் என்னதான் ஆனந்தப்பட்டாலும் எதுவும் இவன்கூட வரப்போவதில்லை. சொந்தபந்தங்கள் எதுவும் இவனை வழியனுப்பி வைக்குமே அல்லாது எதுவும் கூடவராது. வரப்போவதில்லை. சொந்தம் பந்தம் எல்லாம் சாவுவரைதான். இந்த மரணமும் எப்போது என்று தெரியாது. இன்றேயோ, நாளையோ அல்லது எப்போது என்பதை எவனும் அறிதியிட்டுக் கூறமுடியாத நிலையில் உலகம் என்பது அநித்யம் என்று புரியவில்லையா?

உலகம் என்பதும் அதில் வாழ்க்கை என்பதும் அநித்யமானது - அசுபமானது - இங்கே யார் எதைச் சேர்த்து வைத்தாலும் அது அவன்கூட வரப்போவதில்லை என்று தெளிந்து தெரிந்து பரிகாரம் என்று ஒன்று தேடி கண்டுபிடிக்க வேண்டுமெனில், அது ப்ரம்மஸ்வரூபம்.

''மாம்பஜஸ்வ'' என்கிறான் கண்ணன் கீதையில். ''என்னை நம்பு - என்னைத்துதி - என்னையே சரணடை - துக்கம் என்னும் ஏணியில் படிப்படியாய் ஏறி என்னை வந்தடை'' என்கிறான் அல்லவா!

Koviloor Digital Library

எவருக்கும் எப்போது மரணம் என்று தெரியாத நிலையில் இன்னும் ஏழு நாட்களில் மரணம் என்று தெரிந்தவன் பரீட்சித்து மகராஜன் மட்டுமே. பாண்டவர்களின் பேரன் அர்ஜுனனின் மகன் வயிற்றுப்பிள்ளை. அபிமன்யுவின் புத்திரன். உலகெலாம் ஒரு குடைகீழ் ஆண்டவன். உலகத்தின் போகங்கள் எல்லாம் தன் காலடியில் கொட்டிக்கிடக்க கோலோச்சியவன் என்றாலும் மரணத்தின் வாயிலில் நின்றபோதும் சிறிதும் கவலைப்படவில்லை. துக்கப்படவில்லை. ஆயின் ஏழுநாட்களில் மரணம் தன்னை நெருங்குமுன் செய்ய வேண்டியது என்ன என்பதை தெளிந்து தெரிந்து கொண்டான். "மாம்பஜஸ்வ" என்று கண்ணன் தேர்தட்டில் நின்று தன் தாத்தா அர்ஜுனனுக்கு கூறியதை தனக்குக் கூறியதாக எடுத்துக்கொண்டான். எனவே அவனுக்கு மரணம் பற்றிய பயம் அறவே இல்லை. ஏழு நாட்களில் செய்யவேண்டியது பாகவதம் கேட்பது என்பதை தெரிந்துகொண்டானே! அடைய வேண்டியது மட்டும் ஸ்ரீக்ருஷ்ண சரணம் என்று மட்டும் தீர்மானம் செய்துகொண்டால் போதும். பின் மரணபயம் என்பது அணுஅளவும் கிடையாது. வேறு விஷயத்தில் கொஞ்சம் ஆசை இருந்தால்கூட மறுஜன்மம் உண்டு. ஆயின் அந்த ஆசை பகவானை அடையும் விஷயத்தில் இருந்துவிட்டாலோ? தாபம் வேண்டும். எப்போது என் ப்ரபுவை அடைவேன் என்ற தாபம் வேண்டும். பூர்ண ஞானநிலை எப்போது வந்து மோக்ஷம் கிடைக்கப்போகிறது. பக்தியின் பூர்ணநிலை எப்போது வந்து மோக்ஷம் கிடைக்கப் போகிறது. ஜட பரதனைப்போல இந்த ஜன்மாவில் இந்த நிலை வருமா? அல்லது எந்த ஜன்மாவில் வரும்? ஒருவன் பூர்ணமானவனாய் ஆனால் மட்டுமே மோக்ஷம். "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்றார் ஸ்வாமி நம்மாழ்வார். எதையும் அனுபவிக்க அனுபவிக்க ஆசை கூடுகிறதே தவிர திருப்தி என்பது இல்லையே! போதுமென்ற மனமில்லையே!

பூர்ணநிலை என்பது மட்டும் ஸத்குருவை சரணடைந்தாலே கிட்டும். பூர்ணநிலை பரிட்சித்து மகராஜனுக்கு சுகமாமுனியை சரணடைந்தாலேயே வந்தது. குருவை சரணடைந்து விட்டால் பகவானுக்கு மோட்சம் தரவேண்டிய கட்டாயம் வந்துவிடுகிறது. குருவினை சரணடைவதன் மூலமாக பகவானே இவனுக்கு ஸத்ஸங்கத்தைக் கொடுத்து, கதாச்ரவணபாக்யம் கொடுத்து, த்வய்தேச யாத்திரையும் கொடுத்து, குருவின் வார்த்தையைக் காப்பாற்ற வேண்டி பூர்ணநிலையும் கொடுத்து, முடிவில் அந்தமில் பேரின்பத்து பரமபதத்தையும் தந்துவிடுகிறான். குருவை பூர்ண சரணாகதி பண்ணிவிட வேண்டும். காஷ்ட சந்யாசிகளுக்குக் கூட கிடைக்கும் அந்திமஸ்மரணம் இவனுக்கும் கிடைத்துவிடும். யோகீஸ்வரர்களான சந்யாசிகள் பகவானை அடைகிறார்களே அதுபோல் சம்சாரிகளான நாம் அடைய முடியுமா எனில் முடியும். குருவினை திடமென நம்பி அவனே கதிஎன்று இருந்தவிட்டால் யோகிகளுடைய ஹ்ருதயத்திலே த்யானத்தினால் ஒளிரும் பகவான் நம் ஹ்ருதயத்திலும் குருவின் க்ருபையால் ஒளிவிடுவான். எதுபோல் எனில் சுகப் ப்ரம்மம் அடைந்த நிலையைப் பரீட்சித்து மகராஜனும் அடைந்ததைப் போல சன்யாசிகளுக்கு மோக்ஷம் என்பது சட்டம். சம்சாரிகளுக்கு மோட்சம் என்பது க்ருபை - கருணை. இந்த க்ருபைக்குக் காரணம் கதாஸ்ரவணம் - ஸத்ஸங்கம் - நாமஸங்கீர்த்தனம். ஸாதுக்களுக்கு

Koviloor Digital Library

ஸாதுஜீவனமே இஷ்டம். ஸாது ஸ்நேகமே இஷ்டம். பகவான் விஷயத்தில் தன்னுடைய தினசரி கடமை அதாவது அனுஷ்டானம், ஸ்ரீமத் பாகவத, ராமாயண, பகவத்கீதா பாராயணம் அல்லது படனம். இயன்ற அளவுக்கு பகவத் பூஜை என்று இருந்துகொண்டு எவரிடமும் பாசமும் இல்லை - த்வேஷமும் இல்லை. ஆயின் எல்லோரிடத்திலும் அன்பு. எல்லா உயிர்களிடத்தும் அன்பு. எனவே மௌனம். அதிகமான பேச்சுக்கள் இல்லை. தேவைக்கு மட்டும் குறைந்த அளவில் வார்த்தைகள் பேசுவது. மாளிகை வாசமானாலும் மரத்தடி வாசமே என்ற மனப்பான்மை பசிக்கு மட்டும் உணவு இதில் ருசிக்கு முக்கியமில்லை என்று நம்மை நாமே பண்ணிக்கொண்டோமென்றால் சுகமே. இதுவே பொது ஜீவனம். துதிக்கத்தக்கவன் இறைவன் மட்டுமே. மற்றும் அவன் உண்மை அடியார்களே. விஷயங்களை சொல்வதில் அது லௌகீகமாகட்டும் அல்லது ஆன்மீகமாகட்டும். கீழே இறங்கிவிடக்கூடாது. உயர்ந்த நிலையில் மனத்தினை வைத்துக்கொள்ள இது ஒரு சிறந்த வழி.

பதிவ்ரதாதர்மம் வேறு பாகவத தர்மம் வேறல்ல. கணவனுக்கும் குழந்தைகளுக்கும் குடும்பத்திற்கும் செய்யும் சேவையும் பகவத்சேவையே. எல்லோரும் எனது சொந்தக்காரர்கள் என்று எண்ணாமல் பகவானின் பக்தர்கள் - குழந்தைகள் என்று எண்ணிவிட்டாலே எப்போதும் குதூகலம்தான்.

எல்லா சாஸ்திரங்களின் ஸாரமானவிஷயம் என்னவெனில் அது பகவத் - பாகவத கைங்கர்யமே. பகவத் விஷயம் இல்லாமல் நொடிப்பொழுதும் பொழுது போகக்கூடாது. எங்கிருந்தபோதும், எதைச்செய்தபோதும் எப்போதும் மனத்தின் அடிஆழத்தில் பகவத்ஸ்மரணம் தானாக ஊற்றெடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். சாப்பிடுவது, இனவிருத்தி செய்வது, உழைப்பது, சம்பாதிப்பது, உறங்குவது எல்லாம் மனிதன் மட்டும் செய்யும் காரியமில்லை. இவை அனைத்தையும் மிருகங்களும், பறவைகளும் செய்கின்றன. பக்தி செய்யவே இந்த ஜன்மம்.

பகவத்குணம் கேட்காதவன் காது - காதல்ல - எலியின் உறைவிடமே.

பகவத் குணம் பேசாத நாக்கு - நாக்கல்ல - தவளை.

தவளையும் இரவுபகல் பாராமல் கத்திக்கொண்டே இருக்கவில்லையா.

பகவானுக்கு - பாகவதர்களுக்கு கைங்கர்யம் செய்யாதவன் கை - மரக்கிளை.

இறைவனைத் தேடிச்சென்று தர்சனம் செய்யாத கண்கள் - மயிலிறகில் இருக்கும் மயில்கண்கள்.

காது அழகானது எனில் அதில் ஹரிகதை மின்னுகிறதே. நாக்கு ருசியானது எனில் அது பகவானைப் பாடுகின்றதே. கை உபயோகமுடைத்தாயிற்று எனின் அது பகவத் கைங்கர்யம் செய்கிறது.

மொத்தத்தில் இந்த சரீரமே பிறவிப்பயனுடைத்து எனில் அது ஸத்குருவின் திருவடித்தாமரையில் நிலம் தோயப்பணிந்து நமஸ்கரித்துவிட்டதே.

தொகுத்தது : K G K

Koviloor Digital Library

உ

ஸ்ரீஹரி

ஸத்குருப்யோ நம :

நாரத பக்தி ஸூத்ரம்

நாரதரே இன்றைய எல்லா இதிகாசபுராணங்களுக்கும் மூலகாரணமானவர் என்று கூறலாம். ஸ்ரீவ்யாஸருக்கும், வால்மீகி மஹரிஷிக்கும் காரண கர்த்தாவாயிருந்து இன்றைய ப்ராசீன கிரந்தங்களை ப்ரவிர்திக்க செய்தவர் என்ற பெருமை நாரதரையே சேரும். ப்ரும்மகுமாரர் என்பதால் மட்டுமின்றி ப்ரம்மாவின் மூலமாக வந்த வேதங்களையும், இதிகாஸங்களையும், புராணங்களையும் நம்மை அனுபவிக்கும்படி செய்தவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. இவர் ஒருவர் இல்லையென்றால் ஞானம், பக்தி ஆகிய இரண்டு செல்வங்களும் நிராதரவாகப் போயிருக்கும். ஒரு ப்ரஹ்லாதன் பக்தமண்டல சக்ரவர்த்தியாக முடி சூட்டிக் கொள்ள அவனை கருவிலே திருவுடையவனாக செய்தவர் இவரே. தந்தை மடியில் ஏறி அமர முடியாத நிலையில் தவம் செய்ய கிளம்பிய பாலகன்துருவனை பகவான் மடியில் ஏற்றி அமர்தியவரும் இவரே. பக்திப்பயிர் தழைக்க வந்த கார்முகிலும் இவரே. அதன் பலனாய் விளைந்த ஞானத்தின் அறுவடையாளரும் இவரே. ஆன்மீக உலகம் இன்று இவர் காற்றை அல்லவோ ஸ்வாசித்துக் கொண்டு ஜீவனோடு இருக்கிறது. நாநயம் சொல்வன்மை என்பதற்கு இவர் அல்லவோ ஆதர்ச புருஷர். நாமஸங்கீர்த்தனத்தின் ஆதிபுருஷரும் இவரே. கையிலே வீணையும் நாவிலே நாராயண நாமமுமாக எல்லா உலகிலும் சஞ்சரித்து நாமஸங்கீர்த்தனத்தின் பெருமையை உலகம் அறியச் செய்தவரும் இவரே. ஸ்வாமி நம்மாழ்வர் கூறும் "வேதமுதல்வனைப் பாடி வீதிகள்தோறும் துள்ளாதார்" என்ற பாசுர வாக்கியங்கள் நாரதரை அல்லவோ மனதில்கொண்டு எழுந்ததாக தெரிகிறது.

இத்தகைய மஹாபுருஷர் ப்ரம்மகுமாரர் எல்லாவற்றையும் தந்தையான ப்ரம்மாவின் மூலம் உலகுக்கு தெளிவாக்கிய பின் எல்லாவற்றிலும் ஸாரமாக, எளிதில் எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்று ஸ்ங்கல்பித்து பக்திசூத்திரம் என்று 84 தனித்தனி வரிகளால் ஆன வாக்கியங்கள் படைத்து இன்று "நாரத பக்தி ஸூத்திரம்" என்று பக்தியின் பெருமையெல்லாம் பரிமளிக்க புனைந்துள்ளார்.

பகவான் கீதையில்

"க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா ஸஸ்வச்சாந்திம் நிகச்சதி
கௌந்தேய ப்ரதிஜாநீஹி நமே பக்த: ப்ரணஸ்யதி" 9-31

Koviloor Digital Library

என்று என்னுடைய பக்தன் நாசமாக மாட்டான் என்று பிரதிக்ஞையிட்டு சொல்கிறார். இங்கே பகவான் கீதையில் சொல்லும் "என்னுடைய பக்தன்" என்பதற்குரிய லக்ஷணங்களையும், பக்திக்குரிய பெருமைகளையும், கீதையில் விரிவாக சொல்லியிருந்தாலும், அதையே சுருக்கமாகவும், அதே நேரத்தில் விளக்கமாகவும் நாரதர் தனது பக்தி ஸூத்திரத்திலே சொல்கிறார். இவ்வாறு பக்தி : பக்தன் என துவங்கி படிப்படியாக பக்தியின் பூர்ண லக்ஷணங்களையும் நாரதபகவான் எவ்வாறு விளக்குகிறார் என்பதை பார்ப்பதுடன், "ஸ்ரீமத் பாகவத மஹாபுராணம்" நாரதரை செய்யும் ஸ்தோத்திரங்களின் மூலம் நாமும் நமஸ்கரிப்போம்.

"நமாமி ஸச்சிதானந்தம் பக்தஸ்வாத்மநிகர்ஷணம்
க்ருஷ்ணம் நவகனஸ்யாமம் பக்தபாபாதிகர்ஷணம்
அவ்யாஜ கருணாஸிந்து த்ருவ ப்ரஹ்லாதஸேவித :
பக்தானாம் ப்ரதமாச்சார்யோ நாரதோமே ப்ரஸீதது.

"ஜயது ஜயது மாயாம் யஸ்ய காயா தவஸ்தே
வசனரசனமேகம் கேவலம் சாகலத்ய
த்ருவபதமபியாதோ யத்க்ருபாதோ த்ருவோயம்
ஸகல குசல பாத்ரம் ப்ரம்மபுத்ரம் நதோஸ்மி!

நாரத பக்தி ஸூத்ரம்

ஸூத்ரம் 1 : அதாதோ பக்திம் வ்யாக்யாஸ்யாம : !!

"இப்பொழுது (ஆகையால்) பக்தியின் ஸ்வரூபங்களை (நிலைகளை) பார்ப்போம்.

பக்தியி(ன்ஸ்வரூபங்களை)னுடைய நிலைகளை இங்கே நாம் தெரிந்து கொள்வோம் என்று தனது ஸூத்திரத்தை நாரதர் துவங்குகிறார்.

"அத" இனி அல்லது இப்பொழுது என்று துவங்குவதால் பல விஷயங்களைப் பற்றி முன்பே பலவும் பேசிக் கொண்டிருந்து இப்பொழுது பக்தியைப் பற்றி என்பதால் நாரதர் இதற்குமுன் "ஞானம், வைராக்யம் போன்ற பலவற்றினைப் பற்றியும் அலசி ஆராய்ந்து முடிவில் எல்லாவற்றிலும் சிறந்ததான "பக்தி"யை மட்டுமே இனிபேசுவோம் என்கிற பாணியில் எடுத்துக் கொள்ளலாம். பக்தியை மட்டுமே சொல்ல விரும்பும் காரணம் ஞானம், வைராக்கியம் என்பன பலவும் பக்தி இல்லாவிடில் பூர்ணமாகாது. இவைகள் எல்லாவற்றுக்கும் ஆதாரமாயும், அந்தமாயும் இருப்பது பக்தியே. எப்படி

Koviloor Digital Library

எல்லா விருக்ஷங்களுக்கும் பூமியானது ஆதாரமோ அதுபோல்தான் பக்தியின் மேல் எழுந்தமாளிகைதான் ஞானம், வைராக்யம் என்பதால் இங்கே அடித்தளமான பக்தியைப் பற்றி மட்டுமே பேச வருகிறார். பக்தி இல்லாத ஞானமோ, வைராக்யமோ பூர்ணமாகாது என்பது மட்டுமல்ல அவைகள் போலியானவை என்பது நாரத ஹ்ருதயம். நமது புராணங்களிலும், இதிகாசங்களிலும் வறட்டு கர்மாக்களினால் மட்டும் ஜெயித்தவர்கள் கடைசியில் பாதை தவறி போய்விட்ட உதாரணங்களை நிறையவே பார்க்கிறோம். பாதை தவறிப் போன பலரும் பகவத் பக்தியால் உன்னத நிலை அடைந்த கதைகளையும் ஏராளமாக பார்க்கிறோம். பக்தி இல்லாத ஞானமோ, பக்தி இல்லாத வைராக்யமோ ஜீவனில்லாத உடல் போன்றது என்பதை இனி வரும் ஸுத்திரங்களினால் விளக்க இருப்பதாலேயே பக்தி விஷயத்தை மட்டும் இங்கே பேசலாம் என்கிறார் நாரதபகவான்.

ஸுத்ரம் 2 : "ஸா த்வஸ்மின் பரம ப்ரேம ரூபா"

பக்தி என்பது என்ன? பகவானிடத்திலே ஒருவனுக்கு ஏற்படும் அனுராகமே பக்தி எனப்படுகிறது. பக்தி என்பது உலகியலில் சாதாரணமாக "இறை வழிபாடு" என்ற அர்த்தத்தினாலேயே எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதை ஸ்ரீமத் பகவத் கீதையும் ஓரளவுக்கு ஒப்புக்கொண்டாலும் அதில் தாரதம்யம் (வித்யாசம்) கற்பிக்கிறது. நாரதரோ என்றால் பகவான்பால் சுத்தமான சுயநலமற்ற ப்ரேமையே (அன்பே) பக்தி என்கிறார். கீதையில் பகவான் ஆர்த்தன், அர்த்தார்த்ரி, ஜிஞ்ஞாஸு, ஞானி என பக்தியின் பல்வேறு நிலைகளை பிரித்துக் காட்டினாலும் இங்கே நாரதர் இவைகளை எல்லாம் ஒரு பொருட்டாக எண்ணாமல், இந்த நிலைகளை தவிர்த்துவிட்டு பூர்ண ப்ரேம ஸ்வரூபமான பக்தியே சிறந்தது என்கிறார். பகவான் என்று நினைத்த மாத்திரத்தில் கண்கள் பனிக்கும் பக்தி, உள்ளம் குழையும் பக்தி, மேனி சிலிர்க்கும் பக்தி, சிந்தனை ஸ்தம்பித்துப் போகும்பக்தி இவைகளே நாரதர் இங்கு கூற வந்த பக்தி லக்ஷணங்கள். "பரமப்ரேமரூபா என்பது மிகச்சிறந்த அன்பின் வடிவமான பக்தி என்று அர்த்தம். சாண்டில்ய மகரிஷியும் தனது பக்தி ஸுத்ரத்தில் "ஸா பராநுபக்தி ஈஸ்வரே" என்கிறார். இறைவன்பால் ஏற்படும் முழுமையான தொடர்பு பக்தி என்ற சொல்லில் உண்டாகிறது. இதற்கு இறைவனோடு இணைந்திருத்தல் என்று பொருள். நாரதரோ பகவானோடு ஐக்கியமாகாது தனித்து நின்று பகவான்பால் மாறாத அன்பு செய்வதே பக்தி என்கிறார்.

ஸுத்ரம் 3 : "அம்ருத ஸ்வரூபா ச"

இந்த அன்புமயமான பக்திதான் அமிர்த ஸ்வரூபமானது என்கிறார் நாரதர். அன்பே அமிர்தம்தான் என்னும்போது அன்பையும், அமிர்தத்தையும்

Koviloor Digital Library

இரண்டு விஷயமாக காட்டவேண்டிய அவசியம் ஏன் என்ற கேள்வி எழுகிறது. சாதாரணமான உலகியல் அன்புதான் அமிர்தம் என்ற பொருள்படுமே தவிர பகவான்பால் உள்ள பக்தியே அமிர்தமாகாது. ஆனால் அமிர்தத்திலும் உயர்ந்த இந்த பக்தியானது அமிர்தமயமானது என்று இங்கே சொல்லப்படுவதற்கு காரணம் நாம் இவ்வாறு பொருள் கொள்ளலாம். எப்படி அமிர்தமானது ஒருவனுக்கு கிடைத்துவிட்டால் அவனுக்கு வேறு எதுவும் அவசியமில்லையோ, மற்றவைகளை அவன் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டானோ அதுபோல பக்திக்கு மேற்பட்டு ஒன்று இருப்பதாக பக்தன் நினைக்காததினால் இப்பக்தியே அவனுக்கு அமிர்தம் ஆகிறது. அதுபோல பக்தியே இவனுக்கு எல்லாவிதத்திலும் ச்ரேஷ்டமானதாக சொல்லப்படுகிறது. அமிர்தம் உண்டவனுக்கு எப்படி பசி, உறக்கம், மூப்பு, தாபம், மரணம் இவைகள் கிடையாதோ அதுபோல உண்மையான ப்ரேம பக்தனுக்கு இவைகளால் ஏற்படும் உபாதை இருக்காது என்பதுபோல் இங்கே அமிர்தம் பக்திக்கு ஈடாக சொல்லப்பட்டது என்றும் கொள்ளலாம் பகவானும் கீதையில்,

"யேது தர்ம்யாம்ருதமிதம் யதோக்தம் பர்யுபாஸதே
ஸ்ரத்தாநா மத்பரமா பக்தாஸ்தேதீவ மேப்ரியா: 12-20

எந்த பக்தன் என்னிடம் நம்பிக்கையோடு என்னையே மேலான கதியாக எண்ணி இந்த பக்தி என்ற தர்மமே உருவான அமிர்தத்தை பயன் கருதாது அனுஷ்டிக்கிறானோ அந்த பக்தனே எனக்கு மிகவும் பிரியமானவன் என்கிறார்.

ஸூத்ரம் 4 : "யல்லப்தா புமான் ஸித்தோ பவதி
அம்ருதோ பவதி த்ருப்தோ பவதி"

இவ்வாறு பக்தியை அம்ருதமாக நினைத்துவிட்ட பக்தன் சித்தனாகி விடுகிறான். அமரத்தன்மை அடைந்தவனாகி விடுகிறான். பூர்ணத்ருப்தி உடையவனாகிவிடுகிறான் என்று மூன்று குணங்களை பக்தன் பால் சேர்க்கிறார் நாரதர். சித்தன், அமரன், பூர்ணத்ருப்தன் எனக்கூறி மூன்றவதாகச் சொன்ன பூர்ண த்ருப்தனாகாமல் இவன் ஸித்தனாகவும், அமரனாகவும் மட்டும் இருந்தால் ஆசாபாசங்களுக்கு உட்பட்ட சாதாரண மனிதகுண விசேஷணங்களையும் பக்தன் ஏற்க வேண்டிவரும். பூர்ண திருப்தி அடைந்த பக்தனே சித்தனிலும், அமரத்வம் எய்தியவனிலும் சிறந்தவன். ஏன்எனில் சித்தனுக்கும் ஆசை உண்டு. அமரனுக்கோ (தேவர்களின் குணமே அமரத்வம்) ஆசையுண்டு என்று சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. இதிகாச புராணங்களே உதாரணம். அப்படி எனில் பூர்ணத்ருப்தன் என்று மட்டுமே சொல்லி இருக்கலாமே? ஏன் சித்தன் அமரன் என்ற நிலையையும்

Koviloor Digital Library

பக்தன் மேல் ஆரோஹணிக்க வேண்டும் என்றால் சித்தனுக்குரிய சக்தியும், அமரனுக்குரிய சக்தியும் பக்தனுக்கு தானாகவே வந்து கைகூடும். ஆனால் பக்தன் இவைகளில் மதிமயங்கி விடாமல் பூர்ண த்ருப்தனாய் இருக்கிறான் என்ற அதி விசேஷத்வம் சொல்லவேண்டியே நாரதர் இப்படி சூத்திரம் பண்ணினார் என்று எண்ண வேண்டியதாய் இருக்கிறது. பக்தனுக்கு எப்பேற்பட்ட பௌருஷங்கள் வந்தாலும் அவன் நிலை தடுமாறாமல் பக்தி ஒன்றினாலேயே பூர்ணத்ருப்தனாய் இருப்பான். இதையே ஸ்ரீமத் பாகவதம்,

"விஷயான் த்யாயத் சித்தம் விஷயேஷீ விஷஜ்ஜதே
மமானு ஸ்மரத சித்தம் மைய்யேவ ப்ரவிலீயதே"

என்கிறது.

தான் வறுமையினால் கஷ்டப்படுவதாக எண்ணுகிறாள். துகாராமின் மனைவி ஆவலி என்ற ஜீஜாயி. ஸந்த்துகாராமோ பூர்ணத்ருப்தனாய் இருக்கிறார். ஒருதேவிஉபாஸகரினால் தனக்கு தரப்பட்ட ஸ்பர்ஸகல்லினால் தொடப்பட்ட எல்லாம் தங்கமாகி விடுவதால் வாழ்க்கை வசதிகள் அதிகமாகிறது. இதைக் கவனித்த ஸந்த்துகாராம் மனைவியிடம் விபரம் கேட்க, ஸபர்ஸ கல்லை வாங்கி தேஹு நதியில் தூக்கி எறிந்து விடுகிறார். ஸபர்ஸ கல்லை கொடுத்தவர் வந்து கேட்க தேஹு நதியிலிருந்து ஒரு சாதாரண கல்லை எடுத்து, ஸந்த்துகாராம் அவரிடம் தர, அதுவே ஸபர்ஸ கல்லாக மாறி விடுகிறது. சாதாரண கல்லை ஸ்பர்ஸ கல்லாக்கும் சித்து தன்னிடம் கைவரப்பெற்றும், அதில் மயங்காமல் எளிமையாக வாழ்ந்து பக்தியின் பெருமை ஒன்றினாலே பிரகாசிக்கும் ஸந்த்துகாராம் போன்ற மஹான்களே இந்த ஸூத்திரத்திற்கு உதாரணங்கள்.

ஸூத்ரம் 5 : "யத் ப்ராப்ய நகிஞ்சித் வாஞ்சதி நசோசதி
நத் வேஷ்டி நரமதே நோத்ஸாஹீ பவதி"

இவ்விதம் பக்தி ஒன்றினாலேயே நித்ய த்ருப்தனாகிவிட்ட பக்தன் வேறு எதற்கு ஆசைப்படப்போகிறான். யாரை வெறுக்கப் போகிறான். எதைப் பற்றி வருத்தப்படப்போகிறான். எதைக் கண்டு பயப்படப்போகிறான். அல்லது எதைக் கண்டு உத்ஸாஹப்படப் போகிறான். எனவே ஆசை அற்றவனாக யாரிடமும் துவேஷமற்றவனாக, எதிலும் பற்றற்றவனாக இவன் ஸ்வபாவிகமாகவே ஆகிவிடுகிறான். இவனது ஸர்வலட்சியமான பக்தி இவனுக்கு கைகூடிவிட்டதால் மற்ற விஷயங்களிலான இவனது பிடிகள் இவனது ப்ரயாசை இல்லாமலேயே தானாகவே தளர்ந்து இவனைவிட்டு நீங்கிவிடுகிறது. இதையே பகவான் கீதையில்,

"யோ நஹ்ருஷ்யதி நத்வேஷ்டி நஸோசதி நகாங்க்ஷதி 12-17
சுபா சுப பரித்யாகி பக்திமாந்ய : ஸ மேப்ரிய:" என்கிறார்.

Koviloor Digital Library

எவர் ஒருபோதும் மகிழ்வதில்லையோ, வெறுப்பதில்லையோ, துயரப்படுவதில்லையோ, நல்லதும் தீயதுமான செயல்களை துறந்தவனோ அவனே என்னுடைய ப்ரியபக்தன் என்கிறார்.

ஸந்த்துகாராமிடம் ஒரு தனிகர் தட்டுநிறைய வைரக்கற்களை வைத்து சமர்ப்பிக்க ஸந்த்துகாராம் "ஸன்மான கோமாம்ஸ ஸமான" என நிராகரிக்கிறார். தனிகர் தனக்காக எடுத்துக்கொண்டுதான் தீரவேண்டும் என்று கெஞ்ச, உனக்காக நான் கோமாம்ஸம் சாப்பிட முடியுமா? இந்த தனம் அதற்கு சமானமானது அல்லவா என்று நிராகரித்து விட்டநிலையில் கொண்டுவந்த இந்த சன்மானத்தை என்னதான் செய்வது என்று தனிகர் கேட்க ஸந்த்துகாராம் இதோ இந்த தேஹூநதியில் கொட்டிவிடு என்று சொல்ல தனிகனும் கொட்டிவிட்டானே.

விஜயநகர சக்ரவர்த்தி கிருஷ்ணதேவராயர் ஸ்ரீவேதாந்த தேசிகரை உஞ்சவ்ருத்தி எடுத்து சிரமப்பட வேண்டாம், என் அரசபையில் ஆஸ்தான கவிஞராக வீற்றிருங்கள் என்று வினயத்தோடு ப்ரார்த்தித்து அழைத்துவர பல்லாக்கும், மரியாதையும் அனுப்ப இங்கே காஞ்சியில் வரதராஜன் என்ற பொக்கிஷம் எனக்கு இருக்கும்போது ராஜபதவி என்ன உயர்வா என சொல்லி மறுத்துவிட்ட ஸ்ரீவேதாந்ததேசிகர்.

தஞ்சாவூர் மஹாராஜ ஸ்ரீத்யாகராஜஸ்வாமிகளை தன் அரசவைக் கவிஞராக இருங்கள், இந்த கஷ்ட ஜீவனம் வேண்டாம் என்று அழைக்க இவர் தன் ஸ்வாமியான ராமசந்திரப்ரபுவிடமே "நிதிஸால ஸுகமா, ராம ஸன்னதி ஸேவ ஸுகமா" என்று கேட்டு அரசனின் வேண்டுகோளை நிராகரித்ததும், இந்த சரித்திரங்களெல்லாம் பூர்ணபக்தியினால் ப்ரேமிகளாகி விட்டவர்கள் எதைக் கண்டும் ஆசைப்படமாட்டார்கள் என்பதை தெரிவிக்கவில்லையா?

ஏகநாத் ஸ்வாமிகளை அவமானப்படுத்தும் நோக்கத்துடன் துஷ்டர்கள் அவருடைய தலையில் திட்டமிட்டு மறுபடியும் மறுபடியும் எச்சிலை உமிழ்ந்தபோதும், நீங்கள் என் தேகத்தைதான் அழுக்குப்படுத்துகிறீர்கள். இதை கழுவிக் கொண்டு சுத்தம் செய்து கொண்டுவிடலாம் ஆனால் நான் உங்கள் மேல்கோபப்பட்டு என் ஹ்ருதயத்தை அழுக்குப்படுத்திக் கொண்டுவிட்டால் எதைக்கொண்டு என்னால் கழுவிக் கொள்ள முடியும் என்று துஷ்டர்களிடமே கருணை செய்த மகான் ஏகநாதர்.

ஹரிதாஸை அபக்யாதி செய்ய வேண்டி துஷ்டன் ஒருவன் ஒரு வேசியை ஸ்வாமி ஹரிதாஸிடம் அனுப்புகிறான். அகண்ட நாமஸங்கீர்த்தனித்தில் திளைத்திருக்கும் ஸ்வாமி ஹரிதாஸை தனியாக சந்திக்க வேசியினால் முடியவில்லை. ஆனால் ஹரிதாஸின் அகண்ட

ஸங்கீர்த்தனம் வேசிக்கு சித்தசுத்தியைக் கொடுத்து ஹரிதாஸிடம் மன்னிப்பும் பெற்றாள்.

இணக்கமில்லாத மனைவியுடன் இல்லறம் நடத்திக் கொண்டு குடும்ப வாழ்க்கையிலே இருந்துகொண்டே எதிலும் பற்றற்று இருந்த ஸந்த்துகாராம். உயர்ந்த பட்டாடைகள், ஜவ்வாது, அத்தர், பல்லக்கிலே பயணம் என போகி போல வாழ்க்கையில் காணப்பட்டாலும், இவற்றிலும் உலகத்திலும் ஒட்டாமலேயே இருந்த ஸந்த்ஸமர்த்த ராமதாஸின் சிஷ்யர் ரங்கநாத்கோஸ்வாமி, போகவிலாஸங்களில் மூழ்கித் திளைத்தவர் போல் வெளி உலகினில் காணப்பட்டாலும், பூர்ணப்ரேமியாக இருந்த மஹாப்ரபு க்ருஷ்ண சைத்ன்யரின் சிஷ்யர் புண்டரீக வித்யாநிதி.

இவர்களெல்லாம் போக ஸாம்ராஜ்யத்துக்குள் இருந்து கொண்டே எப்பேர்ப்பட்ட பக்தர்களாயிருந்து பற்றற்ற வாழ்க்கையை வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

இதையே பகவானும் ஸ்ரீமத்பாகவதத்தில்,

"நிரபேக்ஷம் முனிம் ஸாந்தம் நிர்வைரம் ஸமதர்சனம்
அனுவ்ரஜாம்யஹம் நித்யம் பூரயேத்மாங்த்ரரேணுபி"

"எதிலும் விருப்பமற்றவனும் துவேஷ சிந்தனை
அற்றவனும், சாந்தகுண ஸம்பன்னனும்
எதிலும் ஸமதர்சனம் செய்பவனும் எப்போதும்
என்னையுமே பஜிப்பவனுமாகிய பக்தன்"

என்று இந்த நாரத ஸூத்திரத்திற்கு லக்ஷணம் சொல்வதுபோல் கூறுகிறது.

ஸூத்ரம் 6 : "யஜ்ஞாத்வா மத்தோ பவதி ஸ்தப்தோ பவதி
ஆத்மா ராமோ பவதி"

பக்தனின் அக லக்ஷணங்களை முந்திய ஸூத்ரத்தில் அனுபவித்த நாரத பகவான் பக்தனின் புறத்தோற்ற லக்ஷணங்களையும் உலகுக்கு உணர்த்துவான்போல் இந்த ஸூத்ரத்தில் வர்ணிக்கிறார்.

இவன் உன்மத்தமானவனின் நிலையிலேயே இருப்பான். தன்னை மறந்தவனாக இருப்பான். தோற்றத்தில் ஒரு பைத்தியக்காரனைப்போல் இருப்பான் ஆனால் அமைதியே உருவானவனாக இருப்பான். தன் உள்ளுக்குள்ளேயே பகவானை எப்போதும் தர்சனம் செய்து கொண்டே

Koviloor Digital Library

இருக்கும், ஆத்மாராமனாக இருப்பான். ஆத்ம சுகத்திலேயே ஆழ்ந்து போய் லோகப் பிரஞ்ஞையே இல்லாதவனாக இருப்பான் என்கிறார் நாரதர்.

பராபக்தியினால் பக்தன் முற்றிலும் பித்தனாய் விடுகிறான். இரவு பகல் எந்நேரமும் பகவானைப் பாடுவதிலும், அவன் பெருமைகளைக் கேட்பதுமாகவே பொழுதைக் கழிப்பான். எப்போதும் தெய்வீக சிந்தனைகளிலேயே இவன் மூழ்கி விடுவதால் வெளிஉலக எண்ணமே இவனுக்கில்லை. சில சமயம் சிரிக்கிறான். சிலசமயம் அழுகிறான். சில சமயம் கத்துகிறான். மற்றொரு சமயம் உரத்த குரலில் பாடுகிறான். மெய்மறந்து ஆனந்தமாய் ஆடுகிறான். பரவசத்தால் நடுங்குகிறான். சில நேரங்களில் எதுவும் பேசாமல் கற்சிலைபோல் அமர்ந்து விடுகிறான்.

ஸ்ரீமத் பாகவதத்தில் பக்தப்ரஹ்லாதனின் நிலையினை விளக்க வந்த ஸ்ரீசுகர்.

க்வசித் ருததிவைகுண்ட சிந்தஸபலசேதன!
க்வசித் தஸதி தத்சிந்தா ஹ்லாத உத்காயதி க்வசித்!!
நததி க்வசிதுத்கண்டோ விலஜ்ஜோ ந்ருத்யதி க்வசித்!
க்வசித் தத்பாவநாயுக்தஸ் தன்மயோ அநுசகாரஹ!!
க்வசித் உத்புல கஸ்தூஷ்ணீமாஸ்தே ஸம்ஸ்பர்ஸ நிர்வ்ருத:!
அஸ்பந்த ப்ரணாயாநந்த ஸலிலாமீலிதேக்ஷண: !!

என்கிறார். ப்ரஹ்லாதன் பகவானைப் பற்றிய சிந்தனையால் ஒரு சமயம் அழுவான். ஒரு சமயம் சிரிப்பான். ஒரு சமயம் உரக்கப்பாடுவான். ஒரு சமயம் கதறுவான். வெட்கமின்றிக் கூத்தாடுவான். ஒரு சமயம் தன்னை க்ருஷ்ணனாகவே பாவித்துக் கொண்டு அவனுடைய லீலைகளைச் செய்வான். மற்றொரு சமயம் உணர்வற்றவனாய், புளகாங்கிதனாய், ஆனந்த பரவசனாய் மூடிய கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் அருவியாய் கொட்ட அசைவின்றி மௌனமாய் இருப்பான்.

இந்நிலையினையே குலசேகர ஆழ்வாரும் வர்ணிக்கிறார்.

பேயரே எனக்கு யாவரும் யானுமோர்
பேயனே எவர்க்கும் இது பேசி என்
ஆயனே அரங்கா என்றழைக்கின்றேன்
பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே

ஸ்வாமி நம்மாழ்வார் திருக்குருகூர் த்வ்யதேசத்தில் ஆதிப்பிரான் கோவிலின் ஸ்தல விருக்ஷமான புளியமரத்தில் அதில் உள்ள பொந்துக்குள் பத்மாஸனமிட்டு அமர்ந்திருக்கிறார். என்ன ஆச்சர்யம்! மலமூத்ர விஸர்ஜனம் இல்லை. அன்ன ஆகாரம் ஏதும் இல்லை! கண்ணை மூடிய ஆழ்ந்த

Koviloor Digital Library

த்யானநிலை யாருடனும் பேசுவதில்லை. பதினாறு ஆண்டுகள் இப்படியே இருக்கிறார். செந்தாமரையின் இதழ்போல நீண்ட தீர்க்கமான நயனங்கள். செண்பக மொட்டுப் போன்ற நாசி மாதுளைப்பூவின் இதழ்கள் போல சிவந்த அதரங்கள். ஹ்ருதயத்துள்ளே எப்போதும் உணர்ந்து மகிழும் பகவத் தியானத்தாலே ஏற்பட்ட மந்தஹாஸம். உலகப் ப்ரஞ்ஞையே இல்லாத நிலை. இந்த தோற்றமே நாரதர் கூறிய மேலேகண்ட லக்ஷணங்களுக்கு உதாரணம். இவரது ஹ்ருதயத்திலே அல்லவா பகவான் நித்ய நிவாஸியாகிவிட்டான். இவரை உணர்ந்த மதுரகவி ஆழ்வார் பதினாறு ஆண்டுகள் கழித்து வரும்வரை இவரது ஸ்வரூபம் யாரால் புரிந்து கொள்ளப்பட்டது. பைத்தியம் என்றும், ஜடம் என்றும், பித்தன் என்றும்தான் வெளிஉலகம் எண்ணி இருந்திருக்குமேயன்றி வேறு என்ன?

ஸ்ரீமத் பாகவத மஹாபுராணத்தில் ஜடபரதரை ரகூகுணன் சந்திக்கும்வரை இவரை எல்லோரும் பைத்தியம் என்றல்லா பரிஹசித்தனர். காளிகோவிலில் பலி கொடுக்க அழைத்துச் சென்றனர். பல்லக்கு சுமக்க வைத்தனர்.

ஸதாசிவ பிரம்மம் என்னும் யதிச்ரேஷ்டரை ஆடையற்ற நிர்வாண பைத்தியம் என்று எண்ணி அல்லவோ ஒரு மிலேச்சன் இவரது கையை துண்டித்து விட்டான். பல்லக்கு சுமந்ததினாலோ, கை துண்டிக்கப்பட்டதாலோ இவர்களுக்கு ஏதும் உபாதை ஏற்படவில்லையே! பல்லக்கு சுமக்க செய்த ரகூகுணனும், கையை துண்டித்த மிலேச்சனுமல்லவா இவர்களது பெருமை உணர்ந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டனர். எந்தவித அபிலாக்ஷை இல்லாததினால் யாருடனும் பேசாத உன்மத்தநிலையும், தன் நினைவே தனக்கு இல்லாமல் ஆத்மஸ்வரூபத்திலேயே நிலைபெற்று விட்டதால் தன்னைப் பற்றிய மறதியும், இவைகளால் ஏற்பட்ட பொலிவும், இவர்கள் ஹ்ருதயத்திலே நித்யவாஸம் செய்யும் பகவத்தர்சனத்தினால் ஆத்மாராமனாக அந்த ஸுகத்திலேயே ஆழ்ந்துவிடும் தன்மையுமே இங்கே பக்தனுக்கு லக்ஷணமாக சொல்லப்பட்டது.

ஸுத்ரம் 7 : "ஸா ந காமயமானா நிரோத ரூபத்வாத்"!

ஆசைகளை தடுக்கக்கூடிய நிரோத ரூபனாகபக்தன் இருப்பான் என்கிறார் நாரதர். இங்கே "நிரோதம்" என்ற வார்த்தைக்கு ஆசைகளை தடுக்கக்கூடியது எனப்பொருள் கொள்ளலாம். வெள்ளத்தை எப்படி அணையானது கட்டுப்படுத்திவிடுகிறதோ அதுபோல ஆசை வெள்ளத்தை இவனிடம் ஸ்வாபாவிகமாகவே உள்ள நிரோதமானது இல்லை என்று ஆக்கிவிடுகிறது. ஆசை என்னும் வியாதியை அணுகவிடாமலேயே தடுக்கும்

Koviloor Digital Library

நிரோதம் என்னும் தன்மை இவனது பூர்ணப்ரேம பக்தியினால் இவனிடம் ஏற்பட்டுவிட்டதால் பக்தன் ஆசைகளுக்கு அடிமையாகி ஆசையால் நாசமாக மாட்டான்.

முகலாய மன்னன் ஔரங்கசீபின் பிடியிலிருந்து தன்னுடைய மராட்டிய சாம்ராஜ்யத்தை விடுவித்து தனது குருவான ஸந்த்ஸமர்த்த ராமதாஸரின் காலடியில் சமர்பித்து தாங்களே பட்டம் சூட்டிக் கொண்டு இந்த ராஜ்யத்தை ஆளவேண்டும் என பிரார்த்திக்கும் சிவாஜி. அதை அங்கீகரிக்காது சிவாஜியையே மராட்டிய சக்ரவர்த்தியாக மகுடாபிஷேகம் செய்வித்த ஸமர்த்தர். இந்த இருவரின் நிலையுமே இங்கே இந்த ஸுத்ரத்துக்கு ஒப்பிடலாம். நிரோதம் என்பது ஸமர்த்தருக்கு மட்டுமல்ல சிவாஜிக்குமே இருந்தது என்பதைக் காணும்போது ஸமர்த்தரைவிட சிவாஜியின் பக்தியல்லவா பரிணமிக்கிறது. ஸமர்த்தரோ ஏககௌபீனமே தரித்த காஷ்ட ஸன்யாசி என்பதால் நிரோதம் என்பது இவரது ஸாம்ராஜ்ய ஆசையை வென்றுவிட்டது என்பதைக் காட்டிலும் க்ஷத்ரியனான போர்வீரனான சிவாஜியை இந்த ராஜ்ய ஆசை பற்றவில்லை என்பதுதான் ஆச்சர்யம். இவர்களைப் போன்றவர்களை நினைவு கூறவே அமைந்துபோல் இந்த ஸுத்ரம்.

ஸுத்ரம் 8 : "நிரோதஸ்து லோகவேத வ்யாபார ந்யாஸ:"

"லோக வேதவ்யாபார" உலகியலில் காரியங்கள் என்பது (செயல்பாடு) இரண்டு வகைப்படுகிறது. ஒன்று லௌகிகம். மற்றது வைதீகம். லௌகிகமான நம் குடும்ப, உலக காரியங்கள் நம் இஷ்டபூர்வமானவை. வைதீகமான காரியங்கள் கர்மமயமானவை. லௌகிக காரியங்களை விடுவதுபோல் வைதீக காரியங்களை ஒரு பக்தன் த்யாகம் செய்துவிடமுடியாது. இவனாக வைதிக காரியங்களை தியாகம் செய்யக்கூடாதே தவிர அதுவாக தியாகம் செய்து கொள்ள செய்துவிடும் என்பது பக்தன் விஷயத்தில் தவறு இல்லை. கர்மபூர்வமான காரியங்களைக் கூட பக்தனின் "நிரோதமானது" தடுத்துவிடும் என்பது இங்கே நாரதர் அபிப்ராயம். லௌகிகமான மற்றும் வைதீகமான காரியங்களைக் கூட மேலே சொல்லப்பட்ட பக்தனின் "நிரோத" நிலையானது நிறுத்திவிடும். நான் பக்தன் என்ற எண்ணத்தில் ஒருவன் மனமறிந்து குடும்பத்தை காப்பாற்ற தவறும் லௌகிககாரியமும், வைதீகமான காரியமும் தவறானது. கண்டிக்கத்தக்கது. ஆனால் பக்தனின் உன்மாத நிலையில் இவைகள் எல்லாம் மறந்துபோகும்போதும், இவைகளில் மனம் பிரவர்திக்காத நிலையும் இங்கே பக்தனுக்கு மேலும் பெருமையையே சேர்க்கும்.

Koviloor Digital Library

இதையே பகவான் கீதையில்,

"யஸ் த்வாத்மரதிரேவ் ஸ்யாத் ஆத்மத்ருப்தஸ்ச மானவ:
ஆத்மந்யேவ ச ஸந்துஷ்டஸ் தஸ்யகார்யம் நவித்யதே:" 3-17

எவர் ஆத்மாவிலேயே இன்புற்றிருப்பவனாகவும், ஆத்மாவிலேயே த்ருப்தி கொண்டவனாகவும், ஆத்மாவிலேயே மகிழ்பவனாகவும் இருக்கிறானோ அவனுக்கு செய்யவேண்டிய காரியம் எதுவுமில்லை என்கிறார்.

ஸேனாயி பரமபக்தன். எப்போதும் பகவத்யான பராயணனாகவே இருப்பவன். முகமதிய மன்னனுக்கு சிகையலங்காரம் செய்யும் நாவிதர் தொழில். தினமும் மன்னனுக்கு சிகையலங்காரம் செய்ய வேண்டியது இவனுக்கு கடமை. ஒருநாள் பண்டரீபுரம் யாத்திரைசெல்லும் பக்த கோஷ்டியின் நாமஸங்கீர்த்தனம் இவனது காதுகளில் அமுதமாகப்பாய ஓடிச்சென்று அவர்கள் தாள் பணிந்து எல்லா பக்தர்களையும் தன்வீட்டிற்கே அழைத்துவந்து ஸங்கீர்த்தனத்தில் ஈடுபட, செய்யவேண்டிய கடமையும் மறந்துபோயிற்று. நேரத்திற்கு கடமையாற்ற வராத ஸேனாயிடம் கோபப்பட்ட அரசன் காவலர்களை அனுப்பி அவனை கைது பண்ணி அழைத்து வர ஆணையிடுகிறான். காவலர்கள் சென்ற சிறிதுநேரத்திற்கெல்லாம் ஸேனாயி பெட்டியுடன் வந்துவிடவே கோபம் தணிந்த மன்னனுக்கு சிகையலங்காரம் செய்கிறான் ஸேனாயி. ஸேனாயியின் கைப்பட்ட இடமெல்லாம் அந்த முகலாய மன்னனுக்கு சிலிர்க்கிறது. இனம் தெரியாத ஒரு அபூர்வ ஆனந்தம் மன்னனுக்கு ஏற்படுகிறது. தனது சிகையலங்காரத்தை கண்ணாடியில் கண்ட மன்னன் ஆச்சர்யத்தில் மூழ்கிவிடுகிறான். "ஸேனாயி இதுஎன்ன கைவண்ணம்! இவ்வளவு நாளும் எங்கு ஒளித்து வைத்திருந்தாய்! என வினவ, விடைபெற்று சென்றுவிட்டான் ஸேனாயி. சற்று நேரத்திற்கெல்லாம் காவலர்களால் கைது செய்யப்பட்ட ஸேனாயி விலங்கிடப்பட்ட கையுடன் அழைத்து வரப்படவே மன்னன் மிகவும் அதிர்ந்து காவலர்களைக் கடிந்து, கைவிலங்குகளை கழற்றி ஸேனாயியிடம் மறுபடியும் அவனது கைவண்ணத்தை புகழ ஆச்சர்யப்பட்ட ஸேனாயி "மகராஜ், நான் வரவே இல்லையே! இப்பொழுது தானே வருகிறேன்" என்று கூற, மன்னன் இல்லை! இல்லை! நீதான் வந்தாய். என்னைப் பார்! என்ன அற்புத கலைஞன் நீ! என்னை எவ்வளவு அழகுப்படுத்தி விட்டாய் என புகழ,

ஸேனாயி புரிந்து கொண்டுவிட்டான். பகவானே நான் உன்னை நினைந்து உருகி நின்ற நேரத்தில் நீ என்னை நினைந்து இங்கே வந்தாயா! எனக்காக இந்த தொழிலை செய்தாயா? எனில் நான் இனி எவருக்கும் சேவகம் செய்யேன். உனக்கே ஆட்செய்வேன் என்று நெக்குருகி கதற,

Koviloor Digital Library

அந்த முகமதிய மன்னனும் புரிந்துகொண்டு ஸேனாயிக்கு ராஜமான்யம் தந்து கொண்டாடியதும்,

இன்று தகப்பனாருக்கு ஸ்ரார்த்தம். நெய் வாங்க கடைக்கு வந்தார் நரஸிம்மமேதா. ஸ்ரீப்ருந்தாவனம் செல்லும் பக்தகோஷ்டியின் நாமஸங்கீர்த்தனத்தில் ஈடுபட்டார். தன்னை மறந்தார். தன்நிலை மறந்தார். நெய்யையும், ஸ்ரார்த்தையும் மறந்தார். பக்தகோஷ்டியுடனே ஸ்ரீப்ருந்தாவனமே சென்றுவிட்டார்.

ஸ்ரீப்ருந்தாவனத்தில் தங்கி கிருஷ்ணலீலா ஸ்தலங்களை தர்சனம் செய்து புண்ணிய பூமியின் புழுதியில் புரண்டு அழுது வெகுநாட்களுக்கு பின்பு அந்த பக்த கோஷ்டியுடனேயே திரும்பி தனது ஊருக்கும் வந்தார். நினைவு வந்தது. "ஐயோ! நான் எப்பேர்ப்பட்ட பாவி! ப்த்ரு ஸ்ரார்த்தம் மறந்துபோனேனே" என அரற்றிக்கொண்டே வீடு சென்று தனது பத்தினியிடம் "அம்மா! நான் பாவி! ஸ்ரார்த்தத்தை மறந்துபோனேனே! நீ என்ன செய்தாய்! வந்த ப்ராம்மணர்களுக்கு அன்னமாவது இட்டாயா" என கதறி அழ அவருடைய தர்மபத்தினி "என்ன இது நீங்கள் ஸ்ரார்த்தம் எல்லாம் செய்து முடித்த பின்புதானே நான் ஸ்ரீப்ருந்தாவனம் போய் வருகிறேன். திரும்பி வர நாட்கள் ஆகும் என்று கூறிப் போனீரே என பதில் தர வியந்துபோன நரஸிம்மமேதா. "புரிந்துவிட்டது ஹா! நான் ஸ்ரீக்ருஷ்ண தர்சனத்திற்கு ஸ்ரீப்ருந்தாவனம் போக அந்த க்ருஷ்ணன் இங்கு வந்தானா? எனக்காக என்ப்த்ருகளுக்கு ஸ்ரார்த்தம் செய்தானா! உனக்கும் தரிசனம் தந்தானா! நீயே பாக்யவதி" என கண்ணீர் மல்க கதறி அழுததும்,

இந்த இரண்டு பக்தர்களின் நிலையுமே இந்த ஸூத்ரத்திற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். இந்நிலையிலுள்ள பக்தர்களை லௌகிக, வைதீக கர்மாக்கள் கட்டுப்படுத்தாது. இதற்கு ப்ரமாணம் பகவானே இங்கு ஸேனாயிக்காக க்ஷவரம் செய்ததும் நரஸிம்ம மேதாவிற்காக ஸ்ரார்த்தம் செய்ததும்,

ஸ்ரீமத் பாகவதத்திலும் ப்ரேமையே வடிவமான கோபிகைகள் ஸ்ரீக்ருஷ்ணனிடம்

"சித்தம் ஸுஹேன பவதாப ஹ்ருதம் க்ருஹேஷு
யந்நிர் விஸத்யுத கராவபி க்ருஹ்ய க்ருத்யே!
பாதௌ பதம் நசலதஸ்தவ பாதமூலாத்
யாமகதம் வ்ரஜமதோ கரவாம கிம்வா!!

ஹே ப்ரியப்ரபுவே! எங்கள் குடும்பத்துடன் அன்புடன் கட்டுப்பட்ட எங்கள் மனம் உன்னால் திருடப்பட்டுவிட்டதே. வீட்டு வேலைகளையே செய்து

Koviloor Digital Library

பழக்கப்பட்ட எங்கள் கைகள் இப்பொழுது உன்னை நினைத்து ஸ்தம்பித்து விட்டனவே. எங்கள் கால்கள் வேறு எங்கும் போக மறுத்து உன்னையே தேடி வருகின்றனவே! நாங்கள் எப்படி வீடு திரும்புவோம் வேறு என்னதான் செய்வோம்.

என்கிற கோபி நிலையுமே இந்த ஸூத்ரத்தின் ஆதர்ச உதாரணங்கள்.

ஸூத்ரம் 9 : "தஸ்மின் அநன்யதா தத்விரோதிஷ்(உ)தாஸீனதா ச"

மனமானது பகவத் சிந்தனையிலேயே ஒன்றுபட்டு ஒடுங்கிவிட்டதினால் இதற்கு அன்னியமான விஷயங்களிலிருந்து விலகி இருப்பதும், ஒரு பக்தனுக்கு நிரோதம் என்னும் சக்தியால் ஸம்பவித்து விடுகிறது. பகவத் சிந்தனைகளுக்கு இடையூறாக உள்ள எல்லா விஷயங்களுமே இவனுக்கு விஷமாகிப் போனபிறகு இவன் வேறு எந்த விஷயத்தில் தன்னை சம்மந்தப்படுத்திக் கொள்ளப்போகிறான். இவன் இவ்வாறு சம்மந்தப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதாலேயே இவனது பக்தியானது புஷ்டியடைகிறது. இந்த விலகிப் போதல் அல்லது ஸம்மந்தப்படுத்திக் கொள்ளாமல் இருப்பது என்பது இவனாக ஏற்படுத்திக் கொள்ளாமல் தானாக அமைவதாலேயே இவனது பக்தியும் சத்தியமாகிறது. இப்படி பிற விஷயங்கள் என்பது ஏதோ வெளி உலக விஷயங்கள் என்றில்லாமல் இவனது குடும்ப விஷயங்களுமே ஆகிறது என்பதுதான் ஆச்சர்யம். தர்மத்துக்கு விரோதமில்லாத குடும்பஸ்தனாய் இவன் இருந்து கொண்டிருக்கும்போதேகூட இவனது மனமானது இவனது குடும்பத்திலிருந்து வெகுதூரம் விலகிப்போய்விடும் என்கிறார் நாரதர்.

தனது இளம்வயதிலேயே பாண்டுரங்கனை ப்ரத்யக்ஷயமாக பார்த்துவிட்டபோதும் கூட ஸந்த்நாமதேவர் தனது பாண்டுரங்க தியானத்துக்கு குடும்பமானது பாரம் என்று எண்ணுகிறார். இத்தனைக்கும் இவரது தர்மபத்தினியான ராஜாயி பரமபக்தை பல அபங்கங்கள் இவளும் பாடியிருக்கிறாள். அப்படி இருந்தும் குடும்ப ஸம்பந்தமானது ஸந்த்நாமதேவருக்கு வேம்பாக கசக்கிறது. வீட்டைத்துறந்து எப்போதும் விட்டலின் ஸன்னதியிலே இருந்து வர துவங்கினார். அப்போதும் ஆகார, அனுஷ்டானம் செய்யசொல்லி மனைவி அங்கு வந்து அன்புடன் வேண்டுவது கூட இடையூறு என எண்ணி சந்திரபாகா நதியின் கரையில் யாரும் எளிதில் பார்க்க முடியாத இடத்தில் இருந்து கொண்டு விட்டலனை த்யானம் செய்கிறார். அங்கும் ரொட்டியை எடுத்துக்கொண்டு மனைவி வந்துவிடுகிறாள். தனது நாமஜபம் பூர்த்தியானதும் ஆகாரம் எடுத்துக் கொள்வதாகவும், அதற்கு சிறிதுநேரம் ஆகும் என்றும், அதுவரை குழந்தைகளை வீட்டில் தவிக்கவிட்டு இங்கு காத்திருக்க வேண்டாம் என்று சொல்லி மனைவியை

Koviloor Digital Library

திரும்ப அனுப்பிவிட்டு விட்டல த்யானத்தில் மக்னமாகி தன்நிலை மறந்து அமர்ந்து இருக்கிறார் ஸந்த்நாமதேவர். சற்றுநேரத்துக்கெல்லாம் நாய் ஒன்று இவர் அருகில் வந்து அங்கு வைக்கப்பட்டிருந்த ரொட்டியை கவ்வியது. கண்விழித்து பார்த்த ஸந்த்நாமதேவர், நாயின் பால் கருணை வர "அப்பனே வரட்டு ரொட்டியை தின்காதே இதோ நெய் போடுகிறேன்" என நெய் கிண்ணத்தை கையில் எடுக்க, நாய் பயந்து கொண்டு ஓட, ஸந்த்நாமதேவர் நாயினை துரத்திக்கொண்டே வெகுதூரம் சென்று ஒரு இடத்தில் நாயை பிடித்து தன்கையால் அணைத்துக் கொண்டு நாய் தன் வாயில் கௌவிக் கொண்டிருக்கும் ரொட்டியில் நெய் ஊற்றுகிறார். நன்றியுடன் நாய் இவரது முகத்தையே பார்க்க, இவர் நாய் முகத்தையே பார்க்க, நாய் மறைந்து அங்கு சாக்ஷாத் பாண்டுரங்கன் இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு ஸந்த்நாமதேவரைப் பார்த்து மந்தஹாஸம் புரிகிறார். ஸந்த்நாமதேவர் பாண்டுரங்கனைப் பார்த்து, விட்டலா எனக்காக இந்த தர்சனமா! அதுவும் நாய் வடிவத்திலா! ஹே பாண்டுரங்க! நீ மஸ்ய, கூர்ம, வராஹ அவதாரங்கள் எடுத்தது போதாதா என் பொருட்டு ஒரு நாயாக அவதாரம் எடுக்க வேண்டுமா என்று கதற பாண்டுரங்கனோ "நாமதேவா" நான் எந்த ரூபத்தில் வந்தால்தான் என்ன நீதான் கண்டுபிடித்து விடுகிறாயே" என்றார்.

ஸந்த் நாமதேவருக்கு பாண்டுரங்கன் காட்சி கொடுத்தது பகவான் இந்த ஸூத்திரத்தை அங்கீகரிக்கிறான் என்பதற்கு உதாரணம் போல் அல்லவா அமைகிறது.

ஸூத்ரம் 10 : "அன்யாச்ரயாணாம் த்யாகோ அனன்யதா:"

மற்ற எல்லாவற்றிலும் பற்றுதலை விட்டு அன்ய சிந்தனை இல்லாமல் பக்தி செய்ய வேண்டும் என்று இந்த ஸூத்திரத்தில் சொல்லப்படுகிறது. பக்தி செய்வது என்பது பக்தி செய்வதற்காகவே என்ற நிலையே இங்கே அன்ய சிந்தனை இல்லாமல் என்பதற்கு பொருள். பக்தி விஷயத்திலும் கூட யாருடைய உதவியும், பாதுகாப்பும் இல்லாமலும், ஸர்வத்தையும் பகவானது என்ற பூர்ண சரணாகதியுமே இங்கே நாரதர் குறிப்பிடுகிறார் பகவான் கீதையிலும்,

"அனன்யாஸ்சிந்தயந்தோமாம் யேஜநா : பர்யுபாஸதே!
தேஷாம் நித்யாபி யுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்!! 9-22

வேறு எதிலும் நாட்டமில்லாது என் ஒருவனிடமே ப்ரேமை கொண்டவன், எந்த பலனையும் எதிர்பாராமல் என்னையே பஜிப்பவன் அத்தகைய பக்தனின் யோகக்ஷேமத்தை நானே நிர்வகிக்கிறேன்.

Koviloor Digital Library

என்கிறான். எல்லாம் பகவான் இஷ்டம். ஹிதமோ, அஹிதமோ அது பகவான் இஷ்டம். பகவத்ஸங்கல்ப்பம் என்று பக்தன் எண்ணி விட்டானானால் அஹிதத்திலும் ஹிதத்தையே காண்பான் திருப்பானாழ்வாரைப்போல.

ரெங்கமந்திருக்குள் செல்லக்கூடிய எல்லா தகுதிகள் இருந்தும், சாஸ்திர மரியாதையை காப்பாற்ற கோவிலுக்குள் செல்லாமல் ரெங்கநாதனையே த்யானித்துக் கொண்டும், மானஸீகமாக ரங்க தர்சனம் செய்து கொண்டும் வேறு சிந்தனையே இல்லாமல் எல்லாவற்றிலும் பற்றுதலை நீக்கி பகவானிடம் மட்டும் உறவு பூண்டு வந்ததால் அல்லவோ பகவானே திருப்பாணாழ்வாரை அர்ச்சகமுகனே கோவிலுக்குள் அழைத்து வரவும் ஆழ்வாரும்,

“கொண்டல் வண்ணனை கோவலனாய் வெண்ணை
உண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன்அணி அரங்கன் என் அமுதினை
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே”

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR A. No. 11978

என்று பாடிட, பகவானே ஆழ்வாரை உள்ளே அழைத்து தன்னுள் பூதஉடலோடு ஐக்கியப்படுத்திக் கொள்ளவில்லையா.

பக்தியிலே சிறந்து விளங்கியும், கோவிலுக்குள் செல்ல முடியாத சூழ்நிலையில் கனகதாஸர் தினந்தோறும் கோயிலின் முன் நின்று “கிருஷ்ணா உன்னைக் கண்ணால் கண்டு களிக்கும் நாள் என்றோ” என்று அழுது வருந்துவார். கர்ப்பக்கிரஹ முன்வாயிலின் தர்சனம் கிடைக்காத ஏக்கத்தில் கர்ப்பக்கிரஹ பின்சுவரில் முட்டி அழும்போது உடுப்பிக்கிருஷ்ணன் தன் கையில் உள்ள மத்தால் பின் சுவரில் ஓட்டை ஏற்படுத்தி, தானும் திரும்ப நின்று கனகதாசருக்கு தரிசனமும் தந்து இன்றுவரை அந்த ஓட்டையின் வழியாக அதாவது கனகதாஸன் வாயிலின் மூலமாகத்தானே இன்று எல்லா பக்தர்களுக்கும் தர்சனம் தருகிறான்.

ஸூத்ரம் 11 : “லோகவேதே ஷு ததநுகூலா சரணம்
தத்விரோதிஷு தாஸீனதா:”

செய்யும் எல்லா செயல்களும் பக்தி பூர்வமானதாகவும், பக்திக்கு அனுசரணையாகவும், பக்தியை போஷித்து வளர்க்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இது உலகாதீதமான வெளிக்காரியங்களுக்கும் வைதிகமான அனுஷ்டான காரியங்களுக்கும் பொருந்தும். பக்திக்கு அனுசரணை இல்லாத காரியங்களை விலக்குவதாலும், அதில் சம்மந்தப்படாமல் இன்னும் சொல்லப்போனால் இவ்விதமான காரியங்களில் உதாஸீன்மாக (அலட்சியமாக) இருப்பதும் நல்லது. ரிஷிகளால் மனிதர்களுக்காக

Koviloor Digital Library

உருவாக்கி கொடுக்கப்பட்ட நித்யகர்ம அனுஷ்டானத்திலிருந்து எல்லாவிதமான கர்ம காரியங்களிலும் பகவத் பக்தியும் பகவந்நாமுமே பிரதானமாக இருக்கிறது. இதை செய்பவன் பகவானின் பெருமைகளை உணராமலும், பகவன் நாமத்தின் அருமை புரியாமலும், பக்தியுடன் கூடிய மனோபாவம் கொஞ்சமுமின்றி குளிப்பது – சாப்பிடுவது, உறங்குவது போன்ற தனது நித்திய கடமைகளைப் போலவே இந்த கர்மானுஷ்டானங்களையும் கருதி வறட்டுத்தனமாக ஈடுபடுவானேயானால் இவனும் பக்தி மார்க்கத்திலிருந்து விலகியவனாகிறான் என்கிறார் நாரதர். எனவே, பலனில் அபேக்ஷையின்றி எல்லா கர்மங்களையும், காரியங்களையும் பகவத் அர்ப்பணமாக செய்ய வேண்டும் என்பதே இந்த ஸுத்திரத்தின் தாத்பர்யம். பகவானும் கீதையில்,

> "நஹி தேஹப்ருதா ஸக்யம் த்யக்தும் கர்மாண்ய ஸேஷத
> யஸ்து கர்மபலத்யாகி ஸத்யாகி த்யபி தீயதே" !! 18-11

எல்லோராலும் முற்றிலும் கர்மங்களைத் தியாகம் செய்துவிடமுடியாது. ஆனால் எவன் கர்மத்தின் பலனை ஈஸ்வரார்பிதமாக துறக்கிறானோ அவனேத்யாகியாகிறான் என்கிறார் பகவான்.

ப்ரஹ்லாதன் தனது பக்திக்கு அனுகூலமில்லாத தந்தையையே தியாகம் செய்தான். விபீஷணன் தன்ராமபக்திக்கு எதிரான அண்ணனை தியாகம் செய்தான். பரதன் பக்திக்கு விரோதமாயிருந்த தாயை தியாகம் செய்தான். பலி சக்ரவர்த்தி பகவத் பக்திக்கு மாறாக இருந்த தனது குரு சுக்ராச்சார்யரைக்கூட தியாகம் செய்தான். கோபிகைகள் எல்லாவற்றையும் கண்ணனுக்கு அர்ப்பணித்தார்கள். பகவத் பக்திக்கு அனுகூலமில்லாவைகளில் இருந்து விலகி இருத்தல் என்ற நாரத ஸுத்ரத்திற்கு இவர்களே உதாரணங்கள்.

வேதங்களை தெளிவுறக்கற்று யாக, யஞ்ஞாதி க்ரியைகளில் பூர்ண தேர்ச்சி பெற்றிருந்தும் கூட, மதங்கமஹரிஷியின் சிஷ்யர்கள் குருவினிடம் அல்பவரங்களையே யாசித்தார்கள். எந்தவித சாஸ்திர ஞானமும் இல்லாத, வேடுவகுலபெண்ணான சபரி குருவினைப் பூர்ண சரணாகதி பண்ணிவிட்டதால் பகவான் ஸ்ரீராமன் இவள் வீடுதேடி வந்தல்லவோ தர்சனம் தந்தான். பகவத் பக்தி இல்லாமல், ப்ரேமபக்தி இல்லாமல் ஆனால் பகவானையே தொட்டு தொட்டு சேவை செய்தபோதும் அர்ச்சகர்களுக்கு ப்ரத்யக்ஷமாகாத பகவான், கோவிலுக்குள் வரக்கூடாது என்ற சில நியமங்கள் இருந்தும்கூட, பகவானிடம் சித்தம் பறிகொடுத்த எத்தனையோ பக்தர்கள் வீடு தேடி சென்று அவர்களோடு பழகி, அவர்களுடனேயே உண்டு, உறங்கி, ஸல்லாபித்திருந்த பக்த சரித்திரங்கள் பிரஸித்தம்.

Koviloor Digital Library

பாண்டுரங்க பக்தனான ஸந்த்சோகாமேளன் கோவிலுக்குள் வருவதில்லை. ஆனால் பகவத்பக்தியின் ரஸமுணர்ந்து பகவான்பால் பித்தனாகிவிட்டான். ஏகாதசி விரதமும், துவாதசி பாரணையும் இவைகளின் மஹிமையும் அறிந்த ஸந்த்சோகாமேளன் ஏகாதசி உபவாஸம் இருந்து, இரவு உறங்காமல் ஸங்கீர்த்தனம் செய்து காலையில் அனுஷ்டான பரனாக இருந்து ஒரு வைஷ்ணவருக்கு துவாதசி பாரணை செய்விக்க எண்ணி, ஒவ்வொருவராக அழைக்க யாரும் மறுத்து விடுகிறார்கள். திடீரென்று பூர்ண வைஷ்ணவ பொலிவுடன் ஒருவர் தான் பாரணை ஏற்றுக் கொள்ளவருகிறார். அவரை அன்புடன் அழைத்து பாரணை செய்விக்கிறான். ஏழை பக்தனான அவனிடம் என்ன உள்ளது? பழையசோற்றை அன்புடன் படைக்க வந்த வைஷ்ணவரும் பிரியத்துடன் உண்கிறார். உண்டு கொண்டிருக்கும்பொழுதே வைஷ்ணவ ஸ்வருபம் மறைந்து சாக்ஷாத் பாண்டுரங்கனே காட்சி தருகிறார். பரவசமான சோகாமேளனின் தர்மபத்தினி வியப்படைந்து பழையது இருந்த சட்டியை கை நழுவ விட்டுவிட அதில் இருந்த பழையசோறு பாண்டுரங்கன் மேல் விழுந்து அவனுக்கு அன்னாபிஷேகம் போல் ஆயிற்று. பதறிய சோகாமேளன் தன்பத்தினியை நோக்கி “ஐயோ என்ன காரியம் செய்துவிட்டாய். சாக்ஷாத் பாண்டுரங்கன் நம்வீடுதேடிவந்தும் அபசாரப்பட்டு விட்டாயே என கூவுகிறான். அந்த சமயம் சந்திரபாகாநதியில் குளித்து பாண்டுரங்கன் கோவிலில் பூஜைக்கு செல்லும் பிராம்மணர்களின் காதுகளில் சோகாமேளனின் இந்த வார்த்தைகள் விழ அவர்கள் “சோகாமேளா உனக்கு பக்தி முற்றிவிட்டதோ? எங்கள் வீடுதேடி வராத பகவான் உன் வீடு தேடி வந்து பழைய சோற்றையா சாப்பிடுகிறான். நல்லவேடிக்கை போ” என எள்ளி நகையாடியபடியே கோவிலுக்கு சென்று பண்டரிநாதன் கர்பக்ரஹத்தின் கதவினைத் திறந்து உள்ளே செல்ல அங்கு பாண்டுரங்க மூர்த்தியின் தலை முதல் பாதம் வரை பழைய சோற்றால் அபிஷேகமானதுபோல் இருப்பதைக் கண்டு, வியந்து சோகாமேளனின் பக்தியின் பெருமையை உணர்ந்து கொண்ட கதை உலக ப்ரசித்தமன்றோ!.

ஸூத்ரம் 12 : “பவது நிச்சயதார்ட்யாத் ஊர்த்வம் சாஸ்த்ர ரக்ஷணம்”!!

மேற்சொன்ன ஸூத்ரங்களில் சொல்லப்பட்டவன் பக்திக்கு அதிகாரியாகிறான். என்றாலும், அவன் சாஸ்திரங்கள் விதித்திருக்கும் முறைகளில் இருந்து விலகாதவனாகவும், அந்த சாஸ்த்ரமரியாதைகளை எல்லோரினும் மிக சிறப்பாக கடைப்பிடிப்பவனாகவும் இருக்க வேண்டும். இவ்விதமாக அவன் சாஸ்திரங்கள் விதித்திருக்கும் முறைகளில் இருந்து

Koviloor Digital Library

விலகாதவனாக இருந்து உலகத்துக்கு எப்படி ஒரு உத்தமபக்தன் சாஸ்திர மரியாதைகளை காப்பாற்றுவதில் முதன்மையாக இருப்பான் என்று உலகத்திற்கு காட்ட வேண்டும். இதுமேலே கூறப்பட்ட 8-வது ஸூத்திரத்திற்கு மாறுபட்டதாக தெரிகிறதே எனில் அந்த 8-வது சூத்திரத்தில் கூறப்பட்ட பக்தனின் நிலையிலிருந்து இந்த ஸூத்ரத்தில் கூறப்பட்ட பக்தனின் நிலை சற்று மாறுபட்டதாக எடுத்துக் கொள்ள வேண்டும். பக்தனினும் பேதம் உள்ளதா எனில் பக்தியில் பேதமில்லாவிட்டாலும், பக்தனுக்கு ஏற்பட்டுள்ள பரிபக்குவத்தில் சற்று மாறுபாடு இருக்கலாம். மேலும், கர்மாக்களை இவனாக தியாகம் செய்யக்கூடாது என்றுதான் ஸூத்திரமும் சொல்கிறது. நாரதர் அதையே சற்று அழுத்தம் கொடுத்து சொல்ல நினைக்கிறார். ஒரேவிதமான வியாதிக்கு இருவருக்கு தனித்தனியே கொடுக்கப்படும் வேறு வேறு மருந்துகள் போல, வியாதி ஒன்றுதான் எனினும், அதன் பாதிப்பில் இருக்கும் மாற்றத்தை அனுசரித்து மருந்து மாறுபடுவதுபோல் இங்கே சொல்லப்படுகிறது. எல்லா பக்தர்களும் சாஸ்த்ர மரியாதையை காப்பாற்றித்தான் வந்திருக்கிறார்கள் என்பது அவர்களது சரித்திரத்தாலேயே நன்கு தெரிகிறது. தானாகவே விரும்பி சாஸ்த்ரமரியாதையை மீறிய பக்தர்கள் கிடையாது. முன் ஸூத்ரத்திற்கு உதாரணமாக காட்டப்பட்ட ஸந்த்ஸேனாயி, மற்றும் நரஸிம்மமேதா போன்ற பக்தர்கள் மாதிரி ஒன்று, இரண்டு நமக்கு தெரிந்தால் அது பகவான் அவர்களது மஹிமையை பறை சாற்ற நடத்திக் காட்டிய லீலைகளின் காரணமாகவே இருக்கும். மறுபடியும் அந்த சாஸ்த்ர மரியாதைகளை அதே பக்தர்கள் அனுஷ்டித்துக் காட்டிவந்த சரித்திரங்களே இதற்கு சான்று. பகவான் கீதையின் மூன்றாவது அத்தியாயத்தில்,

"கர்மணைவ ஹி ஸம்ஸித்தி: ஆஸ்திதா ஜநகாதய:
லோக ஸங்க் ரஹமேவாபி ஸம்பஸ்யந் கர்துமர்ஹஸி!! 3-20

ஞானிகளில் சிறந்தவரான ஜனகர் போன்றவர்களும் கர்மங்களை பற்றின்றி செய்ததின் மூலமே சிறந்த நிலையினை அடைந்தனர். அதுபோலவே உன்னை கண்டு உலகம் பின்பற்ற நீயும் கர்மங்களைச் செய்வதுதான் சிறந்த செயல்.

என்றும் அதே கீதையில் பகவான் பதினாறாவது அத்யாயத்தில்,

"தஸ்மாச் சாஸ்த்ரம் ப்ரமாணம்தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ
ஞாத்வா சாஸ்த்ர விதாநோக்தம் கர்மகர்த்து மிஹார்ஹஸி"!! 16-24

"இவ்வுலகில் செய்யத்தக்கது செய்யத் தகாதது எவை என நிர்ணயிப்பதில் உனக்கு சாஸ்த்ரமே சான்றாகும். இவ்வாறு தெரிந்துகொண்டு சாஸ்த்ர முறைகளில் சொல்லப்பட்ட கர்மங்களை செய்யக்கடவாய்" என்கிறான்.

Koviloor Digital Library

ஸூத்ரம் 13 : "அன்யதா பாதித்யா சங்கயா"!

சாஸ்த்ர விதிமுறைகளை மீறிய பக்தன் தர்மமார்க்கத்தில் இருந்தும் நழுவியவனாகிறான். நழுவி பக்தி மார்க்கத்திலிருந்தும் வீழ்ச்சியடைய நேரிடலாம் என்பதாலேயே நாரதர் இதை வலியுறுத்தி கூறுகிறார். சாஸ்த்திரமானது மனிதனை நன்னெறிப்படுத்த போடப்பட்ட பாதை. அதிலிருந்து விலகுவானேயானால் தவறான மார்க்கத்தில் பிரவேசித்து விடுவான் என்பது அபிப்ராயம்.

உயர்ந்த ப்ராம்மண குலத்தில் பிறந்தும் வேதங்களை எல்லாம் கசடறக் கற்றும், பாதை தவறியதால் அஜாமிளன் எந்தகைய கீழ்நிலைக்கு தள்ளப்பட்டு, கொலை, கொள்ளை, மது, மாமிசம் உண்ணல் போன்ற கேவலமான நிலைக்கு ஆளானான் என்பதை ஸ்ரீமத்பாகவதம் தனது ஆறாவது ஸ்கந்தத்தில் விரிவாக சொல்கிறது. இதை மனதில் கொண்டு சாஸ்திரங்களில் போடப்பட்ட பாதையே ஸ்ரேஷ்டமானது என்று அறிந்து பக்தன் நடந்து கொள்ள வேண்டும். இதையே பகவான் கீதையில்,

"உதாஸீநவதாஸீநோ குணர்யோ நவிசால்யதே
குணாவர்தந்த இத்யேவ யோவதிஷ்டதி நேங்கதே" ! 14-22

எல்லாவற்றிலும் சாக்ஷிபூதமாய் இருந்து கொண்டு ஏனைய குணவிசேஷங்களால் நிலை தடுமாறுவதில்லையோ குணங்களே குணங்களை இயக்குகின்றன என்பதறிந்து ஸச்சிதானந்த பரம்ப்ரம்மத்திடம் ஒன்றியவனாக ஆவதோடு அதினின்று நீங்காதவனாக ஆகிறான் என்கிறான்.

ஸூத்ரம் 14 : "லோகோபி தாவதேவ கிந்து போஜனாதி-வ்யாபார-
ஸத்வாசரீர – தாரணாவதி"!!

பூர்ணபக்தி ஒருவனுக்கு ஏற்படும் வகையில் அவனுக்கு உலகப் ப்ரஞ்ஞையானது இருக்கும். அதனால் உலகத்தை ஒட்டியும், அவன் ஒழுக்கம் தவறாமல் வாழ்ந்து வருதல் அவசியம். ஆனால் அவன் எல்லாவற்றிலும் சாட்சிபூதமாக இருந்து கொண்டு வரவேண்டுமே தவிர தானே சிக்கிக் கொள்ளக்கூடாது. குடும்பமும் குடும்பரக்ஷணமும், பக்தனுக்கு தவிர்க்க முடியாதது. இதில் ஸம்ஸாரத்தில் சம்மந்தப்பட்டுக் கொள்ளலாமே தவிர அதிலேயே மூழ்கி விடக்கூடாது.

உணவு ஒருவனுக்கு இன்றியமையாதது. தவிர்க்க முடியாதது. ஆனால் இந்த உணவை பக்தன் தன் சரீர ரக்ஷணம் கருதியே உண்ண வேண்டுமே தவிர சரீர போஷணைக்காக உண்ணக்கூடாது. சரீரத்தின் இயக்கத்திற்கும், இந்த உயிர் நிலைத்திருக்க வேண்டியும் தேவையான

Koviloor Digital Library

அளவு மட்டும் ருசிக்கு பிரதானம் தராமல் புசித்து வரவேண்டுமே அல்லாது உணவுக்கு முக்கியத்துவம் கொடுத்து சரீர புஷ்டிக்காகவும், நாவின்ருசிக்காவும் உண்ணக்கூடாது.

நாரதமகரிஷி இந்த ஸூத்திரத்தின்மூலம் உணவைப் பற்றி சொல்லுவது போல் பக்தனின் நிலையினை இங்கு உணர்த்துகிறார். எப்படியெனில் எப்படி உணவானது பக்தனுக்கு அறிவுறுத்தப்பட்டதோ அதுபோலவே பக்தன் தன் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் தவிர்க்க முடியாததை மட்டும் குறைந்தபட்சமாக செய்துவர வேண்டும் என்று கூறுவதாகவும் கொள்ளலாம். திருமூலரும் இதையே கூறவந்தபோது,

"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பின் உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பின் உள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே" என்கிறார்.

ஸூத்ரம் 15 : "தல்லக்ஷணானி வாச்யந்தே நாநாமதபேதாத்"

("இதற்கு முந்தைய ஸூத்ரங்களில் பக்தியைப் பற்றியும் பக்த லக்ஷணங்களையும் கூறிவந்த நாரதர் பக்தி மற்ற வகைகளிலும் எவ்வாறு விளக்கப்படுகிறது என்பதை இந்த ஸூத்ரம் மூலம் சொல்ல விரும்புகிறார்".)

மற்றவர்கள் கொண்டுள்ள கொள்கைகளில் வித்யாசம் உள்ளதால் பக்தியானது பலவாறாக கூறப்படுகிறது என்பதை இந்த ஸூத்ரத்தில் தேவரிஷி நாரதர் கூறுகிறார்.

பக்தியின் தன்மை ஒன்றா அல்லது பல்வேறு விதமானதா எனில் அது ஒன்று என்றும், இரண்டு என்றும் அல்லது பல்வேறு விதமானது என்று நம் மதத்தில் கூறப்படுகிறது. பக்தியின் அனுபவமும், அதுபோலவே பல்வேறு விதமானது. சாதாரணமான உலகியல் விஷயங்களில்கூட எந்த இரண்டு மனமும் ஒன்றுபோல் இயங்குவது இல்லை. கருத்து வேறுபாடு இருந்து கொண்டேதான் இருக்கிறது. அனுபவ விஷயங்களில் மாறுபாடுகள் இருந்தால் இதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது. இதுவே அத்வைத, விசிஷ்டாத்வைத, த்வைத நிலைகளில் உணர்த்தப்படுகிறது. இம்மூன்றுக்குமே, வேதங்களும், உபநிஷத்துக்களும், ரிஷிவாக்யங்களுமே ஆதாரம் என்றால் உணர்வுகளில் மாறுபடுகிறது.

"இரும்பு காந்தத்தோடு இணைவது எப்படியோ, மனைவி கணவனை சார்ந்திருப்பது எப்படியோ, கொடி மரத்தை தழுவுவது எப்படியோ அதுபோல்

Koviloor Digital Library

பக்தனின் எண்ணங்கள் பகவானின் திருவடித் தாமரைகளில் இணைய வேண்டும் என்கிறார் ஆதிசங்கரர் தன் சிவானந்த லஹரியில்.

"ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்துக்குள் ஊற்றப்படும் எண்ணை எப்படி இடைவெளியின்றி தொடர்ச்சியாக எவ்வித சப்தமும் இன்றி ஒரே தாரையாக விழுகிறதோ அப்படியே இருக்கும் பக்தனின் மனம் பகவான் விஷயத்தில்" என்கிறார் தேவிபாகவதத்தில்.

"எந்த உயர்ந்த தத்துவத்திலிருந்து புலன்களும் அவைகள் நுகரும் பொருள்களும் வந்துள்ளனவோ அந்த உண்மையின் மீது இயற்கையாக ஏற்படும் உறுதியான தீர்மானமே பக்தி" என்கிறார் மைத்ரேயர் ஸ்ரீமத்பாகவதத்தில்.

"பக்தனின் எண்ணங்கள் எல்லாம் எவ்வித தடங்கலுமின்றி எல்லா உயிர்களின் பாலும் குடிகொண்டுள்ள பரமாத்மாவின் மீது கங்காப்ரவாகமாக ஓடிக் கலப்பதே" என்கிறார் கபிலவாஸுதேவர் ஸ்ரீமத்பாகவதத்தில்,

"புலன்களை இயக்கும் தலைவனான பகவானுக்கு இந்த புலன்களைக் கொண்டே செய்யப்படும் சேவையே பக்தி" என்கிறது பஞ்சதந்திரம்.

"ஸ்ரீராமனுஜரோ" ப்ரேமையுடன் கூடியத்யானமே பக்தி என்கிறார்.

இவ்விதமாக பக்தியைப் பற்றிய பலபல கருத்துக்கள் கூறப்படுகின்றன. பக்தர்களின் வெவ்வேறான அனுபவ உணர்வுகள், அதன்நிலைகள், அதில் உள்ள ஏற்ற இறக்கங்கள், பக்தியின் வளர்ச்சியில் காணும் வேறுபாடுகள் இவைகளே இந்த கருத்துக்களுக்கு அடிப்படை.

எல்லா மஹான்களுமே பக்தியின் ஸாரமான தன்மையை ஒத்துக் கொள்கிறார்கள். சிலர் பக்தியின் அடையாளங்களுக்கு மதிப்பளிக்கிறார்கள். மற்றும் சிலர் பக்தியின் மற்ற இயல்புகளையும் மேன்மைப்படுத்துகிறார்கள். ஆனால் பக்தியின் ஸாரத்தில் அடிப்படையான வேற்றுமைகள் ஏதும் இல்லை.

ஸூத்ரம் 16 : "பூஜாதிஷ் அனுராக இதி பாராசார்ய:" !!

அர்ச்சாவதார பூஜாவிதிகளைப் பற்றி பிரதானமாக எடுத்துக் கொண்டு இங்கே பக்தி லக்ஷணம் கூற வருகிறார் பாராசார்ய புத்திரரான மகரிஷி வியாஸபகவான். நாரதர் அபிப்ராயப்படி வியாஸபகவான் விக்ரஹ ஆராதனையை முக்கிய பக்தி லக்ஷணமாக எடுத்துக் கொண்டிருக்கிறார். எல்லா பக்தர்களுக்கும் பகவானே நேரில் வந்து பூஜைக்காக அமர்ந்திருப்பதுபோல் தனது ஸ்வரூபமாக அர்ச்சாவதார மூர்த்தியாக

Koviloor Digital Library

எழுந்தருளியிருக்கிறார். இங்கே அர்ச்சாவதாரமாக எழுந்தருளியுள்ள பகவான்வேறு ஸ்ரீமன் நாராயணன்வேறு அல்ல என்பது வியாஸமுனிவரின் எண்ணம்.

அதே பொன்னிறம், தீர்க்கமான நயனங்கள், சம்பகமான நாஸி, மந்த ஹாஸமான புன்னகை, சர்வாபரண அலங்காரனாக பகவான் பக்தனுக்காக ஸுலபனாக இந்த கோலம் கொண்டு (அவதாரம்) இறங்கி வந்திருக்கிறான். இந்த பக்தி மார்க்கத்தையே அநேகமாக எல்லா பக்தி மஹான்களும், ஏன் ஸிந்தாந்தவாதிகளான ஆச்சார்யர்களும் கைக்கொண்டார்கள் என்பது நிதர்ஸனமாகத் தெரிகிறது. தனது அர்ச்சாவதார மூர்த்தியுடனேயே பேசி, பாடி களித்து, ஸல்லாபித்து ஏன் கோபித்துக் கொண்டுகூட தன் உணர்ச்சிகளை எல்லாம் வெளிப்படுத்தி வந்ததாகத்தான் அத்தனை மஹான்களின் சரித்திரமும் அமைந்துள்ளது.

"ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம்
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்மநிவேதனம்
இதிபும்ஸாபிதா விஷ்ணௌ பக்திஸ்சேன் நவலக்ஷணா
க்ரியதே பகவத்யத்தா தன்மயே தீதமுத்தமம்"!!

என்று ப்ரஹ்லாதன் பக்தியின் லக்ஷணங்ளைக் கூறுவதாக ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. பகவான் விஷ்ணுவின் கதைகளைக் கேட்பது, கீர்த்தனம் செய்வது, தனக்குள்தானே நினைந்து ஆனந்தப்பட்டுக் கொண்டே இருப்பது, இறைவன் மற்றும் அடியார்களுக்கு செய்யும் பணிவிடை, வாடாமலர் கொண்டும் நன்மலர்கொண்டும் அர்ச்சனை செய்வது, பணிவிடைசெய்வது, பகவானிடம் நட்பு பாராட்டுவது, மற்றும் தன்னையே பகவானிடம் ஒப்படைத்துக் கொண்டுவிடுவது என ஒன்பதுவிதமான பக்தியுமே பூஜை என்ற ஒன்றினுள் அடங்கிவிடும்.

முக்கியமாக ஆழ்வார்களும், நாயன்மார்களும் இந்த அர்ச்சாவதார ஸ்வரூபங்களிலேயே நிலைபெற்றவர்களாய் இருந்தார்கள். த்வ்யதேசங்களை தேடிச்சென்று அங்கே கோவிலில் எழுந்தருளிய எம்பெருமானை தர்சனம் செய்து பாசுரங்களால் பகவானை மகிழ்வித்தார்கள். தியாகராஜ ஸ்வாமிகள் தன் ராமனிடம் நேரில் பேசிப்பாடியே தன் சந்தேகங்களை எல்லாம் தீர்த்துக் கொண்டார் என்பதாகத்தானே அவரது கீர்த்தனங்கள் எல்லாம் அமைகிறது. தனது கிரிதாரியின் லீலைகளில் பக்த மீரா தன்னை எப்படி ஆட்படுத்திக் கொண்டாள். தனது ஸ்ரீநாதனிடம் ஸ்ரீவல்லபாச்சார்யார் எப்படி தன் சிந்தையை பறி கொடுத்தார். கனகதாஸருக்காக உடுப்பிகிருஷ்ணன் திரும்பி நிற்கவில்லையா? ஆண்டாளை தேடிவந்து திருமணம் செய்து கொண்ட ஸ்ரீரங்கநாதன் அவளை பூதஉடலோடு தன்னோடு ஐக்கியப்படுத்திக்

Koviloor Digital Library

கொள்ளவில்லையா? ராமதாஸருக்காக பத்ராசலராமன் நிஜாமிடம் படியளக்கவில்லையா? ராமகிருஷ்ண பரமஹம்ஸர் நித்தம் நித்தம் தன் காளிதேவியுடன் பேசவில்லையா?

அனந்தமான அர்ச்சாவதார மஹிமைகளை எல்லாம் எழுதித் தீர்த்து விடமுடியுமா? தன் மனதில் உதிக்கும் உணர்வுகளுக்கெல்லாம் தன்னிடம் உள்ள அர்ச்சாவதார பகவானுக்கு அபிஷேகம், அலங்காரம் பூஜை, நிவேதனம் எல்லாம் பக்தன் செய்யும்போது அவனுக்கு ஏற்படும் புல்லரிப்பும் புளகாங்கிதமும் ஆனந்தமும்தான் அளவிடக்கூடியதா? இதை அவரவர் அனுபவமல்லவோ கூறவேண்டும். எனவேதான் வேதவ்யாஸரான பகவான் வியாஸர் அர்ச்சாவதார ஆராதனையையே ப்ரதானமாக கொண்ட பூஜையை இங்கே பக்தியின் முக்கிய லக்ஷணமாக சொல்கிறார்.

ஸூத்ரம் 17: "கதாதிஷ்விதி கர்க்க:"

கர்க்க முனிவர் யது குலத்தவர்களின் குலகுரு. கோகுலம் வந்து ஸ்ரீக்ருஷ்ணனுக்கும், பலராமனுக்கும் நாமகரணம் செய்வித்தவர்.

பகவானின் அனந்த கல்யாண குண வைபவங்களை ஸாதுக்கள் மூலமாக கேட்பதையே சிறந்த பக்தி லக்ஷணமாக கர்க்க முனிவர் சொல்கிறார்.

பக்த ப்ரஹ்லாதன் ஒன்பதுவித பக்தி லக்ஷணங்கள் கூறியபோது "ஸ்ருண்வன்" என்ற இந்த "கேட்பது" என்பதையே முதலாவதாக கூறுகிறான். கேட்பது - பகவத் குணங்களை காதாரக் கேட்பது சிறந்த பக்தியாக கூறப்படுகிறது. ஸ்ரீமத் பாகவதமும்.

"ஸ்ருண்வதாம் ஸ்வகதாம் க்ருஷ்ண :
புண்யஸ்ரவண கீர்தன :
ஹ்ருத்யந்த : ஸ்தோஹ்யபத்ராணி :
விதுநோதி ஸுஹ்ருத்ஸதாம்"

யாருடைய ஸ்ரவணமும், கீர்த்தனமும் புண்ணியமானதோ யார் ஸாதுக்களுக்கு ப்ரிய நண்பனோ அந்த கிருஷ்ணன் தனது கதையை கேட்பவர்களின் ஹ்ருதயத்துள்ளே இருந்துகொண்டு துர்வாசனைகளை நீக்கிவிடுகிறான்.

என்று கூறுகிறது. மேலும், ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீக்ருஷ்ணன் தேவகி கர்ப்பத்தில் இருக்கிறான் என்று தேவர்கள் வந்து ஸ்தோத்ரம் செய்யும்பொழுது, நீ நாமரூபமாக ஒரு அவதாரம் செய்யப்போகிறாய்.

Koviloor Digital Library

அது மங்களமானது. இந்த நாமத்தை நாங்கள் கேட்கவும், பிறருக்கு சொல்லவும், ·எங்களுக்குள்ளாகவே ஸ்மரித்துக் கொண்டிருக்கவே இந்த அவதாரம் என்றல்லவோ துதிக்கிறார்கள்.

“ச்ருண்வன் க்ருணன் ஸம் ஸ்மரயம்ச சிந்தயன்
நாமானி ரூபானிச மங்களானி ச
க்ரியாஸு யஸ்த்வச்சரணாரவிந்தயோ:
ஆவிஷ்ட சேதா ந பவாய கல்பதே”

ஸ்ரீமத் பாகவதம்.

ஆழ்வார் பாசுரங்களை ஸ்ரீராமனுஜர் வாய்வழியாக கேட்டதால் அல்லவோ அனந்தாழ்வான், திருப்பதி த்வ்யதேசம் சென்று புஷ்பங்கைங்கர்யம் செய்து பகவானையே ப்ரத்யக்ஷமாக்கினார். ஸாதனைகளில் சிறந்த ஸாதனையும், ஸாதனங்களில் சிறந்த ஸாதனமும் எம்பெருமான் தன் பெருமைகளை எல்லாம் செவியாரக் கேட்பதே என்பதே கர்க்க முனிவரின் பக்தி வழி.

ஸூத்ரம் 18 : “ஆத்மரத்ய விரோதேனேதி சாண்டில்ய:” !!

சாண்டில்ய மகரிஷியும் தானே ஒரு பக்தி ஸூத்ரம் நூறுகொண்ட சாஸ்திரம் செய்திருக்கிறார் என்பதை நாரதர் அறிவார். எனவே, சாண்டில்யரின் நூறு ஸூத்ரங்களிலும் உள்ள ஸாரத்தை எடுத்து இந்த ஸூத்ரமாக எழுதினார் என்றும் கொள்ளலாம்.

சாந்தோக்ய உபநிஷத்தில் சாண்டில்யர் “எல்லாம் தானேயாகி, எங்கும் வியாபித்து உள்ளதாயும் நாமம், ரூபம் அற்றதாயுமுள்ள ப்ரம்மமே என்னுள் விளங்கும் ஆத்மாவாயிருக்கிறது. இந்த சரீரம் பொய் என்றும் ஆத்மாவே மெய் என்றும் ஆகின்றபடியால் அந்த பிரம்மத்தையே நான் அடைவேன் என்று உணர்ந்து கொண்டவனுக்கு வேறு எதிலும் ஏதும் சந்தேகமே கிடையாது” என்கிறார்.

இவற்றைக் கொண்டு இந்த ஸூத்ரத்திற்கு பொருள் கொள்வோமேயானால், ஆத்மானந்தத்திற்கு விரோதமில்லாமல் பக்தி செய்ய வேண்டும் என்றாகிறது. இந்த சற்று வித்யாசமான பாவம். ஆனந்தத்திற்கு விரோதமில்லாமல் பக்தி என்றால் ஆனந்தம் வேறு பக்தி வேறு என்றல்லவா ஆகிறது. பக்தியினால் ஏற்படாத ஆனந்தம் பக்தனுக்கு வேறு மார்க்கத்திலும் கிடைக்கும் என்றால் இது நாரதரின் அடிப்படையான பக்தி விசேஷத்திற்கு சற்றுமாறுபட்டதுபோல் அல்லவா தெரிகிறது. ஆனால் இங்கே சாண்டில்யரின் அபிப்ராயப்படி ஆத்மானுபவ ஆனந்தம் ஏற்கனவேயே உள்ளது. பக்தி மார்க்கத்தின் ஏனைய விஷயங்களான ஸ்ரவரணம், கீர்த்தனம், ஸ்மரணம்

Koviloor Digital Library

போன்ற வழிபாட்டு முறைகள் ஏற்கனவேயே ஆத்மானுபவ ஆனந்தத்தை அதிகப்படுத்துவதாய் இருக்கவேண்டும் என்பதாகும். பக்தனுக்கு என்றுமே ஆனந்தம் என்பதே சாண்டில்யரின் அபிப்ராயம். எல்லாவற்றிலும் பகவானின் பரிபூர்ணக்ருபையை கண்டு ஏற்படும் ஆனந்தம் அல்லாது எல்லாவற்றிலும் பகவானையே காண்பது அல்லது எல்லாம் பகவானே என்று எண்ணுவது இதுவே ஆனந்தம் என்கிறார் சாண்டில்யர்.

ஸ்ரீமத்பாகவதத்தில் ஹரி என்ற யோகி

"ஸர்வபூதேஷு ய: பஸ்யேத் பகவத் பாவமாத்மன:
பூதானி பகவத்யாத்மன்யேஷ பாகவதோத்தம:"!!

உலகில் கண் படைக்கப்பட்ட எதைப் பார்த்தாலும், இது பகவத் ஸ்வரூபம் என்றும் எல்லாவற்றினுடைய அந்தராத்மாவாக பகவானே இருக்கிறான் என்று எண்ணுகிற பக்த ச்ரேஷ்டன் என்கிறார்.

இதையே இங்கே சாண்டில்யரும் ஸர்வபூதங்களிலும் வியாபித்திருக்கும் பகவானது பூர்ணக்ருபையை, கருணையை எண்ணி ஏற்கனவேயே ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கும் பக்தனின் ஆனந்தத்திற்கு விரோதமில்லாத பக்தி என்கிறார். அத்வைத, ஸித்தாந்தத்திற்கு மாறுபடாத எல்லா செயல்களிலும் ஏற்படும் ஆனந்தமே பக்தி லக்ஷணம் என்று முடிவாக கொள்ளலாம்.

ஸூத்ரம் 19: "நாரதஸ்து ததர்பிதா கிலா சாரதா
தத்விஸ்மரணேன பரமவ்யாகுல தேதி"!!

வ்யாஸபகவான், கர்க்கர், சாண்டில்யர் ஆகியோருடைய பக்தி விளக்கங்களை விவரித்த நாரதருக்கு இவைகளில் மாற்று அபிப்ராயம் கிடையாது. ஏனெனில், இம்மூவரும் கூறிய விளக்கங்கள் நாரதரின் ஸூத்ரங்களுக்கு ஏற்புடையதாகவே அமைந்துள்ளது. பக்தியின் செயல்பாட்டை வியாஸரும் பக்தியின் வாசகப்பெருமையை கர்க்கரும் (வாக்கினைப் போலன்று வாசகப் பிரபாவம்) சாண்டில்யர் பக்தியின் இருப்பையும் கூறினார்கள். தெய்வீக வழிபாட்டிற்கு செயல், பேச்சு, எண்ணம் இம்மூன்றுமே அவசியமானதால் நாரதருக்கு இவர்களின் விவரணங்களில் பூர்ண ஸம்மதமே.

நாரதர் பக்தி விஷயமாக தனது மனதை இந்த ஸூத்ரத்தின் மூலம் திறந்து காட்டுகிறார்.

"பக்தன் தனது எல்லா செயல்களையும், பகவானிடம் ஒப்படைத்து விடுவதும், பகவானுடைய நினைவிலிருந்து விலக நேரிட்டால் மிகவும் வியாகூலப்படுவதும்" என்கிறார்.

Koviloor Digital Library

பக்தி என்பதே தனது சம்மந்தப்பட்ட எல்லா காரியங்களையும் பகவத் அர்ப்பணமாக்கி ·விடவேண்டும். எது நடந்தாலும் அது பகவத்ஸங்கல்ப்பம் என்பது பக்தனது எண்ணமாயிருக்கும். எப்படி என்றால் பக்தனது எல்லாக் காரியங்களிலும் பகவத் ஸ்மரணமும் கூடவே இருந்துவரும் என்பதால் பகவத் விஷயமான மறதி என்பது பக்தனுக்கு இல்லை. இவ்வாறு எல்லா விஷயங்களையும் பகவத் அர்ப்பணமாகச் செய்யும் பக்தன் பகவத் ஸ்மரணத்திலிருந்து விலக நேர்ந்தால் மிகவும் வேதனைப்படுவான் என்கிறார் நாரதர். எல்லா விஷயங்களிலும் பகவத் ஸ்மரணம் கூடவே வரும் என்கிறபோது மறதி என்பதற்கு ஹேது ஏதுஎன்றால் பகவத் ஸம்பந்தப்படாத விஷயங்கள் வந்தால் பக்தன் செய்ய வேண்டிய நிர்பந்தம் வரும்பொழுது இவைகளில் வந்து மாட்டிக் கொண்டோமே என்றும், பகவத் விஷயத்திற்கு இது சம்பந்தப்படாததாயிற்றே என்றும் மனப்பூர்வமாக உணர்ந்து மனம் வியாகூலப் (துன்பப்)படும் என்பதையே இங்கே நாரதர் குறிப்பிடுகிறார் எனலாம்.

எப்பொழுது ஒருவன் பகவானுக்காகவே முழுமையாக வாழ்கிறானோ அவனே உண்மையான பக்தன். இந்த மனப்பான்மையே "பராபக்தி" என்ற உயர்ந்த பக்தி நெறியினைக் குறிக்கிறது. தன்னைத்தியாகம் செய்து பகவான்பால் தன்னையே அடைக்கலமாக்கிக் கொள்வதில், அகந்தை மறைந்து, அழிந்துவிடுகிறது. இந்த தீனபாவமே பக்திக்கும், தெய்வீக வாழ்க்கைக்கும் அடிகோலுகிறது. இதுவே ஒரு பக்தன் பகவானுக்கு செய்யும் ஆத்மஸமர்ப்பணம் (நிவேதனம்) ஆகும். இத்தகைய பக்தன் பகவத்ஸ்மரணத்தில் இருந்து விலகும்போது மிக மிக துன்பப்படுகிறான். எதையோ இழந்தவன்போல், பரிகொடுத்தவன்போல் தன்னையே நொந்து கொள்கிறான். மஹாப்ரபு கிருஷ்ணசைதன்யரும், பக்தமீராவும் இத்தகைய நிலைக்கு உதாரணங்கள்.

ஆயர்குலப்பெண்களான கோபிகைகள் ஸ்ரீக்ருஷ்ணன் தங்களிடம் இருந்து விலகிச் சென்ற பிரிவாற்றாமை தாங்கமுடியாமல் எங்ஙனம் வ்யாகுலப்பட்டார்கள் என்பதை "கோபீகாகீதம்" என பிரஸித்தி பெற்ற ஸ்ரீமத்பாகவத ஸ்லோகங்கள் வர்ணிக்கிறது.

"தன்மனஸ்காஸ் ததாலாபாஸ்
தத்விசேஷ்டாஸ் ததாத்மிகாகா:
தத்குணாநேவ காயந்த்யோ
நாத்மாகாராணி ஸஸ்மரு:"!!

மனது, வாக்கு, காயம் யாவற்றையும் கண்ணன் பால் செல்லவிட்டு அரற்றுகிறார்கள். புலம்புகிறார்கள். என்றும் முடிவில்,

Koviloor Digital Library

"ருருது: ஸுஸ்வரம் ராஜன் கிருஷ்ணதர்ஸநலாலஸா:

என கிருஷ்ணனின் பிரிவினைத் தாங்கமுடியாமல் அழுது புலம்பி தரையிலிட்ட புழுவாக துடித்தார்கள் என்கிறது ஸ்ரீமத்பாகவதம்.

இதுவே பகவத் ஸ்மரணத்திலிருந்து விலகிய பக்தன் நிலை.

ஸூத்ரம் 20 : "அஸ்த்யேவம் ஏவம்"!!

"அஸ்தி – ஏவம் - ஏவம்" பக்தியானது வர்ணிக்கப்பட்டதுபோல் இவ்வாறாக உள்ளது என்கிறார் நாரதர்.

"பரமப் ப்ரேமரூபா" என பக்தியினை எடுத்த எடுப்பிலே அன்பு மயமானது என துவக்கிய நாரதர் இவ்வாறு அன்பு மயமாகிய பெருகிய பக்தியின் நிலையையும், பக்தனின் நிலையையும் இதுவரை கூறிவந்தார். இதுபோன்ற உயரிய நிலைநின்ற அன்புமயமான தூயபக்திக்கு எடுத்துக்காட்டாக இதிஹாஸங்களிலும், புராணங்களிலும், பக்த சரித்திரங்களிலும் எத்தனையோ பக்தர்களின் சரித்திரம் பரிணமிக்கிறது. ஆழ்வார்களும், நாயன்மார்களும் இந்த பக்தி மார்க்கத்தையே பிரகாசப்படுத்தினார்கள். பாரத புண்ணிய பூமியின் பல்வேறு இடங்களிலும் இவ்வாறு வாழ்ந்து காட்டிய பக்தர்களின் சரித்திரங்கள் - மொழியாலும், வாழ்ந்த வழிகளின் முறையாலும் - வேறுபட்டிருந்தாலும் தூய அன்புமயமான பக்தியை வெளிப்படுத்தியதில் ஒன்றாகவே விளங்கினர். தமிழ்நாட்டில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஆந்திராவில் பத்ராசலராமதாஸ் போன்ற பக்தர்களும் கர்நாடகாவில் புரந்தரதாஸர், கனகதாஸர் போன்ற பக்தர்களும், ஒரிஸாவில் ஜெயதேவர் - பத்மாவதியும், வங்காளத்தில் கிருஷ்ணசைதன்யர் ராமகிருஷ்ணபரமஹம்ஸர், மஹாராஷ்ட்ராவில் ஞானதேவர், நாமதேவர், துகாராம் ஏகாநாதர் போன்ற எண்ணற்ற மஹான்களும் குஜராத்தில் நரஸிம்மமேத்தா, ராஜஸ்தானில் பக்த மீரா இன்னும் ஹிந்தி பேசும் மாநிலங்களில் கபீர்தாஸ், துளஸிதாஸ், ஸூர்தாஸ் போன்ற பக்தர்களும் இந்த நாரதர் கூறிய பக்திமான்களாக வாழ்ந்து காட்டினார்கள். உபநிடதங்களும், பகவத் கீதையும் இந்த அன்புமயமான பக்தியை உயர்த்திக் காட்டுகிறது.

நாரதர் தன் அபிப்ராயத்தால் இத்தகைய தூய ப்ரேமபக்திக்கு ஒரு ஆதர்ஸ உதாரணம் காட்ட ஆசைப்பட்டு அடுத்த ஸூத்ரத்தில் தன் ஹ்ருதயத்தில் ஒளித்து வைத்திருந்த ரகஸ்யத்தை இங்கே நமக்கு விளக்குவான்போல் கூறுகிறார்.

Koviloor Digital Library

ஸூத்ரம் 21 : "யதா வ்ரஜ கோபிகானாம்"!!

"இதிகாசங்களிலும், புராணங்களிலும் சுடர்விட்டு ப்ரகாசிக்கும் பக்த மண்டலத்தில் எத்தனை எத்தனை பக்தர்கள். ஏன் வேதமும் உபநிஷத்தும்கூட பக்தர்களைப் பற்றி கூறுகின்றன. தேவரிஷியான நாரதர், ஸாக்ஷாத் பிரும்மாவினுடைய புத்திரர் அவ்வாறு ஒளிவிட்டு ப்ரகாசிக்கும் பக்த மண்டலங்களில் "ப்ரஹ்லாதன், புண்டரீகன், வ்யாஸர், சுகர், பீஷ்மர், உத்தவன், வால்மீகி, விபீஷணன் போன்றவர்கள் காணக்கிடைக்க எல்லாவற்றையும் அப்படியேவிட்டுவிட்டு பக்தி மார்க்கத்தைக் காட்ட வந்த தலையாய க்ரந்தமான "ஸ்ரீமத்பாகவதத்தில் இருந்து உதாரணம் காட்ட வருகிறார்.

"எதுபோல் எனில் வ்ரஜபூமியின் கோபிகைகள்போல்"

ஸ்ரீப்ருந்தாவனத்தில் ஸ்ரீக்ருஷ்ணன் ஸமகாலத்தில் இருந்த ஆயர்குல பெண்களையே இங்கே வ்ரஜகோபிகானாம் என்கிறார். இந்த கல்வி அறிவே இல்லாத வ்ரஜகுல கோபிகைகளை மேலான, உயர்வான, ப்ரேமமயமான பக்திக்கு தேவரிஷி நாரதர் உதாரணமாக எடுத்துக் கொண்டார் என்றால், என்னே "இப்பெண்களின் மகிமை"! இந்த அன்பே வடிவான ஆயர்குலப் பெண்களின் உன்னதமான ப்ரேமபக்திக்கு ஈடாக வேறு எவரைத்தான் கூறமுடியும். ஸ்ரீக்ருஷ்ணனையே ஸர்வஸ்வமாகவும் நினைத்த இவர்களது அன்பின் ஆழம்தான் என்ன தன்மையது. எத்தகையது, எந்த ஞானத்துடன் கூடியது என்பதை நாரதர் உணர்ந்ததால் இங்கே அவர்களை உதாரணமாக்கினார்.

கோபிகைகள் பக்தர்களிலே தலைசிறந்த மாணிக்கங்கள். கண்ணனபால் இவர்கள் கொண்ட ப்ரேமையை எந்த மொழியில் என்ன சொற்களைக் கொண்டு விவரித்துவிட முடியும் "உற்றோமேயாவோம் உமக்கேயாம் ஆட்செய்வோம் மற்றை நம் காமங்கள் மாற்று" என்றிருக்கும் மிகத் தூய்மையான மனத்தினர்தான் இந்த கோபி ப்ரேமையைப் பற்றியும், பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுடன் கூடி இவர்கள் நடத்திய ராஸலீலையின் அனுபவத்தையும் புரிந்துகொள்ளமுடியும். பரிசுத்தமான ஹ்ருதயத்திற்கு மட்டுமே தூய்மையான கோபிப்ரேமபக்தி புரியும். கோபியர்கள் உயர்நிலை அடைந்த ஆத்மாக்கள். சாதாரண உலக மக்களின் இயல்புகளைக் கொண்டு இவர்களது ப்ரேமையை அனுமானிக்க முடியாது.

அப்படி என்னதான் இந்த கோபிகைகளிடம் உயர்வாக இருந்தது எனில் ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

Koviloor Digital Library

"யோ தோஹனே (அ) வஹனேன தநோபலேப
ப்ரேங்கேங்கனார்ப ருதிதோக்ஷண மார்ஜனாதௌ
காயந்தி சைனமனுரக்த தியோஸ்ருகண்ட்யோ
தன்யா வ்ரஜஸ்திரிய உருக்ரம சித்தமானா:!!

தன்யர்களான, பரமபாக்யவதிகளான, வ்ரஜவாஸிகளான இந்த ஆயர்குலப்பெண்கள், நித்தநித்தம் பசுவினிடம் பால்கறக்கும்பொழுதும், கறந்த பாலைக் காய்ச்சும் பொழுதும், உறைந்த தயிரைக் கடையும்பொழுதும், தானியங்களைச் சேகரிக்கும்பொழுதும், வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்யும்பொழுதும், குழந்தைகளை சீராட்டும்பொழுதும், பாலூட்டும் பொழுதும், தாலாட்டும் பொழுதும், எல்லா க்ரஹக்ருத்யங்களிலும் சரீர ஈடுபாட்டுடன் ஆனால் மனதை மட்டும் கண்ணன்பால் வைத்து உள்ளம் உருகி ஏங்கினார்கள். கண்களில் கண்ணீர் பனிக்க, நெஞ்சம்நெகிழ, குரல் தழுதழுக்க அந்த இன்பக்கண்ணன்பால் சித்தம் பரிகொடுத்தவர்கள் ஆனார்கள்.

இப்படி இவர்களையெல்லாம் கவர்ந்துவிட்ட கண்ணன் இவர்களிடம் இத்தகைய அன்புமேலிட என்னதான் கோபிகைகளுக்கு செய்துவிட்டான்! கண்ணன்பால் இவர்கள் கொண்டகாதல் தன்னலமில்லாதது. சரீரசௌக்யத்தைப் பற்றியது அல்ல. பிரதிபலன் கருதாதது. பரிசுத்தமானது. ப்ரேமை என்ற வார்த்தையின் ஜீவனை விளக்குவது. கண்ணன்தன் அன்பு நினைவுகளை மறக்காத இவர்கள் நெஞ்சம், மறக்க இயலாத இவர்கள் தன்மை, இந்த ப்ரேம தாபத்தாலேயே தங்களையே தஹித்துக் கொள்ளும் தன்மை, இவைகளே இவர்களது ப்ரேமஸ்வரூபம். இது இவர்கள் கண்ணன்பால் கொண்ட காமம் அல்ல. காமம் சரீரமோஹத்தால் உண்டாவது. ப்ரேமை ஆத்மானுபவத்தால் வருவது. காமம் சுயநலமானது. ப்ரதிபலனை எதிர்பார்க்கும் இங்கே எவ்வித ப்ரதிபலனையும் எதிர்பார்க்காமல் கண்ணன்பால் இவர்கள் கொண்ட மோகம் வித்யாசமானது. விநோதமானது. உண்டியே, உடையே என உழலும் உலகத்திற்கு புரியாதது. புரிந்து கொள்ளவும் முடியாதது.

இவற்றை எல்லாம் மனதிற்கொண்டே

ஸ்ரீக்ருஷ்ண கர்ணாம்ருதம் பாடவந்த லீலாசுகர்

"ஸகோபி பாலஸ்ஸரஸீருஹாக்ஷ:
ஸாச வ்ரஜஸ்த்ரீஜன பாததூளி
முஹுூஸ் ததேத்த யுகலம் மதீயே
மோமுஹ்யமானோபி மன்ஸ்யுதேது"

Koviloor Digital Library

வர்ணிக்கஇயலாத அழகோடுகூடிய தாமரைக்கண்ணனும் அவனோடு மோகம் கொண்ட வ்ரஜவாஸிகளான அந்த ஆயர்குலப்பெண்மணிகளின் காலடிதூசியும் என்மரணதருவாயில் என்முன்னே காட்சிதரட்டும் என்கிறார்.

ஸ்வார்தாய ப்ரிய ஸர்வஸ்வாகர்ஷணம் காமலக்ஷணம்
ப்ரியாய ஸ்வார்த்த ஸர்வஸ்வ ப்ரதானம் ப்ரேம லக்ஷணம்

"தன்சுகத்திற்காக, தன்போகத்திற்காக, தன்அன்பனின் எல்லாவற்றையும் அபகரித்துக் கொள்வது காமிகளுடைய ஸ்வபாவம் தன்அன்பனின் அன்புக்காக தன்னுடைய சுகத்தையும் தன்னுடைய எல்லாவற்றையும் அளிப்பது ப்ரேம லக்ஷணம்

இந்த கோபிகளின் அன்போ சுயநலமற்றது. இவர்களின் அன்பிலே காமவாசனை அணுஅளவும் இல்லை. கண்ணனின் சுகத்திற்காகவே, அவனது மகிழ்ச்சிக்காகவே வாழ்பவர்கள். கண்ணனின் இன்பமே இவர்களது இன்பம். கண்ணனின் சுகமே இவர்களின் சுகம். தன்னைமறந்து, தன்சுற்றம் மற்றும் சொந்தபந்தங்களைத் துறந்து கண்ணன் தன்தாமரைத் திருவடிகளில் தங்களையே அர்ப்பணம் செய்துகொண்டுவிட்ட, ஆத்மஸமர்ப்பணம் செய்துவிட்ட இவர்களின் தன்மையினை வெறும் வார்த்தைகளால் இங்கே விளக்கிவிட முடியுமா? வர்ணித்துத்தான் மாளுமா? இது ப்ரேமையின் எல்லைநிலம். கிருஷ்ண பக்தர்களான இவர்கள் கண்ணனைக்கண்ட மாத்திரத்தில் மயங்கினார்கள். கண்ணனைக் காணாதபோதும் மயங்கித் துடித்தார்கள். கிருஷ்ணக்ருபை என்ற நீரிலேயே நீந்திவாழும் மீன்போல் இருந்தார்கள். சற்றுநேரம் நீரிலிருந்து வெளியே எடுத்து விட்டால்கூட துடிதுடித்துப் போனார்கள். ஏன் க்ருஷ்ணவிரஹத்தில் தன்னையே, தன் உயிரையே கூட த்யாகம் செய்துவிடுவார்கள்.

எனவேதான் எல்லா பக்தமண்டலங்களிலும் தனித்து சுடர்விட்டு பிரகாசிக்கும் ஆயர்குலப் பெண்களான இந்த ப்ருந்தாவன கோபிகைகளை நாரதர் பக்தர்களுக்கு உதாரணமாக தேர்ந்தெடுத்தார் போலும்!

ஸூத்ரம் 22 "தத்ராபி ந மஹாத்ம்யக்ஞான விஸ்ம்ருத்ய பவதம்"

இந்த கோபியர்களின் ப்ரேமையை சாதாரண மனிதர்களின் அன்பு என்னும் உணர்ச்சியோடு ஒப்பிட்டு சொல்லிவிட முடியாது. ஏனெனில் தன்னால் விரும்பப்படும் கண்ணன் ஈஸ்வரனே என்று தெரிந்தே இவர்கள் ப்ரேமையை கண்ணன்பால் சொரிந்தார்கள். ஸ்ரீக்ருஷ்ணன் நந்தகோபர் மகன் மட்டும் அல்ல சாட்க்ஷாத் பகவானே என்பது அவர்களுக்குத் தெரியும்.

Koviloor Digital Library

ஸ்ரீமத்பாகவதத்தில் ராஸலீலையின் மத்தியில் திடீரென மறைந்துபோன க்ருஷ்ணனைத்தேடி இவர்கள் புலம்பும்பொழுது

நகலுகோபிகா நந்தனோபவான்
அகிலதேகினாம் அந்தராத்மத்ருக்

நீ நந்தன் யசோதையின் செல்லப்பிள்ளை மட்டுமல்ல உலகத்திலுள்ள அத்தனை ஜீவகோடிகளின் அந்தராத்மாவாக விளங்குகின்ற நீயே சாட்சி ஸ்வரூபியாகவும் பிரகாசிக்கின்றீர் என்றும்

"கரஸரோருஹம் காந்தகாமதம்
ஸிரஸிதேஹின ஸ்ரீகரக்ரஹம்"

வேண்டியதை அள்ளித்தருகின்ற மங்களதேவியான ஸ்ரீலக்ஷ்மியின் திருக்கரங்கள் பிடித்துக் கொண்டிருக்கிற உனது திருவடித்தாமரைகளை எங்கள் சிரஸிலே வைத்து அருள்செய்யும் என்றும்

"ப்ரணதேஹினாம் பாபகர்சனம்
த்ருணசராநுகம் ஸ்ரீநிகேதனம்"

உன்னை வணங்குகின்றவர்களின் பாவங்களை எல்லாம் போக்குகின்ற ஸ்ரீதேவியின் இருப்பிடமும், புற்களை மேயச்செல்கின்ற பசுக்களைத் தொடர்ந்து செல்கின்றதுமாகிய உனது திவ்யசரணங்களை எங்கள் இதயஅந்தரங்கத்தில் வைத்து அருள்செய்யும் என்றும்

"விகன சார்த்திதோ விஸ்வகுப்தயே
ஸஹஉதேயிவான் ஸாஸ்வதாங்குலே"

நீப்ரம்மாவினால் ஆராதிக்கப்படுகின்றவன்தான் என்றாலும் எங்களுக்கு ப்ரியமான நண்பனல்லவா என்றும்

பகவானது பரத்வம் தெரிந்தும், அந்தபரத்வத்துக்கு இடம்தராது, முக்யத்வம் கொடுக்காது என்ஸ்வாமி என அபிமான பாத்திரமாக கண்ணனிடம் அன்புசெய்யும் விசேஷத்தையே, இந்த விசேஷ தத்துவத்தையே நாரதர் நிர்ணயம் செய்கிறார். ஒருமானுடக் காதலனாக க்ருஷ்ணனை எண்ணாது தெய்வீக காதலனாகவே கோபியர்கள் கருதினார்கள்.

ஸுத்ரம் 23 "தத்விஹீனம் ஜாராணாமிவ"

பகவத் ஸ்வரூபம் புரிந்து கொள்ளப்படாமல், பரத்வம் புரியாமல் கோபிகைகள் ப்ரேமை கொண்டிருந்தார்கள் எனில் அவர்களை காமவசப்பட்டவர்கள் என்று கூறிவிட ஹேதுவாகும். ப்ரேமையானது

Koviloor Digital Library

நிர்வ்யாஜமாய் இருந்தால் அதுவே பக்தி எனப்படும். ப்ரதிபலனை எதிர்பார்க்கும் பக்திக்கு ப்ரேமை என்று பெயரல்ல அது காமம் எனப்படும்.

சாதாரண மனிதன் ஆர்த்தனாக செய்யும் பக்தி மட்டுமல்ல ஞானம்வேண்டி செய்யும் பக்திகூட (ஜிக்யாஸு) காமமானதே. முன்னவன் அல்ப சுகங்களை யாசித்து பக்திசெய்கிறான். கொஞ்சம் பெரியவன் ஞானத்துக்காக பக்திசெய்கிறான். இரண்டு பக்தியிலுமே பகவானிடமிருந்து ஏதாவது எதிர்பார்த்தல் என்ற ஒன்று இருக்கிறது. ஆனால் கோபிகைகளின் பக்தியிலோ ப்ரேமையானது ப்ரதிபலனை எதிர்பாராமல் இருந்தது. பகவானிடம் அவர்கள் ஏதும் யாசிக்கவில்லை. அவனது பெருமைகளால் கவரப்பட்டு பக்திக்காகவே பக்திசெய்தார்கள் என்பதுதான் பொருத்தமான விளக்கமாக இருக்கும். பக்தி சாம்ராஜ்யத்தின் உத்தமோத்தமான பக்தர்களின் பரிபக்குவத்துக்கு எல்லாம் அடிப்படையாக அமைந்தது இந்த கோபியரின் காமவசப்படாத ப்ரேமவசப்பட்ட பக்தியே.

"தன்மனஸ்காஸ் ததாலாபாஸ்
தத்விசேஷ்டாஸ் ததாத்மிகாகா:
தத்குணாநேவ கா்யந்த்யோ
நாத்மாகாராணி ஸஸ்மரு

தன்னைமறந்து, தன்உறவை மறந்து, வீடுவாசலை மறந்து தனது எல்லா கிரியைகளும் கண்ணன்பால் ஒருமுகப்பட்டு அவனது குணங்களைப்பாடி, ஆடி, அழுது, உருண்டு பிறண்டு அவன் ப்ரேமவசப்பட்டவர்களாகி மூர்ச்சிக்கும் நிலைக்கும் தள்ளப்பட்ட அந்த கோபியர்தம் பக்தியே இங்கே நாரதர் பக்திக்கு உதாரணமாகக் கொண்டு அப்படி கோபியர்கள் பகவான் என்ற ஞானம் இல்லாமல் ப்ரேமை செய்திருப்பார்களானால் அதை காமம் என்றுகூட எண்ணவேண்டிவரும். ஆனால் கோபியர் தம் ப்ரேமை ஸ்யாமவசப்பட்டதே என எண்ணி நாரதர் ஆனந்தப்படுகிறார்.

ஸூத்ரம் 24 "நாஸ்த்யேவ தஸ்மின் தத்ஸுக ஸுகித்வம்"

ஸ்ரீக்ருஷ்ணனின் சுகத்தையே தன்சுகமாக எண்ணி ஆனந்தப்பட்ட கோபியரின் தன்மையையே இங்கு மீண்டும் பக்தவிசேஷணமாகச் சொல்கிறார். ஒருவரின் இன்பம்கண்டு மற்றவரும் இன்புற்றாலே அதுவே உண்மையான அன்பு. ப்ரேமபூர்வமான அன்பு பரிமளிக்கும் இந்தஇடம் தூய்மையற்ற அன்பிலே ஏற்படுவதில்லை. தன் ப்ராணவல்லபன் மகிழ்ச்சியில் சந்தோஷப்படும் மனமானது கள்ளத்தனமானது என்று கூற முடியுமா? அல்லது விடபுருஷன்பால் ஒரு ஸ்திரீ கொள்ளும் அன்பானது இத்தகைய

Koviloor Digital Library

ஆனந்தத்தைத் தருமா? தனது இன்பத்திலேயே நாட்டம் கொண்டு பிறரிடம் அன்புசெய்பவர்கள் சுயநலக்காரர்கள். இத்தகைய சுயநலமிகளின் உள்ளத்தில் மற்றவர் இன்பத்தைப் பற்றியோ, மகிழ்ச்சியைப் பற்றியதான எண்ணம் உதிப்பதில்லை. உண்மையான அன்பில்லாதவர்கள் தியாகத்துக்கு தயாராகமாட்டார்கள். இங்கே கோபியர்கள் தனது ஸர்வத்தையும் தியாகம் செய்துவிட்டு அல்லவா பகவானிடம் ஓடிவருகிறார்கள். தியாகபூர்வமான பக்தியே பக்தலக்ஷணம் என்றும் அதற்கு கோபிகைகளே சாட்சி என்றும் நாரதர் நிரூபிக்கிறார்.

ஸூத்ரம் 25 : "ஸாது கர்ம ஞான யோகேப்யோப்யதிகதரா!

கர்மம், ஞானம், யோகம் ஆகியவற்றைக் காட்டிலும் பக்தியே உயர்ந்தது என்கிறார் தேவரிஷி. இத்தகைய கர்ம, ஞான, யோக மார்க்கங்களை அனுசரித்து பகவானை அடைய ப்ரயாசைப்படுவதைக் காட்டிலும் பக்தியால் மிகவும் ஸுலபமாக பகவானை அடையலாம் என்பது நாரதர் அபிப்ராயம். அதுமட்டுமல்ல. பக்தியால் பகவானை அடைவதே மிகவும் உயர்ந்தது என்பதோடல்லாமல் பக்திமார்க்கமே சுலபமானது. மற்ற ஸாதகர்கள் எல்லாம் பகவானையடையும் நிலை தனது ப்ரயாசையால் என்பதுபோல் உள்ளதால் பகவானையடையும் நிலையினை பகவானிடமே ஒப்புவித்துவிட்ட பக்தன்போலாகாது என்றும் கொள்ளலாம். பகவானும் கீதையில்

"யோகி நாமபி ஸர்வேஷாம் மத்கதே நாந்தராத்மநா
ஸ்ரத்தாவான் பஜதே யோமாம் ஸமேயுக்த தமோமத:" 6-47

எல்லாயோகிகளிலும் யார் என்னை சிரத்தையுடன், என்னிடம் ஈடுபாடு கொண்ட உள்ளத்தோடு என்னை வழிபடுகிறானோ அந்த யோகியே எனக்கு உத்தமமான பக்தன் - என்கிறார்.

ஸூத்ரம் 26 : "பலரூபத்வாத்"

பக்தியே பலன்தரும் ரூபத்தில் உள்ளது என்கிறார் நாரதர். பக்தி என்பது கனிந்த பழம் போன்ற முதிர்ந்தநிலை என்று சொல்லப்படுகிறது. மேலும் பழம் தானாகக் கனிவதுபோல் மனமானது பக்தி ஒன்றினாலே ஸ்வப்ரயாசை ஏதும் இன்றியே பலன் தரக்கூடியது. மேலும் பக்தி இல்லாமல் செய்யப்படும் கர்மம், ஞானம், யோகம் ஆகியவை வ்யர்த்தமானது என்றும் கொள்ளலாம். ஏனெனில் இந்த கர்ம, ஞான, யோக சாதனைகளின் நோக்கமே பலரூபனான பகவானையே அடைவது என்னும்போது பக்தியே பலரூபனான பகவானாய் இருக்கும்போது தனியாக எதற்கு வீண்ப்ரயாசை

Koviloor Digital Library

என்பதுபோல் ஆகிறது. இரண்டும் பக்தி விஷயத்தில் இரண்டு ஸாதனமாக இல்லாமல் பக்தியே ஸாதனமாகவும், பக்தியே ஸாத்யமாகவும் ஆகிவிடுவதால் இதுபோல் மற்ற மார்க்கங்களை சொல்ல முடியாது அல்லவா. பக்தி இல்லாத ஞானம் என்பதுபோல் ஞானமில்லாத பக்தி என்று கூறமுடியாதல்லவா! அப்படி கூறப்படும் பக்தி பற்றியோ பக்தனைப்பற்றியோதான பிரஸ்தாபம் இங்கு இல்லையே. ஸுத்திரத்தின் எடுத்த எடுப்பிலேயே இறைவனிடம் ஏற்படும் ப்ரேம பிரவாஹமான அனுராகமே பக்தி என்று லக்ஷணம் சொல்லப்பட்டுவிட்டபின்பு இத்தகைய கேள்விகளுக்கு அவசியமில்லை அல்லவா.

பக்திவேறு பகவான் வேறல்ல. பகவானே பக்தி ஸ்வரூபன் எனவே பக்தியே பலரூபமானது என்கிறார் நாரதர்.

ஸுத்ரம் 27 "ஈஸ்வரஸ்ய, அபிமான த்வேஷித்வாத் அன்ய ப்ரியத்வாச்ச"

பகவானுக்கு எவரிடம் கர்மில்லையோ, அவரிடம் அபிமானமும் கர்விகளிடம் உதாசீனமும் உண்டாகிறது. பக்தன் எல்லாம் ஈஸ்வர ஆஞ்ஞை என்றும் நடப்பது எல்லாம் பகவத் ஸங்கல்பம் என்றும் தான் தீனன் பகவான் சர்வஞ்யன் என்றும் தான் சரண்யன் பகவான் சரணாகதவத்ஸலன் என்றும் எண்ணி தன்னால் ஆவது ஒன்றுமில்லை இறைவனே எல்லாவற்றையும் நடத்திக்கொண்டு போகிறான் என்ற நிலையில் இருப்பவனாதலால் இவனிடத்தில் கிஞ்சித்தும் கர்வம் ஏற்படவே இல்லை. பக்தனைப் போலன்றி மற்ற ஸாதகர்கள். கர்மம், ஞானம், யோகம் ஆகிய மார்க்கங்களைக் கைக்கொண்டவர்கள் பகவானை அடைய தனது ஸ்வபிரயாசை ஏதோ இருக்கிறதென்றும் இந்தப் பிரயாசையின் பலனாகவே பகவானை அடைகின்றேன் என்ற எண்ணம் எழுவதனாலேயே கிஞ்சித் கர்வம் நேரடியாக இல்லாவிடினும் மறைமுகமாகவேனும் உண்டாகிறது. இவன் மனப்பூர்வமாக கர்வமில்லாதவனாக இருந்தபோதிலும் ஸாதகன் என்ற நிலையில் கர்வம் இவனையறியாமலேயே தோற்றமளிக்கிறது என்றும் கொள்ளலாம். கர்மடர்கள் இந்த காரியங்களை தாங்கள் செய்கிறோம் என்ற எண்ணத்தில் தான் என்பதும் பகவானைத் தவிர தன் கர்மா என்பது வேறு என்றும் பொருள்பட தோன்றுவதாலேயே பக்தியில் உள்ள பணிவு மற்றவைகளில் இல்லை என்பது நாரதர் அபிப்ராயம். பகவானிடத்தில் தன்னை ஏற்றுவிக்கும் ஏணிபக்தி, இதில் தானாக ஏறமுடியாது பகவான் ஏற்றிவிட்டாலன்றி என்பது பக்தன் நிலை. கர்மடர்கள் செய்யும் கர்மா, ஞானம், யோகம் என்ற ஏணியைப்பற்றி ஏறி பகவானை அடையவேண்டும் என்று முயற்சிப்பதால் சரணாகதி என்பது இங்கே பூர்ணமாய்

Koviloor Digital Library

பிரதிபலிக்கவில்லை என்பதால் மதம் அல்லது கர்வம் மற்ற மார்க்கங்களில் தோன்றுவதால் பக்தியே ஸ்ரேஷ்டமானது என்று முடிவாகிறது.

"த்ருணாதபி சுநீசேன தரோரபி ஸஹிஷ்ணுனா
அமானினா மானதேய: கீர்த்தனீய: ஸதாஹரி:

என்கிறார் மஹாப்ரபு ஸ்ரீக்ருஷ்ண சைதன்யர். தன் சிக்ஷாஷ்டகத்தில் புல்லைவிட தன்னை நிலை தாழ்ந்தவனாக தன்னை நினைப்பவனாகவும் எவ்வாறு மரம் தன்னை வெட்டவந்தவனுக்கும் தன்நிழலை அளித்து அவனை சுகப்படுத்துகிறதோ அதுபோலவும், பொறுமையின் எல்லைநிலமாகவும், அகங்காரமற்றவனாய் பிறரை எந்தநிலையிலும் மதிக்கத்தக்க குணமுடையவனாயிருந்து எப்போதும் ஹரிநாம கீர்த்தனம் செய்பவனே பக்தன் என்கிறார்.

ஸூத்ரம் 28 : "தஸ்யா ஞானமேவ ஸாதனமிக்யேகே"

பக்திக்கு ஞானமே முக்கிய சாதனம் என்று சிலரின் அபிப்ராயமாக நாரதர் இங்கே சொல்கிறார். இதற்குமுன் ஸூத்ரங்களில் பக்தியே எல்லாவகையான சாதனைகளுக்கும் அடிப்படை என்று வலியுறுத்தி கூறிவந்தவர் இங்கு மற்றவர் அபிப்ராயத்தால் பக்திக்கு ஞானமே முக்கிய சாதனம் என்று சொல்வது தன் அபிப்ராயமாக சொல்லவில்லை என்பதைக் காட்டுகிறது. ஞானம் என்றால் என்ன? பகவானை அடைவதற்கான உரிய வழிகளை ஆய்ந்து தெளிவது என்று கொள்ளலாம். அப்படி ஆராய்ந்து தெளிந்த ஞானத்தால் பக்தியே பகவானை அடைய சுலபமான வழி என்று தெளிவதுபோக பக்திக்கு ஞானமே முக்கியம் என்பது முற்றிலும் மாறுபட்ட கருத்தாய் தெரிகிறதே எனில் எதையும் ஆய்ந்து, ஆராய்ந்து அறிவதே ஞானம். எனவே பகவானைப் பற்றிய பரத்வம் அறியாமல் பக்திசெய்வதைக் காட்டிலும் கோபிகைகளைப்போல கண்ணன் பகவானே என்ற "ஞானம்" ஏற்பட்டு செய்யும் பக்தியே இங்கே பக்திக்கு ஞானமே முக்கிய ஸாதனம் என்று கொள்ளலாம். பகவான் கீதையில் தன்துயர்தீர பக்திசெய்கிறார்கள். பொருள்வேண்டி பக்தி செய்கிறார்கள். ஞானம்வேண்டி பக்தி செய்கிறார்கள் என்கிறான். ஞானம் கைவரப்பெற்ற பின்பும் ஏன் பக்திசெய்கிறான் என்ற கேள்விக்கு உண்மையான ஞானியின் ஸ்பாவமே பக்தி என்றும் பக்தி செய்யாமல் ஞானியால் இருக்க முடியாது என்றும் பொருள்கொள்ள வேண்டும்.

ஆனால் ஐந்துவயது பாலகனான துருவன் எந்த ஞானத்தைக்கொண்டு தபஸினால் பகவானை ப்ரத்யக்ஷமாக தரிசனம் செய்தான். காட்டு மிருகங்களை வேட்டையாடி பச்சை மாமிசங்களைப் புசித்துவந்த சபரி எந்த ஞானத்தைக்கொண்டு ராமதரிசனம் பெற்றாள்.

Koviloor Digital Library

எனவே பக்தியே ஞானத்துக்கு சாதனம் என்பது முடிந்த முடிவானதால் அதையே ஞானமே பக்திக்கு சாதனம் என்று சமாதானமாக ஏற்றுக்கொள்வதில் தவறில்லை.

ஸுத்ரம் 29 : "அன்யோன்யாச்ரயத்வ மித்யன்யே"

பக்தி, ஞானம் இவ்விரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்தே இருக்கின்றன என்பது சிலரது அபிப்ராயம் என்கிறார் நாரதர். ஞானமே பக்திக்கு முக்கிய சாதனம் என்று இதற்கு முந்திய ஸுத்ரத்தில் சிலரது அபிப்ராயமாக கூறியதை இங்கே ஊர்ஜிதம் செய்வதுபோல் இருக்கிறது. பக்திக்கு ஞானம் மேலும் செறிவூட்டுகிறது. ஞானம் மட்டும் இருப்பின் அது பூர்ணமாகாது என்பதோடல்லாமல் பகவானின் தத்துவம் ஞானம் என்பதால் அந்த தத்துவத்தின் தெளிவே பக்தி என்பதுஅறியாத ஞானம் வீண் என்றாகிறது. "ஞானமில்லாத பக்தி எவ்வாறோ அதுபோலவே பக்தியில்லாத ஞானமுமாகும்" என்பதையே இங்கே தெளிவுபடுத்துகிறார். ஞானமும், பக்தியும் ஒன்றையொன்று சார்ந்து இருப்பதுதான் இரண்டுக்குமே பெருமை என்பது மட்டுமல்லாமல் பூர்ணத்துவமும் ஆகிறது. இதையே பகவான் கீதையில்

"பக்த்யா மாமபி ஜாநாதி யாவந்யஸ் சாஸ்மி தத்வத:
ததோமாம் தத்த்வதோ ஜ்ஞாத்வா விஸதே ததநந்தரம்" 18-55

பக்தியின் மூலம் பரபிரும்மமான என்னை நான் யார், எத்தன்மையானவன் என்ற உண்மையை உள்ளபடியே தன்ஞானத்தால் என்னை தத்வரீதியாக அறிந்து கொள்கிறானோ அவன் அந்த க்ஷணமே என்னை வந்தடைகிறான்" என்கிறார்.

ஸுத்ரம் 30 : "ஸ்வயம் பலரூபதேதி ப்ரம்மகுமார:"

மற்றவர் அபிப்ராயமாக இதுவரை கூறிவந்த நாரதர் இங்கே தன் அபிப்ராயமாக தன் ஹ்ருதயத்தை சமர்ப்பணம் செய்கிறார். "பக்தியே பயனாகவும் பக்தியே அதன் பலனாகவும் இருக்கிறது" என்று பக்தியே பகவானை அடைய சாதனமாகவும் பக்தியே ஸாத்யமாகவும் இருக்கிறது என்பதால் பக்தியே பகவான் என்றாகிறது. பொருள்வேண்டி பக்திசெய்தல், புகழ்வேண்டி பக்தி செய்தல் என்பது போல் ஞானம் வேண்டி பக்தி செய்வதும் உண்டு. ஆனால் ஞானம் கைவரப்பெற்ற பின்பும், தெளிவான ஞானியான பின்பும் ஏன் பக்தி செய்கிறார்கள் என்ற கேள்விக்கு "பக்தி செய்யாமல் ஞானியால் இருக்க முடியாது" என்ற பதிலில் பக்தி செய்வதால் ஏற்படும் ஆனந்தத்திற்காகவே பக்தி செய்கிறார்கள் என்றாகிறது. முதல்

Koviloor Digital Library

ஸுத்ரத்திலேயே பக்தி என்பது பரமப்ரேம ரூபமானது என்று பக்தியின் ஸ்வரூபத்தைக் காட்டிவிட்டதாலே அதன் முழுபாவமும் தொனிக்க நாரதர் இந்த ஸுத்ரம் அருளினார் போலும். ப்ரேமஸ்வரூபனான பகவானிடத்திலே மேலும் ப்ரேமையே செய்ய அந்த ப்ரேமையே இவர்களுக்கு ப்ரதிபலனாக கிடைக்கிறது என்பதால் பக்தி என்பது ஒரு செயலாகவோ (க்ரியை) கர்மாவாகவோ, தபஸாகவோ இல்லாமல் ஒன்றைவிட்டு ஒன்று நீங்காத அன்பும், ஆனந்தமும் இந்த பக்தியாலே பெருகிவிடுவதால் ஆத்மஸுகத்துடன் கூடி இவனையே அன்புமயமாக்கி விடுவதால் பக்தி என்பது இங்கே செய்யப்படும் காரியம், ப்ரேமையுடன் அர்பிக்கப்படும் காரியம் ப்ரேமையாகவே ஆகிவிடுவதால் ப்ரேமஸ்வரூபமான பகவான், ஆராதிக்க சுத்தப்ரேமை, ஆராதிப்பவனும் ப்ரேமஸ்வரூபன் என்றாகி விடுவதால் இங்கே "ஸுத்தப்ரேமை" தவிர பக்தனுக்கு வேறு ஏதும் புலப்படவழி இல்லாமல் போவதால் இந்த பக்தனுக்கு மட்டும் எல்லோரிடத்திலும் எல்லா உயிர்களிடத்திலும் அன்புசெய்ய முடிகிறது. இவனுக்கு வேண்டாதவன் என்றோ விரோதி என்றோ துஷ்டன் என்றோ எவரும் இல்லாமல் எல்லோருமே ப்ரேமமயமாய் தென்படுவதால் எல்லாவற்றிலும் இவன் ப்ரேமையே செய்கிறான். இந்த ப்ரேம ஸாகரத்தின் ஒருதிவிலையேனும் எவர்மேல் பட்டாலும்கூட அவனும் சித்தஸுத்தி அடைந்தவனாக ஆவதில் வியப்பென்ன. எனவே பகவானிடம் இவன் பக்தி ஒன்றையே பக்திக்காக செய்வதால் தான் சூடிக்கொடுத்த நாச்சியார் ஸ்ரீ ஆண்டாளும்

"எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்தம்மோடு
உற்றோமேயாவோம் உமக்கேயாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்று" என்கிறார் போலும்.

ஸுத்ரம் 31 & 32 "ராஜக்ருஹபோஜனாதிஷ் ததவை த்ருஷ்டத்வாத்"
"நதேந ராஜபரிதோஷ க்ஷுதா சாந்திர்வா"

இந்த இரண்டு ஸுத்ரங்களுக்குமே சாதாரண அர்த்தம் விசேஷ அர்த்தம் என்று இரண்டு வகையான பொருள் கொள்ளலாம்.

அழகிய அரண்மனையிலேயே சாப்பிட்டவன், அந்த அரண்மனை, சாப்பிட்ட சாப்பாடு இவைகளைப் பற்றிய அறிவினால் மட்டும் திருப்திப்பட்டுக்கொள்ள முடியாது. சாப்பாடாகிற உணவினை உண்ட அனுபவத்தாலே திருப்தியடைந்தவனாகிறான். அதுபோல் அரண்மனை பற்றிய அறிவும் (ஞானமும்) சாப்பாட்டின் தன்மைபற்றிய அறிவும் (ஞானமும்) இருந்து என்னபயன்? இரண்டையுமே அனுபவிப்பதில் அல்லவோ உண்மை பயனுண்டு.

அதுபோல் ஒரு அரண்மனையில் சாப்பிடுபவர்களால் அரசனுக்கு என்ன பெருமை வந்துவிடப்போகிறது. சாப்பிட்டவன்தான் நான் அரண்மனையில் விருந்து சாப்பிட்டேன் என்று பெருமை சொல்லிக்கொள்வான். அரண்மனையில் கலந்துவிட்டதனால் அரண்மனைக்கு பெருமை இல்லாமல் கலந்து கொண்டவனுக்கே பெருமை என்பதுபோல் மற்றவைகளாகிய ஞானம், வைராக்யம் போன்றவைகளுக்கு பக்தியுடன் கலந்ததாலேயே பெருமை (விருந்தாளிபோல்). ஸ்வயம் பக்தி மட்டும் தனிப்பட்டே எதிலும் சம்பந்தப்பட்டாலும், சம்மந்தப்படாவிடினும் பெருமையுடன் ஒளிவீசும் (அரண்மனைபோல). இதனாலேயே பக்தியுடன் கலந்ததினால்தான் ஞானம், வைராக்யம் என்பனவற்றுக்கு பெருமையுண்டே தவிர இவைகளின் சேர்க்கையால் பக்திக்கு ஏதும் பெருமை கூடிவிடப்போவதில்லை. 28,29,30 ஆகிய ஸூத்திரங்களுக்கு பிறகு இந்த 31,32 வது ஸூத்திரங்களையே முடிவாக கொள்ளலாம். “பக்தியே ஸ்ரேஷ்டமானது. தனித்து ப்ரகாசிக்கவல்லது”. ஞானம், வைராக்யம் என்பதெல்லாம் பக்தியை ஆஸ்ரயிப்பதாலேயே பெருமை கொள்கிறது என்று நாரதர் முடிவாக சொல்லும்போது பக்திக்கு ஞானமே முக்கிய சாதனம் என்பதையோ பக்தியும் ஞானமும் ஒன்றுக்கு மற்றொன்று ஆதாரமானது என்ற மற்ற அபிப்ராயங்களை நாரத பகவான் பூர்ணமாக அங்கீகரிக்கவில்லை என்று கொள்ளலாம்.

ஸூத்ரம் 33 : “தஸ்மாத் ஸைவ க்ராஹ்யா முமுக்ஷுபி:”

முமுக்ஷுக்கள் எனப்படுவோர் மோக்ஷத்திலேயே நாட்டமுடையவர்கள். ஞானம், வைராக்யம் இவைகளை ஏணியாகக் கொண்டே இந்த மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைய எண்ணுபவர்கள். ஆனால் இவர்களும்கூட பக்தியை ஆஸ்ரயமாகக் கொள்ள வேண்டும் என்கிறார் நாரதர். பக்தி ஸ்வயம் பலரூபமானது என்று கூறிவிட்டதால் முக்திக்கும் பக்தியே சாதனமாகிறது. பக்தி ஒன்றையே பற்றிச்செல்லும் முமுக்ஷுக்கள்தான் எந்த நிலையிலும் தவறாமல் தங்கள் லட்சியமான மோக்ஷத்தை எட்டமுடியும் என்கிறார் நாரதர். முமுக்ஷுக்களான மதுசூதனஸரஸ்வதி ஸ்வாமிகள், சதாசிவப்ரும்மேந்ரர் இதற்கு இந்த சூத்திரத்திற்கு உதாரணமாக திகழ்பவர்கள். அத்வைத சித்தாந்தத்தின் ஆழம் கண்டவர்களான இவர்கள் க்ருஷ்ணபக்தி ப்ரவாஹத்தில் எப்படி மூழ்கிப்போனார்கள் என்பதை இவர்களுடைய க்ரந்தங்களிலும் கீர்த்தனங்களிலும் காணலாம். பக்திமார்க்கத்தில் நின்ற இந்த முமுக்ஷுக்களின் வாயிலிருந்து பிரவாஹமாக வந்துள்ள க்ரந்தங்கள் கீர்த்தனங்களில் இவர்களின் ஆத்மானுபவம், ஹ்ருதயானந்தம் எப்படி வெளிப்பட்டுள்ளது என்பதே இதற்கு சாட்சி.

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR A. No. 11978

ஸூத்ரம் 34 "தஸ்யா: ஸாதனானி காயந்த்யாசார்ய:"

இதுவரை பக்தியின் தனித்தன்மைகளையும் அதன் பெருமைகளையும் கூறிவந்த தேவரிஷி நாரதர் அந்த பக்தியின் லக்ஷணங்களை மஹான்களின் திவ்ய திருமொழிகளின் மூலமாக நமக்கு உணர்த்த விரும்புகிறார். இத்தகைய பெருமைமிகு பக்தியினை அனைவரும் அடைந்திட வழியினை, மார்க்கத்தை மற்ற மஹான்கள் எல்லோரும் எவ்விதம் காட்டியுள்ளனர் என்பதை தெரிவிக்கிறார். பக்தி செய்வதில் பாகுபாடில்லை. வர்ணாச்ரமதர்மங்களோ, செய்யும் தொழிலோ, உலகியலில் இயற்கையிலேயே உள்ள ஏற்றதாழ்வுகளோ பக்தி மார்க்கத்துக்கு இடையூறு இல்லை. பக்தி என்பது மனிதகுலத்திற்கு பொதுவானது. ஏன் மிருகங்கள்கூட, தாவரங்கள்கூட தங்கள் பக்தியினை வெளிப்படுத்திய விதத்தினை ஸ்ரீமத்பாகவதம் மிக அழகாக விளக்குகிறது. இத்தகைய பக்தி கைகூட என்ன செய்யவேண்டும் என்று மஹான்கள் கூறியுள்ளனர் என்பதனை நாரதர் வாய்மொழிமூலமாக இனிகாண்போம்.

ஸூத்ரம் 35 : "தத்துவிஷயத்யாகாத் ஸங்கத்யாகாச்ச"

உலகில் விஷயங்களும் விஷயசுகங்களும் அனந்தம். இந்த உலக விஷயங்களிலும், விஷயசுகங்களிலும் மூழ்கிப்போனவர்களும் அனந்தம். உலகமாயையின் பிடியில் சிக்குண்ட எவரும் இந்த விஷயங்களை தள்ளிவிடமுடியாது. ஆனால் இந்த இரண்டையுமேதான் முதலில் தியாகம் செய்யவேண்டும். விஷயங்களை விஷத்தைப்போல் புறம்தள்ளவேண்டும். பக்திக்கு அனுசரணை இல்லாத எல்லா விஷயங்களும் விஷயிகளும் தள்ளப்பட வேண்டும். இவை தியாகம் செய்யப்பட வேண்டும். மனைவியே ஆனாலும் மக்களே ஆனாலும் பக்திமார்க்கத்துக்கு அனுகூலமாக இல்லாதுபோனால் தியாகம் செய்யப்பட வேண்டியவர்களே. தனது பக்த, பாகவத கைங்கரியத்துக்கு அனுசரணை இல்லாத சொந்த மனைவியை தியாகம் செய்தார். எதிராஜர் ராமானுஜர். இப்படி விஷயங்களையும், விடியஸங்கம் இரண்டையும் தியாகம் செய்தாலே இவனது பக்தியானது வளர்ச்சியடையும். உலக விஷயங்களில் மனதை செலுத்துவதாலும் பக்தி இல்லாதவர்களின் உறவாலும் பக்தி உணர்வுகளுக்கு பாதகம் ஏற்படும். இடைவிடாத பகவத் தியானமே பக்திக்கு அடிப்படை. உலகியல் விஷயங்களும் விஷயிகளும் பகவத் தியானத்துக்கு இடையூறாக அமைந்து விடுவதால் இவைகளை ஒதுக்கினாலேயே பகவத் சிந்தனையின்பால் தன்மனதை திருப்பி பூர்ணபக்தி ரஸத்தை அனுபவிக்கமுடியும்.

"ஒருமையுடன் நின் திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்து புறம்ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்"

Koviloor Digital Library

என்கிறார் வள்ளலார்.

ஸூத்ரம் 36 : "அவ்யாவ்ருத பஜனாத்"

அகண்டமான பஜனத்தினாலேயே பக்தி வளரும். பஜனம் என்பது பகவத்சிந்தனைக்குரிய மார்க்கங்களாகும். நாமகீர்த்தனம், நாமபஜனம், நாமஸ்மரணம், பூஜனம், பகவத்ஸ்ரவணம், படனம் எல்லாமே பஜனமாகும். தன்னுடைய அன்றாட வாழ்க்கையில் எந்தநேரமும் எந்தவகையிலாவது பகவத் பஜனத்தைத் தொடர்வதே பக்திபல்கி பெருக வழிசெய்கிறது. நண்பர்களிடம் பேசும்பொழுதும் அவ்வப்போது பகவத்விஷயம், படிக்கின்ற வகையிலே பகவத் விஷயம், தனது லௌகீகமான கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போதே மனத்திற்குள் நாமஜபம், என தன்பக்தியை வளர்த்துக்கொள்ள வேண்டும். அகண்டமான, தடங்கலற்ற இடைவிடாத பஜனம் என்னும்போது ஏதோ ஓர் அறைக்குள் கதவுகளை தாழிட்டுக்கொண்டு அமர்ந்து செய்யவேண்டிய பஜனம் என்று பொருள் கொள்ளலாகாது. பஸ்ஸிற்காகக் காத்து நிற்கும்போதும் நாமஜபம், பஸ்ஸில் பயணிக்கும்போதும் நாமஜபம், ஊழியம் செய்துகொண்டு இருக்கும்போதுகூட நாமஜபம், நேரம் கிடைத்தபோதெல்லாம் நாமகீர்த்தனம், கதாஸ்ரவணம், ஸத்ஸங்கம் என்று பக்தியானது இவன் விஷயத்தில் பிரிக்கமுடியாததாகி பரிணமிக்க ஆரம்பித்து வருகிறது. இதையே நம்மாழ்வார் திருவாய்மொழியில்

"கங்குலும் பகலும் கண்துயிலறியாள்
கண்ணநீர் கைகளால் இறைக்கும்
சங்கு சக்ரங்கள் என்று கைகூப்பும்
தாமரைக்கண் என்றே தளரும்
எங்கனே தரிக்கேன் உன்னைவிட்டென்றும்
இருநிலம் கைதுழா விருக்கும்
செங்கயல்பாய்நீர்த் திருவரங்கத்தாய்
இவள்திறத்தென் செய்கின்றாயே" என்கிறார்.

ஸூத்ரம் 37 "லோகேபி பகவத்குண ஸ்ரவண கீர்த்தனாத்"

பகவானுடைய அனந்தகல்யாண குணங்களைக் கேட்பதாலும், பகவானுடைய புகழ்பாடுவதாலும் பக்திமான் பரிணமிக்கிறான். இங்கே "லோகேபி" என்ற சொல்லுக்கு "பரமலௌகீகமானவன்" என்பதுகூட பொருத்தமான அர்த்தமாயிருக்கும். எனவே பக்தர்கள் என்பவர்கள் தனியானவர்கள் என்றும் லோகத்துடன் ஒட்டாதவர்கள் என்றும் எண்ணவேண்டியதில்லை. பரமலௌகீகர்கள்கூட பகவத் குணங்களைக் காதாரக் கேட்பதாலும், பகவானைப் பாடுவதாலும் பக்தர்கள் கூட்டத்தில்

Koviloor Digital Library

சேர்ந்து கொள்கிறார்கள் என்று கொள்ளலாம். உலகில் சிறந்த மஹனீயர்கள் என்று இன்று கொண்டாடப்படுகிற மகான்கள் எல்லோருமே அநேகமாக லௌகீகவாழ்க்கையில் இருந்துகொண்டே பக்தஸ்ரேஷ்டர்களாக விளங்கியவர்கள். இவர்களை இந்த நிலைக்கு உயர்த்தியது அவர்களது அகண்டமான பகவத் பஜனம், ஸ்ரவணம், கீர்த்தனம் இவைகளே. இவர்கள் வேறு எந்த யாக, யோக, பிராணயாம, பிரத்யாகார ஸாதனைகளாலும் உயரவில்லை. பக்தி ஒன்றினாலேயே உலகத்தைப் பாவனமாக்கினார்கள். தனது மனதை அடக்கி, சிந்தனையை ஒருமுகப்படுத்தி, பகவத்தியானத்தை நெஞ்சிலே நிலைநிறுத்த இந்த பஜனம், ஸ்ரவணம், கீர்த்தனமே. இவைகளே உயர்ந்த ஸாதனங்கள் என்பதை ஆத்மாராமர்களான பக்தர்கள் உலகுக்கு உணர்த்திப் போயிருக்கிறார்கள்.

"அபவித்ர, பவித்ரோவா ஸர்வாவஸ்த்தாம் கதோபிவா
யத்ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸபாஹ்யாப் ப்யந்தரசுசி:"

அசுத்தமாயினும், சுத்தமாயினும் எந்தநிலையில் இருந்தாலும் யார் தாமரைக்கண்ணனான பகவானை நினைக்கிறானோ அவன் உள்ளும் புறமும் சுத்தமானவனே.

இதையே பகவான் கீதையில்

"தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு மாமநுஸ்மர யுத்யச
மய்யர்பித மநோபுத்திர் மாமேவைஷ்யஸ்ய ஸம்ஸயம்" 8-7

"அர்ஜுனா! எல்லாக் காலங்களிலும் இடைவிடாமல் என்னையே நினைத்துக்கொண்டிரு. போர்செய்தாலும் என்னிடத்தில் அர்ப்பணிக்கப்பட்ட மனத்துடன் இரு. என்னையே நீ சந்தேகமின்றி வந்து அடைவாய்" என்கிறார்.

ஸூத்ரம் 38 : "முக்யதஸ்து மஹத்க்ருபயைவ
பகவத் க்ருபா லேசாத்வா"

பக்தியானது மனதில் வளரஆரம்பித்த நிலையில் மஹான்களுடைய எல்லையற்ற கருணையாலும், பகவத் க்ருபையாலும் உள்ளத்திலே உயிர்பெற்ற பக்தியானது செழித்துவளர ஆரம்பித்து நிலையாக நிலைத்து நின்றுவிடுகிறது. மஹான்களுடைய ஸங்கமே பக்திக்கு போஷணமானது. மஹான்களுடைய நேரடிப்பார்வைகூட அல்ல, கடைக்கண் பார்வையினாலேயே பக்தியானது இந்த மஹனீயர்கள்பால் ஏற்பட்டு அதன் பலனாக பகவானுடைய க்ருபையும் கிட்டிவிடுகிறது. பகவத் க்ருபைக்கு ஆதாரம் இங்கே மகத் க்ருபை என்றாகிறது. மகத்துகள் என்ற ஏணியைப்

பற்றினாலே அதுபகவத் க்ருபையை அடையப் பண்ணிவிடும். இந்தமஹான்கள் அவ்யாஜக்ருபாபூர்ணர்கள். ஒருவன்பால் காரணமின்றியே, தகுதியின்றியே அனுக்ரஹிக்கக் கூடியவர்கள். ஒருவனது பூர்வஜன்ம புண்ணியமே இத்தகைய மஹனீயர்கள் ஸங்கம் கிடைக்க காரணமாயிருக்க வேண்டும். இல்லை எனில் புழுவைப்போல், கொசுவைப்போல் இங்கே கோடானுகோடியாக நெளியும் மனிதர்கள் மந்தையில் இந்த ஜீவனை மட்டும் இம்மஹான் கடாக்ஷிக்கக் காரணம் என்ன? பூர்வ ஜன்மஸுஹ்ருதம், முன்னோர்கள் செய்ததவப்பயன் இவைகளின் பலத்தாலே இந்த மஹான்கள் ஸங்கம் கிடைக்கிறது. பகவான் ஆதிசங்கரரும்

"ஸத்ஸங்கத்வே நித்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிச்சலதத்வம்
நிச்சலதத்வே ஜீவன்முக்திம்"

என்கிறார் தனது பஜகோவிந்தம் கீர்த்தனையில். பற்றற்ற நிலையை ஸாதுஸங்கமே தரும். பற்றற்ற நிலையால் மோஹமாகிய துராசைகள் மனதைவிட்டு நீங்கும். மோஹம் நீங்கினால் திடமான தத்வஞானம் உண்டாகும். தத்வக்ஞானத்தால் ஜீவனானவன் முக்திநிலை பெறுவான்."

ஸ்ரீமத்பாகவதத்தில் நாரதர் தனது கதையை ஸ்ரீவ்யாஸரிடம் சொல்லும்பொழுது பூர்வஜன்மத்தில் வீடுகூட்டி பிழைக்கும் சாதாரண வேலைக்காரிக்கு குழந்தையாக இருந்த நான் ஸாதுக்களின் ஸங்கத்தாலே எப்படி உயரிய நிலை கைவரப்பெற்று மறுஜன்மத்தில் நாரதராக அவதரித்தேன் என்பதை எவ்வளவு விரிவாக சொல்கிறார்!

"இத்தம் ஸரத் ப்ராவ்ருஷிகாவ்ருது ஹரேர்
விஸ்ருண்வதோமே (அ) நுஸவம் யஸோமலம்!
ஸ்ங்கீர்த்யமானம் முனிபிர் மஹாத்மபிர்
பக்தி:ப்ரவ்ருத்த ஆத்மரஜதமோபஹா"

கபீர்தாஸ், முஸல்மான், ஏழை நெசவாளி. ஆனால் சிறந்த ராமபக்தர். ஸதாஸர்வகாலமும் ராமநாம நிஷ்டையிலேயே மூழ்கியிருப்பவர். இவர் ஒரு துணிநெய்தார் என்றால் அது இவர் பாதி ராமன் பாதி நெய்தது என்பார்கள். இத்தகைய மஹானுக்கு ராமானந்தரிடம் நாமதீட்சை பெறவேண்டும் என்ற ஒரு ஆசை. ஸ்ரீராமனே ஏற்படுத்திக் கொடுத்தான்போலும். காசியில் ராமானந்த மடத்திற்குச்சென்று அங்குள்ள ராமானந்தரின் சிஷ்யர்களிடம் தன் அபிலாக்ஷையைத் தெரிவிக்கிறார். சிஷ்யர்களோ இவரை வேறுமதத்தவர் என்பதால் மடத்தினுள் உள்ளே அனுமதிக்கவில்லை. சஞ்சலப்பட்ட மனத்தினராய் மிகவும் மனம்வாடி

Koviloor Digital Library

கங்கைக்கரையை அடைந்து அங்கே ஒருபடிக்கட்டில் அமர்ந்து இரவு முழுவதும் அந்த படிக்கட்டிலேயே படுத்துக்கிடக்கிறார். அதிகாலையிலேயே யதிச்ரேஷ்டரான ராமானந்தர் அனுஷ்டானத்திற்காக சிஷ்யபரிவாரங்களுடன் கங்கைக்கரையை அடைந்து கங்கை படித்துறையில் இறங்குகிறார். இருளாக இருந்ததால் படிக்கட்டில் இருக்கும் கபீர்தாஸரைக் கவனிக்காமல் அவர் தலையிலேயே தன் சரணங்களை வைக்க, அதுமனிதராக இருப்பதை உணர்ந்து "ஹே ஸீதாராம்" என்று கூவிக்கொண்டே குதிக்க, கபீர்தாஸரோ வந்தவரும், தன் சிரஸில் தனது சரணங்களை வைத்தவரும், ஸீதாராம் என்ற நாமத்தை சொல்லியவரும் ராமானந்தரே என உணர்ந்து ஆனந்தக் கூத்தாடுகிறார். "என்னே ராமக்ருபை. எனக்கு ஸத்குருவான ராமானந்தரின் பாததீக்ஷையும் பெற்று, தாரக மந்திரமும் அவர் வாயேலேயே உபதேசிக்கப் பெற்றேனே என்னே பகவத்க்ருபை என்னே மஹத்துக்களின் க்ருபை என்று எண்ணி ஆனந்த பரவசமானார்.

மஹான்களுடைய க்ருபைகிட்ட மகத்துக்களின் க்ருபையும், மஹத்ஸங்கத்திற்கு பகவத்க்ருபையுமே காரணம் என்று இந்த சரித்திரத்திலிருந்து அறியமுடிகிறது.

ஸூத்ரம் 39 : "மஹத் ஸங்கஸ்து துர்லபோ(அ)கம்யோ அமோகச்ச"

மஹத்துக்களான ஸாதுஸங்கமோ எனில் கிடைத்ததற்கு அரியது. துர்லபமானது. கிடைத்துவிட்டாலோ அதனால் பெறப்படும் பயனோ அளவிடற்கரியது. வாழ்நாள் முழுவதும் ஸத்ஸங்கம் தேடியும் கிடைக்காத நிலையும், எதிர்பார்க்காமலேயே மஹான்கள் தாங்களாகவே வலியவந்து அருள்பொழிந்த நிலையும் உண்டு. அத்தகைய ஸத்ஸங்கத்தை, கிடைத்தற்கரியதை தேடிஅலைய வேண்டும். அரிதானது என்பதாலேயே கிடைக்காது என்று இருந்துவிடக்கூடாது. ஸத்ஸங்கத்திற்கு ஏங்கும் மனநிலையில்தான் மஹான்கள் நம்முன்தோன்றுவர். கபீர்தாஸை தேடிப்போன ராமானந்தரைப்போல கர்பத்திலேயே ப்ரஹ்லாதனுக்கு உபதேசம் செய்த நாரதர் போல தேடாமலேயே ஸத்ஸங்கம் கிடைக்கும். வலியவந்து ஆட்கொள்ளும். மஹான்களின் கிடைத்தற்கரிய ஸங்கம்வேண்டும் என்று ப்ரார்த்தித்து தாபப்படும்போது பகவத்க்ருபையால் ஸாதுக்கள் தரிசனம் கிடைக்கும் அப்பேர்ப்பட்ட மகத்துக்களின் ஸங்கத்தாலேயே பக்திஏற்பட்டு வளர்ச்சி அடையும்.

ஸூத்ரம் 40 : "லப்யதேபி தத்க்ருபயைவ"

இத்தகைய மஹான்களின் ஸங்கமும் பகவத் க்ருபையாலேதான் கிடைக்கும் என்கிறார் நாரதர். பகவத்ப்ரேரணையே நம்மை ஸத்ஸங்கத்தில்

Koviloor Digital Library

கொண்டு சேர்க்கிறது. பகவத்க்ருபைக்கு மஹான்களே காரணம் எனகூறிய நாரதர் இங்கே மஹான்கள் க்ருபைக்கு பகவத்ப்ரேரணையே காரணம் என்று கூறுவதால் இரண்டு க்ருபைகளுமே ஒன்றை ஒன்று சார்ந்து இருக்கிறது என்றும் கொள்ளலாம். "யம் ஏஷவ்ருணுதே தேனலப்ய:" என்கிறது உபநிஷத். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்கிறார் மாணிக்கவாசகப் பெருமான்.

ஸூத்ரம் 41 : "தஸ்மிம் ஸ்தஜ்ஜனே பேதாபாவாத்"

மஹான்களுக்கும், பகவானுக்கும் பேதம் கிடையாது என்கிறார் நாரதர். பகவத்க்ருபையால் ஸத்ஸங்கமும் ஸத்ஸங்கத்தால் பகவத்க்ருபையும் கிடைக்கும் என்பதால் பகவானும் மஹான்களும் ஒருவரே என்றும் இவர்களுக்குள் பேதம் கிடையாது என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

"சங்கரோ சங்கர சாக்ஷாத் வ்யாஸோ நாரயணோ ஹரி:" என்று ஆதிசங்கரரே பகவான் சங்கரர் என்றும் ஸ்ரீமன் நாராயணனே வ்யாஸபகவான் என்றும் போற்றப்படுவதில் இருந்து இந்த உண்மையானது விளங்குகிறது. இதுபோலவே உலகில் உத்தமோத்தமான எல்லாமஹான்களுமே பகவத் அம்சமாக அவதரித்தவர்களே. ராம, க்ருஷ்ணாதி அவதாரங்கள் மட்டும் பகவத் அவதாரங்கள் இல்லை. ஸாது ஸ்ரேஷ்டர்களான எல்லா மஹான்களின் அவதாரங்களும் பகவத் ஸ்வரூபம் என்பதையே இந்த ஸூத்திரம் தெளிவாக சொல்கிறது. பகவான் கீதையில்

"உதாரா: ஸர்வ ஏவைதே ஞானி த்வாத்மைவ மேமதம்
ஆஸ்தித: ஸஹியுக்தாத்மா மாமேவாநுத்தமாம்கதிம்" 7-18

"(நால்வகையாக) கூறப்பட்ட பக்தர்கள் யாவருமே சிறந்தவர்களே. ஆனால் ஞானியோ என்னுடைய ஸ்வரூபமே என்பதே என்எண்ணம். ஏனென்றால் என்னிடம் ஒன்றிய மனமும் புத்தியுமுடையவனான ஞானியாகிய பக்தன் மிகவும் உயர்ந்த நிலையாகிய என்னிடமே நிலைபெற்று நிற்கிறான்". என்கிறார்.

ஸூத்ரம் 42 : "ததேவ ஸாத்யதாம் ததேவஸாத்யதாம்"

ஸாதுக்களின் ஸங்கமே நாடி அடையத்தக்கது
ஸாதுக்களின் ஸங்கமே தேடி அடையத்தக்கது

என்கிறார். நாரதர் அறைகூவல் விடுத்துசொல்கிறார். ஏனெனில் ஸாதுக்களின் கருணாகடாக்ஷத்தினால் அல்லவோ நாரதருக்கு பிரம்மபுத்திரராகும் பாக்கியம் கிட்டியது. ஸாதுக்களின் ஸங்கமஹிமையை உலகுக்கு உபதேசிக்கவல்ல

Koviloor Digital Library

யோக்யதை நாரதரைவிட வேறுயாருக்கு இருக்கிறது? அவரே ஸாதுவாக இருந்து வால்மீகி, வ்யாஸர், துருவன் ப்ரஹ்லாதன் என்று எண்ணற்ற மஹான்களுக்கு உபதேசம் செய்து இன்று ஸத்ஸங்கத்தின் பெருமையால் பக்தமண்டலம் பிரகாசிக்கச்செய்த நாரதரே ஸாதுஸங்கமே அடையத்தக்கது என்னும்போது சாதாரணமாக தன்னை ஒரு ஆஸ்திகன் என்று எண்ணிக்கொண்டிருப்பவனுக்கு ஸாதுஸங்கத்தைத் தவிர வேறு கதி ஏது?

ஸூத்ரம் 43 : "துஸங்க ஸர்வதைவ த்யாஜ்ய:"

துஷ்டஸங்கத்தை ஸர்வதாவிலக்க வேண்டும் என்கிறார் நாரதர். இது ஸத்ஸங்கத்தில் இருக்கவேண்டும் என்பதைவிட துஷ்டஸங்கத்திலிருந்து விலகி இருத்தல் என்பது நூறுமடங்கு முக்கியமானது. ஸத்ஸங்கம்தரும் எல்லா பலன்களையும் துஷ்டஸங்கம் அழித்துவிடும் என்பதால் ஸத்ஸங்கத்தில் இருத்தல் என்பதைவிட துஷ்டஸங்கத்தை விலக்குவது மிகமிக அவசியமானது. களை எடுக்காமலேயே பயிரை எவ்வளவு பாடுபட்டு வளர்த்தாலும், பயிருக்கு இடும் உரமெல்லாம் களைக்கே ஆகி, களையே பயிரை அழித்துவிடும் என்பதுபோல் துஷ்டஸங்க தொடர்பால் ஸத்ஸங்கத்தால் கைகூடிய பலன்கள் எல்லாம் பாழ்பட்டுப்போகும் என்பதால் துஷ்டஸங்கம் ஸர்வதா வெறுக்கத்தக்கது, விலக்கத்தக்கது என்றாகிறது.

ஸூத்ரம் 44 : "காம க்ரோத மோஹ ஸ்ம்ருதி ப்ரம்ச
புத்திநாச ஸர்வநாச காரணத்வாத்:"

துஷ்டஸங்கம் ஏன் விலக்கப்படவேண்டும் என்று சொல்லவந்த நாரதர் துஷ்டஸங்கமானது காமம், க்ரோதம், மோஹம் ஆகியவற்றை நம்மிடையே புகுத்தி அதன் காரணமாக அறிவுகுழப்பம் ஏற்பட்டு, அதன் விளைவாய் புத்திநாசம் ஏற்பட்டு அதனால் ஸர்வநாசங்களும் ஏற்பட ஒருவனுக்கு காரணமாய் அமைந்து விடுவதினாலேயே துஷ்டஸங்கம் விலக்கத்தக்கதாகிறது. சுத்தஸ்படிகமாய் இருந்த மனதில் துராசையை ஏற்படுத்தி அதன் காரணமாக பகைமையை வளர்த்து அதனால் வீண்மோகங்கள், புத்திபேதலிப்பு இவைகளே அஸத்ஸங்க பலனாய் இருப்பதால் இது வெறுக்கத்தக்கது. ஸத்ஸங்கம் எந்த அளவுக்கு விரும்பப்படுகிறதோ அதனிலும் பன்மடங்காய் துஷ்டஸங்கம் வெறுக்கத்தக்கது.

மழைக்கு ஒதுங்கிய இடத்தில் பெண்களிடம் பேச தொண்டரடிப்பொடியாழ்வார் எத்தகைய துராசாரத்துக்கு போய்விட்டார். காட்டில் ஸமித்து க்ரஹிக்கப்போன ப்ராம்மணன்ன அஜாமிளன் ஒரு வேடுவச்சியின் ஸங்கத்தால் கொள்ளை, கொலை போன்ற இழிசெயல்களில்

Koviloor Digital Library

ஈடுபட்டதையும், ஒரு கூனியன் துஷ்டஸங்கத்தால் தேவியான கைகேயின், "தூயசிந்தையும் திரிந்து" கணவனின் மரணத்துக்கும், இராமனின் வனவாசத்துக்கும் காரணமாகி தன்மகனின் அன்பையும் இழந்து நிராதரவாகிப்போய்நின்ற நிலைக்கும் காரணம் துஷ்டஸங்கமல்லவா. ஸத்ஸங்கமஹிமை அல்லவோ இழந்த ராஜ்யத்தை சுக்ரீவனுக்கு மீட்டுத்தந்தது. இலங்காராஜ்யம் விபீஷணனுக்கு கிடைத்தது. சுக்ரீவனுக்கும், விபீஷணனுக்கும் ராமஸக்யத்தை செய்துவைத்த ஸத்ஸங்கம் ஹனுமான் அல்லவா.

மாரீசன் எவ்வளவு நற்புத்தி சொல்லியும் ராவணன் காதில் விழாதபோதும் ராவண ஸகவாசத்தை விடமுடியாமல் மாரீசன் மாண்டுபோனது மட்டுமல்ல. பாகவத அபசாரத்துக்கு துணையுமாக அல்லவோ ஆனான். இங்கே காமத்துக்கு இராவணனும் க்ரோதத்துக்கு கூனியும், மோஹத்துக்கு தொண்டரப்பொடிஆழ்வாரும், அறிவுகுழப்பத்திற்கும், புத்திநாசத்திற்கும் அஜாமிளனுமே உதாரணம். அஸத்ஸங்கம் எவ்வளவு கொடியது, வெறுக்கத்தக்கது என்றும் ஸத்ஸங்கமானது எவ்வளவு ஆஸ்ரயிக்கத்தக்கது, நன்மை பயக்கக்கூடியதும் என்றும் விளங்குகிறதன்றோ! பகவான் கீதையில்

"த்யாயதோ விஷயாந்பும்ஸ: ஸங்கஸ்தேஷு ப்ஜாயதே
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமத்க்ரோதோபி ஜாயதே" 2-62

ஐம்புலன்களாலும் நுகரப்படுகின்ற பொருட்களையே சிந்தித்துக்கொண்டிருக்கிறவனுக்கு அத்தகைய விஷயங்களிலே தான்பற்று ஏற்படுகின்றது. இந்த பற்றுதலிலிருந்து ஆசை உண்டாகிறது. ஆசையிலிருந்து கோபம் உண்டாகிறது.
(என்றும்)

"த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஸநமாத்மந: 16-21
காம க்ரோத ஸ்ததா லோபஸ் தஸ்மாதே தத்த்ரயம் த்யஜேத்"

காமம், கோபம், பேராசை என்பன மூன்றுவிதமான நரகத்தின் நுழைவாயிலாகும். இவை ஆத்மாவை நாசம் செய்துவிடும். இழிந்தநிலையில் தள்ளிவிடும். எனவே இம்மூன்றையும் விட்டுவிடவேண்டும். என்கிறார்.

அசுரஜாதியில் பிறந்த பலிசக்ரவர்த்தியும், விபீஷணனும் மிருகஜாதியில் பிறந்த ஹனுமானும், சுக்ரீவனும், ஜாம்பவானும், யானையாகிய கஜேந்திரனும், கழுகாகிய ஜடாயுவும், தர்மவ்யாதரும், கோபிகைகளும், யக்ஞபத்னிகளும் இன்றுபக்த மண்டலத்தில் ப்ரகாசித்துக் கொண்டிருப்பதே இந்த ஸூத்ரத்திற்கு உதாரணம்.

Koviloor Digital Library

ஸூத்ரம் 45 : "தரங்காயிதா அபிமே ஸங்காத் ஸமுத்ராயந்தி"

அஸத்ஸங்க சேர்க்கையால் காமம், க்ரோதம், மோஹம், லோபம் முதலிய குணங்கள் சிறிய குறைபாடுகளாக ஆரம்பித்து சிறியசிறிய அலைகள் நடுஸமுத்திரத்தில் காணப்படுவதுபோல் இருப்பினும் துஷ்டகர்களின் சேர்க்கையினால் நாளடை வில் கடல்கரையில் வந்துவந்து மோதும் மலைபோன்ற அலைகளைப்போல் உயர்ந்து உயர்ந்து படுபாதாளத்தில் தள்ளிவிடும் தீயகுணங்களை வளர்ப்பதே துஷ்டஸங்க சகவாசமும் அதனால் ஏற்படும் பழக்கவழக்கங்களே அல்லவா?

ஸூத்ரம் 46 : "கஸ்தரதி கஸ்தாதி மாயாம்"

"ய: ஸங்கான் த்யஜதி யோ மஹானுபாவம் ஸேவதே
யோ நிர்மமோ பவதி:"

ஸங்கத்தின் பயன்களையும் பலன்களையும் சொல்லிவந்த நாரதர் ஸங்கத்தின் - ஸத்ஸங்கத்தின் பயனாக கிடைக்கும் பேரானந்த பலனான மாயையை வெல்லும் உபாயம் சொல்ல வருகிறார்போலும். உபாயமும் முன்சொல்லிவந்த விஷயங்களை வலியுறுத்துவான் போல் இந்த சூத்திரம் அமைகிறது.

மாயையை வெல்லுபவர் யார் என்ற கேள்வியை நாரதர் இங்கே எழுப்பி பதிலையும் கூறுகிறார்.

மாயையின் பிடியின்பாற் சிக்கித்தான் உலகமே இயங்கிக்கொண்டிருக்கிறது. தாண்டமுடியாத சம்சாரக்கடலின் எல்லைநிலமே இந்தமாயை என்பது. இதன் எல்லையையோ ஆழத்தையோ கண்டவர் இல்லை என்பதாலேயே இது தாண்டமுடியாத சமுத்திரத்திற்கு ஒப்பிடப்படுகிறது. மாயையின் பிடியில் சிக்குண்டுதான் மனிதனின் ஆசாபாச, கோபதாப, காமக்ரோத உணர்வுகள் வெளிப்படுகின்றன. மகாபெரியவர்கள் என்றுதன்னை தன் பேரறிவின்மூலம் பறைசாற்றிக்கொண்டவர்கள் எல்லாம் இந்த மாயையின் விளையாட்டில் அகப்பட்டு ஆழங்காண முடியாமல் இதிலேயே தத்தளித்து தன்வாழ்நாளை கழித்துள்ளார்கள் என்பதற்கு எண்ணரிய உதாரணங்கள் உண்டு. இத்தகைய மாயையை தாண்டும் உபாயம் சொல்லவந்த நாரதர்.

எவன்கூட்டை விலக்கி தனிமையை நாடுகிறானோ, எவன் ஸாதுக்களான மஹான்களை சென்றடைந்து ஸேவித்து அவருக்கு சேவைசெய்கிறானோ அவனால் மாயை வெல்லப்படுகிறது. எவனுக்கு தான் என்ற அகந்தை அழிகிறதோ அவனை மாயை பற்றுவதில்லை

Koviloor Digital Library

என்கிறார் நாரதர். இங்கே ஸங்கம் த்யஜதி என்பதற்கு ஸங்கத்தை தியாகம் செய்கிறானோ என்று பொருள்கூறும்போது ஸங்கம் என்றால் கூட்டைவிலக்கி தனிமையை நாடுதல்என்று பொருள் கொள்ளும்போது விலக்கவேண்டியது அஸத்ஸங்கத்தையே குறிக்கும். ஏனெனில் அடுத்தபடியாக "மஹானுபாவம் ஸேவதி" என்று ஸாதுக்களை நாடிச்சென்று சேவை செய்கிறானோ என்று கூறும்பொழுது ஸங்கம் அவசியம் என்றாகிறது. முதலில் ஸங்கதியாகம், அடுத்ததில் தேடிச்சென்று ஸங்கத்தை அடைதல் என்று இரண்டு மாறுபட்ட கருத்தைக்கூறும்பொழுது முதல் ஸங்கத்திற்கு அஸத்ஸங்கம் என்றும் அடுத்ததிற்கு ஸத்ஸங்கம் என்றும் பொருள்கொள்ளவேண்டும். இதை ஏற்கனவே 42, 43 வது ஸுத்ரங்களில் பார்த்துவிட்டதால் இதுவே இதற்கு பொருத்தமாகிறது. இதில் மஹனீயர்களான மஹான்களை அணுகிவிட்டாலே முதலில் சொன்ன தன்மையானது தானாகவே கைகூடிவிடுவதால் ஒரே அணுகுமுறையில் இரண்டு பலன்களையுமே இவன் அடைந்தவனாகிறான். தனது ஸங்க சேவையானது இவனுக்கு மனத்தளவில் வைராக்யத்தைக் கொடுத்து அதன்பலனாக தனிமையை நாடும் அவாவே எப்போதுமாகி, தன் ஆன்மீகமான சொல்லுக்கும் செயலுக்கும் எதிரான எந்தப்பேச்சும், காரியங்களும் இவனுக்கு ஏற்புடையதாக இல்லாமல் போகும்போது இவைகளைக் கண்டு இவனாகவே விலகி தனிமையை ஏற்படுத்திக் கொண்டுவிடுவான்.

ஸாதுசேவையே இவனது குறிக்கோளாகி விட்டபடியால மாயையை எளிதில் வென்றுவிடுகிறான்

மூன்றாவதாக சொன்ன "தான் என்ற அகந்தை அழிதல்" என்பதும் ஸத்ஸங்க சேவையாலேயே கிட்டிவிடுகிறது. வேறு எதைப்பற்றியும் இவனுக்கு அகந்தை அழிய மார்க்கமில்லை. கர்வம்விலக வழிஇல்லை. "சாஸ்திரங்களைக் கற்றுத்தேர்ந்து விட்டதாலேயோ, ப்ரமிக்கும்படி பிறருக்கு உபதேசம் செய்வதாலேயோ இவனுக்கு இந்த அகந்தை அழிவதில்லை. மாறாக இதனால் எல்லாம் இன்னும் தன்னைப் பெரியவன் என்ற எண்ணமே அதிகமாகிறது. ஸாதுஜனசேவையால் மட்டுமே இவன்மனமானது நெக்குருகி, அகம் அழிந்து, தீனபாவமானது பெருகி, தன்னைப்புல்லினும் தாழ்ந்தவனாக எண்ணிக்கொள்ளும் மனோபாவம் ஏற்படுகிறது. மஹாப்ரபு க்ருஷ்ணசைதன்யரும் தனது சிக்ஷாஷ்டகத்தில்

"த்ருணாதபி சுநீசேன தரோரஹிர் சகிஷ்ணுனா
அமானினா மானதேய: கீர்த்தனீய: ஸதாஹரி:"

என்று புல்லினும் தன்னை தாழ்ந்தவனாக எண்ணிக்கொள்பவனும் எப்படி மரமானது தன்னை வெட்டவந்தவனுக்கும் நிழல் தருகிறதோ

Koviloor Digital Library

அதுபோல தனக்கு இன்னல் செய்பவருக்கும் நன்மை செய்பவனாக எப்போதும் ஹரிகிர்த்தன் செய்துகொண்டிருப்பான் ஒரு பக்தன் என்கிறார். சொல்லப்பட்ட மூன்றுவிதமான மாயையையும் வெல்லுவதற்குரிய ஒரே உபாயமான வழி ஸாதுசேவை என்பதை மட்டும் தெரிந்துகொண்டாலே மற்ற மார்க்கங்களில் இவனுக்கு மாயையை வெல்ல வரவேண்டிய குணங்கள் இதில் தானாகவே வந்துவிடுகிறது. இதையே பகவான் கீதையில்

"தைவீ ஹ்யேஷா குணமயீ மமமாயாதுரத்யயா"
மாமேவயே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே" 7-14

என்னுடைய மாயையைக் கடப்பது கடினம். எவர் என்னைப் புகலிடமாகக் கொள்கிறார்களோ அவர்களே மாயையை வென்றவர்களாகிறார்கள் என்கிறார்.

ஸூத்ரம் 47 : "யோ விவிக்தஸ்தானம் ஸேவதே யோலோகபந்தன
முன்மூலயதி நிஸ்தரை குண்யோபவதி
யோகக்ஷேமம் த்யஜதி"

மாயையை வெல்லும் உபாயத்தை இன்னும் விஸ்தாரமாக இந்த ஸூத்ரத்தில் சொல்லவந்த நாரதமகரிஷி

தனிமையை நாடுதலும், உலகபந்தங்களை வேருடன் களைதலும், முக்குணங்களையும் கடத்தலும், முயற்சி, சேகரித்தல் இரண்டையும் விட்டுவிடுதல் இவைகளே மாயையை கடக்கும்வழி என்கிறார். முன்சூத்திரத்தில் "நான்" என்ற மமகாரமாகிய அகந்தை அழியவேண்டும் என்று சொல்லிவிட்டதாலேயே இந்த "நான்" அற்றுப்போய்விட்டாலே இவனிடம் இருந்த எல்லா அழுக்குகளும் தானாகவே போய்விடும் என்பதால் அதையே இங்கே இன்னும் விவரித்து சொல்கிறார். உலகத்தில் இருந்து விலகி இருத்தல் என்பது சரீரத்தளிவில் மட்டுமல்லாது முக்கியமாக மனத்தளவில் வேண்டும் என்பதே முக்கியம். மனத்தளவில் ஆத்ம சிந்தனையுடன்கூட பகவத்ஸ்மரணம் தவிர மற்றவற்றில் இருந்து விலகிஇருத்தலே ஏகாந்தம் எனப்படுகிறது. ப்ரஹ்லாதஸ்வாமி சொன்னபடி "ஏகாந்தபக்தி:கோவிந்த:யத்ஸர்வத்ரதரீக்ஷணம்" என்று கோவிந்தனிடம் திடவிஸ்வாஸமும் "ஏகாந்த" என்ற வார்த்தைக்குக் பொருளாகக் கொள்ளலாம். உலகபந்தங்களைக் கடத்தல் என்பது எப்பேர்ப்பட்ட ஞானிக்கும் எளிதன்று. பெரிய ஞர்னவான்களெல்லாம் அல்ப விஷயத்தில் தலைகீழாக விழுந்த விபரம் நிறையவே காணக்கிடைக்கிறது. ஆனால் பக்தன் அனாயாஸமாக உலகபந்தங்களைக் கடந்து விடுகிறான். ஏனெனில் இவன்தன் ஞானம்போன்ற சுயபலத்தினைச் சாராமல் பக்வத்சரணம்,

Koviloor Digital Library

சரணாகதி தத்துவத்தில் நிலைபெற்று நின்றுவிட்டதால் இவனை உலகபந்தங்களிலிருந்து நீக்கவேண்டிய பொறுப்பு பகவானுக்கு வந்துவிடுகிறது. முக்குணங்களையும் கடத்தல், முயற்சி, சேகரித்தல் என்ற இரண்டையும் விட்டுவிடுதல் என்பதும் பக்தனுக்கு மேற்கூறியவாறே. வாகாசனர்களெல்லாம் பலபிறவிகளாய் பகவத்சரணத்தை அடைய ப்ரயாசைப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது ஒரு பக்தன் வீட்டுத்தோட்டத்தில் பூத்தமலரில் தேன்உண்ண வந்தவண்டு, பகவத்ஞானமே சிறிதும் இல்லாத இந்த வண்டு, அது பக்தன்வீட்டு மலரில் தேன்உண்ணவந்த ஒரே காரணத்தினால் பகவத் சரணத்தில் சமர்ப்பிக்கப்பட்டு முக்தியடைந்தது என்கிறபோது, பகவத், பாகவத சம்பந்தம் இல்லாது முக்குணங்களையும் கடத்தல் என்பது ப்ரயாசை என்பதால் ஸத்ஸங்கமே இந்த மாயையை வெல்லும் மார்க்கமாகிறது பகவான் கீதையில்

“த்ரைகுண்ய விஷயா வேதா, நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுன
நிர்த்வந்த்வோ நித்ய ஸத்த்வஸ்தோ நிர்யோகக்ஷேம ஆத்மவான்” 2-45

வேதங்கள் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களையும், அதன் ஸாதனமுறைபற்றியும் கூறுகின்றன. ஆனால் அர்ஜுனா! நீ இவைகளில் பற்றில்லாதவனும், மகிழ்ச்சி-துக்கம் முதலிய இரண்டுக்கும் ஆட்படாதவனாக, நித்தியமான பரமாத்வாவிடம் ஈடுபட்டவனாக, யோகக்ஷேமத்தை விரும்பாதவனாக மனதினை தன்வசப்படுத்தியவனாக இருப்பாயாக” என்கிறார்.

யோகக்ஷேமத்தை விட்டுவிடவேண்டும் என்று நாரதரும் சூத்திரத்தில் கூறுகிறார். இங்கே பகவானும் அர்ஜீனனுக்கு அதையே வலியுறுத்துகிறார் என்றால் இவன் தனது யோகக்ஷேமத்தை விட்டொழித்தவனாகிவிட்டால் பின்யார்தான் இவனது யோகக்ஷேமத்திற்கு பொறுப்பு என்றால் பகவான் கீதையில்

“அனன்யாஸ்சிந்தையன்தோமாம் யேஜனா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபி யுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்” 9-22

வேறுஎந்த எண்ணத்திலும் மனம்செல்லாமல் எந்த ப்ரதிபலனும் எதிர்பார்க்காமல் எவர் என்னை உபாஸனை செய்கின்றனரோ, அத்தகைய என்னையே எப்போதும் சித்தத்தில் வைத்துள்ள அவனுடைய யோகக்ஷேமத்தை (இகபரசுகங்களுக்கான காரண காரியங்களை) நானே நிர்வகிக்கிறேன் என்கிறான் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன்.

Koviloor Digital Library

ஸூத்ரம் 48 : "ய: கர்மபலம் த்யஜதி கர்மாணி ஸந்யஸ்யதி
ததோ நிர்த்வந்த்வோ பவதி"

மாயையை வெல்ல மேலும் மார்க்கம் நாரதர் சொல்கிறார். யார் கர்மபலனை தியாகம் செய்கிறானோ, யார் கர்மங்களையும் துறக்கிறானோ, சுகம்-துக்கம், வெற்றி-தோல்வி, லாப-நஷ்டம், புண்ணியம்-பாவம், குளிர்-உஷ்ணம் போன்ற இந்த இரட்டைகளைக் கடந்துவிடுகிறானோ (பாதிக்கப்படாமல் இருக்கிறானோ) அவனே மாயையை வென்றவனாகிறான்.

முதலில் கர்மபலனை தியாகம் செய்யவேண்டும் என்றும், பின் கர்மாக்களையும் விட்டுவிட வேண்டும் என்கிறார். கர்மபலனை விடுவதினும் கர்மங்களையே விட்டுவிட்டால் என்ன? கர்மபலனை துறந்து பின் கர்மங்களைத்துறப்பது எதற்கு? ஏன்? இது விலுக்தமாக இல்லையா எனில் இல்லை என்பதே பதிலாம். கர்மாக்களை தானாகவிடும் அதிகாரம் எவர்க்கும் இல்லை. ஆனால் கர்மபலனை பகவத் அர்ப்பணம் பண்ணிவிடலாம். இப்படி நிரபேக்ஷமாக கர்மாக்களைப் பண்ணிவருதின் பலனாக இவன் ஆத்மஞானமும், ஆத்மானுபவமும் ஏற்பட்டு கர்மாக்களை செய்யவேண்டும் என்ற எண்ணமே அழிந்துபோய் பகவத் அனுபவத்தில் ஆழ்ந்து தன்னை மறந்து விடுவதால் இவனாக கர்மாவை விடவில்லை, கர்மா இவனைவிட்டு விலகியது என்று கொள்ளவேண்டும். கர்மாக்கள் செய்யவேண்டியது எல்லோருடைய கடமை. ஆனால் கர்மபலனை பகவத் அர்ப்பணம் செய்துவிடவேண்டும். நிரபேக்ஷமான இந்த கர்மா இவனைவிட்டு தானாக கழன்று கொண்டுவிடும். இத்தகைய ஆத்மானுபூதி ஏற்பட்டவனாய் தன்னைமறந்து, மனம் என்பது அழிந்து, உலகப்ரஞ்ஞையே அற்றுப்போனவனை எந்த சுக-துக்கம், லாப-நஷ்டம், நன்மை-தீமை தீண்டிவிடப்போகிறது. இவைகளும் இவனைத் தீண்டாததுபோல் மாயையும் இவனை தீண்டவில்லை. இதையே பகவான் கீதையில்

"யோ ந ஹ்ருஷ்யதி நத்வேஷ்டி நஸோசதி நகாங்க்ஷதி
ஸுபாஸுப பரித்யாகி பக்திமாந்ய: ஸமேப்ரியக" 12-17

யார் எதிலும் மகிழ்ச்சியோ வெறுப்போ கொள்வதில்லையோ, துயரமோ ஆசையோ படுவதில்லையோ, எதற்கும் ஆசைப்படுவதில்லையோ நல்லது, தீயதுமான காரியங்கள் அனைத்தையும் துறந்தவனோ அத்தகைய பக்தனே எனக்குப் ப்ரியமானவன்" என்கிறார்.

ஸூத்ரம் 49 : "வேதாளபி ஸன்யஸ்யதி கேவலம்
அவிச்சின்னம் அனுராகம் லபதே"

இதற்குமுன் கூறப்பட்ட சூத்திரங்களில் சொல்லப்பட்ட ஆத்மாராமநிலையை அடைந்துவிட்டவனுக்கு வேதங்களிலும் உபநிடதங்களிலும் காட்டப்படும் எந்தக் கட்டுப்பாடுகளும், வழிமுறைகளும் இத்தகைய நிலையிலான பக்தனைக் கட்டுப்படுத்தாது என்கிறார் தேவரிஷி. வேதங்களில் கூறப்பட்ட நியதிகளைக்கூட கைவிட்டு எப்போதும் பகவத்தியனத்திலேயே ஆழ்ந்துவிட்டவன் மனதில் அனுராகம் ஏற்பட்டு (ப்ரேமபக்திக்கு ஆளாகி) அதிலேயே மூழ்கிவிடுகிறான். இதனால் வரும் ஆனந்தத்தினால் இவனை மாயை தீண்டுவதில்லை. மாயையை வெல்ல இதற்குமுன் பலஉபாயங்களை சொல்லிவந்த நாரதர் இந்த உபாயங்களின் பலனாக அவிச்சின்னமான அனுராக ரூபமான ப்ரேமப்கதி ஸித்திக்கும் என்று கூறுவதுதான் விசேஷமானது எனவே ஒருவன் தன்னளவில் ஏதும் விசேஷ ஞானமில்லாதவனாக, சிஷ்டாசாரம், அனுஷ்டான கர்மங்களை கைவிட்டவனாக இருந்தபோதிலும் பக்திவசப்பட்டு அதிலேயே ஆழ்ந்து விடுவானானால் மாயையை ஜயித்தவனாகிறான் என்பதால் மாயையை வெல்ல ப்ரேமபக்தியே இறுதி சாதனமாக சொல்லப்படுகிறது. இதையே ஸ்ரீமத் பாகவதம்

> "கர்மாகர்ம விகர்மேதி வேதவாதோந லௌகிக:
> வேதஸ்ய சேஸ்வராத்மத்வாத் தத்ரமுஹ்யந்தி ஸூரய:
> பரோக்ஷவாதோ வேதோயம் பாலாநாமனுஸாஸனம்
> கர்மமோக்ஷாயகர்மாணி விதத்தே ஹ்யகதம் யதா:"

வேதம் பரோக்ஷமாகவே (மறைமுகமாகவே) பேசும். அறியாத பாலகர்களுக்கு போதிக்கும் உபதேசம் போலவே இது. வியாதிஸ்தனுக்கு மருந்து தரப்படுவது இந்த வியாதி தொடராமலும் இவன் மீண்டும் மருந்துண்ணாமலும் இருப்பதற்காகவே என்பதுபோல் கர்மாக்கள் செய்யப்படுவதெல்லாம் இவன் ஞானம்பெற்று மீண்டும் கர்மாக்கள் செய்யாமல் இருப்பதற்காகவே" என்கிறது.

ஸூத்ரம் 50 : "ஸதரதி ஸதரதி ஸலோகாம் ஸ்தாரயதி"

இத்தகைய ப்ரேமபக்தனே மாயையை கடக்கிறான். அவன் மாயையால் அல்லல்படுவதில்லை என்பதோடு மட்டுமல்லாது மாயையில் உழலும் மக்களையும் கரையேற்றுகிறான். எப்படி மின்சாரம் தாக்கியவனை மின்சாரம் தாக்காத கையுறை அணிந்துள்ளவனே காப்பாற்ற முடியுமோ, நீந்தத்தெரியாமல் நீரில் மூழ்கித்தத்தளிக்கும் ஒருவனை நீச்சல் தெரிந்தவனே காப்பாற்ற முடியுமோ அதுபோல மாயையை வென்றவனே மற்றவர்களை மாயையில் இருந்து உத்தாரணம் செய்யமுடியுமே தவிர, மற்றவன் எவ்வளவு

Koviloor Digital Library

பெரியவன்ஆக எல்லா விஷயங்களிலும் இருப்பினும் அவனால் முடியாது என்பது மட்டுமல்ல இவனும் அந்த மாயையிலேயே மூழ்கிவிடுவான் என்கிறார் நாரதர்.

ஸூத்ரம் 51 : "அனிர்வசனீயம் ப்ரேமஸ்வரூபம்"

ப்ரேமஸ்வரூபமான பக்தியை வார்த்தைகளால் விவரிக்க முடியாது என்கிறார் நாரதர். ப்ரேமபக்தனின் நிலை வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. இறைவன்பால் ஏற்படும் ப்ரேமை அல்லது அன்பு அல்லது அனுராகம் என்பது எப்படி இருக்கும் என்பதை விளக்க வார்த்தைகள் ஏது? பகவத் சம்பந்தமான அனுபவங்களை பக்தனே உணர்வானேயன்றி எடுத்துரைக்க இயலாதவனாகிறான். "அவரவர்கள் அனுபவமே அவரவர்களுக்கு உணர்த்தும் என்றாகிறது" இனிப்பு என்ற சுவையை எந்த வார்த்தைகளால் பிறர் உணரும்படி செய்யமுடியும்? இனிப்பை சுவைத்தவன் தான் உணர்வான். இனிப்பை எப்படி வார்த்தைகளில் பிறருக்கு உணர்த்தி அந்த ருசியை அவர்கள் உணரப்பண்ண முடியாதோ அதுபோலவே பகவான்பால் ஏற்பட்ட அனுராகம் என்னும் ப்ரேமையானது ஸ்வானுபவமாக உணர்ந்து இன்புறக்கூடியது அல்லாமல் உணரப்பண்ண முடியாது.

ஸூத்ரம் 52 : "மூகாஸ்வாதனவத்"

ப்ரேமக்தியின் அனுபவங்களை பிறருக்கு உணர்த்த முடியாது என்பதை உதாரணத்துடன் சொல்லவந்த நாரதர் "ஊமையன் உண்ட உணவின் ருசியை (அல்லது ஊமையன்கண்ட கனவினை) எப்படி பிறருக்கு உணர்த்துவான். பேசும் சக்தியுள்ளவனாலேயே அதை பிறருக்கு உணர்த்த முடியாது என்கிறபோது ஊமையின் நிலைஎன்ன! எனவே பக்திரஸத்தின் ஆனந்தமயமான, சுகமான இனிய உணர்வுகளை மற்றவர்களுக்கு உணர்த்த வார்த்தைகளோ, வாக்கியங்களோ இல்லை என்கிறார் நாரதர்.

ஸூத்ரம் 53 : "ப்ரகாசதே க்வாபி பாத்ரே"

இந்தப் ப்ரேமபக்தியானது மிகமிக அபூர்வமாக எங்கோ ஒருசிலரிடம் தான் காணக்கிடைக்கிறது என்கிறார் நாரதர். இதனாலேயே இந்த பக்தி அரிதினும் அரிதாகிறது. உலகத்தில் பரவலாக காணக்கிடைக்காததாலேயே உலகமக்களுக்கும் புரியாது என்பதும் புலனாகிறது. இதையே பகவான் கீதையில்

> "பஹூனாம் ஜன்மநாமந்தே ஞானவான்மாம் ப்ரபத்யதே
> வாஸூதேவ ஸர்வமிதி ஸமஹாத்மா ஸூதுர்லப:"

Koviloor Digital Library

"பலபல பிறவிகளுக்குப் பிறகே ஒருவன் பார்ப்பதெல்லாம் வாஸுதேவனே என்ற தத்துவஞானத்தை அடைகிறான். அத்தகைய மஹாத்மாவான பக்தன் அரிதிலும் அரிதானவன் என்பது உலகத்துக்கு மட்டுமல்ல சாக்ஷாத் பகவானான எனக்கே" என்கிறார்.

ஸுத்ரம் 54 : "குணரஹிதம் காமனாரஹிதம் ப்ரதிக்ஷணம் வர்த்தமானம் - அவிச்சின்னம் - சூஷ்மதரம் அனுபவரூபம்"

இந்த உத்தமமான, போக்யமான, ஆனந்தமயமான, அனுபவபூர்வமான ப்ரேமபக்தியானது

"குணங்கள் அற்றது, ஆசைகள் அற்றது – ஒவ்வொரு வினாடியும் வளர்ந்து கொண்டே இருக்கக்கூடியது – மிகவும் சூஷ்மமானது – அனுபவரூபமானது என்கிறார் நாரதர்.

முன்சொல்லியபடி ஸ்வானுபவ ரூபமாகவே உணரக்கூடியது என்பதாலேயே இதில் வேறுளந்த குணங்களையும் ஏற்றிப்பார்க்க முடியாது. பக்திக்கு காரணமாக வேறுளந்த ஆசையும் இல்லை என்பதும் பக்திசெய்வது பக்திக்காகவே என்பதும் முடிவானதாயிற்று. இத்தகைய ப்ரேமபக்திக்கு குணம் ஏதும் இல்லை என்பதாலேயே ஞானிகளுக்கும் அஸ்ரயமான ப்ரும்மஸ்வரும் போன்றது. ஆனால் ஞானிகள் உணரும் இந்தப்ரும்ம ஸ்வரூபத்துக்கு நாமம் இல்லை ரூபம் இல்லை என்பதில் இந்த ப்ரேமபக்தனுக்கு இங்கே உடன்பாடில்லை. இவன்தன் இஷ்டதெய்வத்தின் ரூபலாவண்யத்திலே தன் மனதைப்பறிகொடுத்து கல்யாண குணங்களிலே தன் ஹ்ருதயத்தைப் பறிகொடுத்து விட்டதால் இதன்பால் இவன் ஹ்ருதயத்திலே ஸ்புரித்துவிட்ட பக்திக்குத்தான் குணம்கிடையாதே தவிர இந்த ப்ரேமபக்தனுக்கு பக்திக்குரிய குணவிசேஷங்கள் உண்டு. இந்த பக்தி - பக்தி வித்யாசத்தைத்தான் நாரதர் சூஷ்மமானது என்று சொல்லுகிறார் போலும். இந்த பக்திக்கு என்று தனியாக ஆசைகள் கிடையாது. பக்தனுக்கு பக்தியே லக்ஷியமாகிவிட்டதால் லட்சியம் லட்சணம் அதாவது அடையவேண்டிய பொருள் அதை அடையத்தேடும் மார்க்கம் இரண்டும் பக்தி என்ற ஒன்றாகி விட்டதால் வேறுளந்த எண்ணத்தின் அடிப்படையிலும் ப்ரேமபக்தனுக்கு நோக்கம் இல்லை அல்லவா?

இது ஒவ்வொரு வினாடியும் வளர்ந்து கொண்டே இருக்கக்கூடியது என்பதை பக்தனது அனுபவத்திலேயே பார்த்துக் கொள்ளலாம். பக்தியின் சாதாரண ஆரம்ப நிலையான, பூஜை, புனஸ்காரத்திலிருந்து தொடங்கி பின்பு ஸ்வரணம், கீர்த்தனம் என்று வளர்ந்து பின் ஸ்மரணமரக இங்கே இப்போது தைலதாரைபோல இவன் ஹ்ருதயத்திலே இந்த பக்தியின்

Koviloor Digital Library

ருசியானது இருந்து கொண்டே இருப்பதால் இது இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இதற்கு-மட்டும் முடிவென்பதே கிடையாது என்பதால் பக்தனது கடைசி ஸ்வாசம் வரையில் ப்ரேமபக்தியானது க்ஷணத்துக்கு க்ஷனம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இதனால் ஒரு கட்டத்தில் பக்தனுக்கு தான் என்பதும், பக்தி என்பதும் பக்தியை தான் செய்கிறோம் என்பதும் மறந்து பக்தியும் தானும் வெவ்வேறில்லை என்ற நிலையினை எய்தி பின்பும் அதிலேயே மூழ்கி இன்னும் பக்தியின் வளர்ச்சியினை ஆத்ம ரூபமாக உணர்ந்து கொண்டே இருக்கிறான். இந்த நிலையினை பரமஹம்ஸநிலை என்று கூட சொல்லலாம். ஆனால் பரமஹம்ஸநிலை என்பது தன்னைப்பற்றிய மறந்த நிலை என்றில்லாமல் தன் நினைவோடு கூடிய ப்ரேம நிலை என்று சொல்ல வேண்டியே அனுபவரூபமானது என்று சொல்கிறார் போலும். தன்சரீரத்தில் ஏற்படும் உபாதைகளையோ, வெளிஉலக நினைவுகளோ பரமஹம்ஸ நிலையிலுள்ளவர்களுக்குரியதுபோல் பக்தனுக்கும் தெரியாமல் போகுமேயன்றி அவிச்சின்னமாக ஹ்ருதயத்தில் ஸுஸ்பஷ்டமாக ஸ்புரிக்கும். ஸ்புரித்துக் கொண்டிருக்கும் பகவத்பக்தி ருசியானது தொடர்ந்து இடைவிடாது உணரப்பட்டுக் கொண்டே இருக்கும். ப்ரேம பக்தி நிலையை இவன் தானாக தடுத்து நிறுத்த முடியாத நிலைக்கு இவனாகி விட்டதால், தனக்குள் தானாக அனுபவித்து உணர்ந்து கொண்டே இருப்பதால் இந்த அனுபூதியின் சுகத்தை பக்தன் எவருக்கு எந்த சொற்களால் விளக்கிவிடப் போகிறான்.

ஸூத்ரம் 55 : "தத் ப்ராப்ய ததேவ அவலோகயதி
ததேவ ச்ருணோதி ததேவ பாஷயதி"

ப்ரேம பக்தியால் இவ்வித உயரிய நிலையான ப்ரேம பக்தி சாக்ஷாத்காரத்தை அனுபவிக்கும் பக்தன் உலகில் எங்கினும் ப்ரேம பக்தியையே காண்கிறான். ப்ரேமஸ்வருபமே பகவான் என்பதால் பகவானைத் தவிர வேறு எதுவும் இவன் கண்ணில் படுவதில்லை. "ஸர்வபூதேஷு எப்பஸ்ய பகவத்பாவ மாத்மன:" என்ற நிலைக்கு வந்து விட்டதால் தன்னிலும், பிறரிலும், உலகின் படைக்கப்பட்ட ஸகல ஜீவராசிகளிலும் புல், பூண்டு தொடங்கிய அனைத்து படைப்பிலும் இவனால் பகவானைத் தவிர வேறு எதையும் பார்க்க முடியவில்லை. அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்ற அனைத்து சித்தாந்தங்களுக்கும் இவனே சாட்சிபோல் மிளிர்கிறான். எல்லா சப்தங்களும் பகவத் சப்தமே. வேறு சப்தங்கள் இவனது காதில் விழுவதில்லை. பேசுவதென்று இவன் தன் திருவாய் மலர்ந்தருளினாலோ பகவத் விஷயம் தவிர பேசுவதற்கு வேறு வார்த்தைகள் இல்லை. தனியாக, ஏகாந்தமான நிலையிலும் இவனது ஹ்ருதயத்தில் அவிச்சின்னமாக பகவத் ஸ்வரூபம்தான் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது.

இதன் அழகிலேயே சொக்கி நிற்கிறான். பார்த்தல், கேட்டல், பேசுதல் என்ற எல்லா நிலைகளிலும் இவனது ·ஸ்வரூபம் ப்ரேம பக்தி ஸ்வரூபமே என்பது முக்ஷுக்களும், ஞானவான்களும் பல ஜன்மங்களில் பகுப்ரயாசையில் அடைய துடிக்கும் "அஹம் ப்ரம்மாஸ்மி" என்ற அற்புத நிலைக்கு இவனே உதாரண புருஷனாகிறான். இந்த நிலையினைத்தான் மகாகவி பாரதி.

"காக்கை சிறகினிலே நந்தலாலா நின்கரியநிறம் தோன்றுதய்யா
பார்க்குமிடமெல்லாம் நந்தலாலா நின்பச்சைநிறம் தோன்றுதய்யா
கேட்கும் ஒலியிலெல்லாம் நந்தலாலா நின்கீதம் இசைக்குதய்யா
தீக்குள் விரலை விட்டால் நந்தலாலா நின்னை தீண்டும் இன்பம்
தோன்றுதய்யா நந்தலாலா

என்று வர்ணிக்கிறார். இந்த உயரிய நிலைக்கு உதாரணமாக ஸ்ரீமத் பாகவதமஹாபுராணம் கோபியர்களைத்தான் கூறுகிறது. வ்ரஜவாஸிகளான இந்த ஆயர்குலப் பெண்கள் ஸ்ரீக்ருஷ்ணனின் நினைவாக இருந்த நிலையினை இவ்விதம் வர்ணிக்கிறது.

"தன் மனஸ்காஸ் ததாலாபாஸ்
தத்விசேஷ்டாஸ் ததாக்மிகாகா!
தத்குணநேவ காயந்த்யா
நாத்மா காராணி ஸஸ்மரு:!!

ஸ்ரீக்ருஷ்ணனிடமே சென்று விட்ட மனத்தினராய், அவனையே பற்றிப் பேசுகின்றவர்களாகவும், அவனது லீலைகளை நினைத்து தாங்களே அபிநயம் செய்கின்றவர்களாகவும் ஸ்ரீக்ருஷ்ணனிடமே தங்கள் உயிரை வைத்தவர்களாகவும் அவன் குணங்களையே பாடுகிறவர்களாகவும் தங்கள் தங்கள் குடும்பங்களையோ, வீட்டின் நினைவுகளையோ அவர்கள் சிந்திக்க மறந்தவர்களானார்கள்.

ஸூத்ரம் 56 : "கௌணீத்ரிதா குணபேதாத்- ஆர்த்தாதி பேதத்வா "!!

உயர்நிலையின் உச்சத்தில் இதுவரை ப்ரேமபக்தி ஸ்வரூபம் விளக்கப்பட்டது. இங்கே நாரதர் இந்த ப்ரேம பக்திக்கு அடுத்த கீழ்நிலையில் இருக்கும் பக்தியையும் கூற வருகிறார். இப்பக்தியானது மூன்று நிலையில் வர்ணிக்கப்படுகிறது. குண வித்தியாசத்தால் ஸத்வம் - ரஜஜ் - தமஸ் என்றோ ஆர்த்தன் - அர்தாத்ரி – ஞானி என்ற நிலை கொண்டோ இங்கே விளக்கப்படுகிறது.

சாதாரண மனிதகுண விசேஷங்களான காம, கோபங்களுடைய மனிதர் செய்யும் பக்தி தாமஸபக்தி அல்லது ஆர்த்த பக்தி. விஷய

Koviloor Digital Library

சுகங்களுக்காகவும், பொருள், புகழ் வேண்டியும் செய்யப்படும் பக்தி ராஜஸபக்தி - அல்லது அர்த்தார்த்த பக்தி. பகவத் அர்பணபுத்தியுடன், பகவத் விஸ்வாஸத்துடன் உயர்நிலை ஞானம் வேண்டி பக்தி செய்வது ஸாத்விக பக்தி அல்லது ஜிஞ்யாஸபக்தி. பகவான் கீதையில் இதையே

"சதுர்விதா பஜந்த்தேமாம் ஜநா ஸுக்ருதிநோர்ஜுனா
ஆர்த்தோ ஜீஞ்ஞாஸுரர்தார்த்தீ ஞானிச பரதர்ஷப" !!

துன்பம் விலக பக்தி செய்பவன், பொருள் வேண்டி பக்தி செய்பவன் ஞானம் வேண்டி பக்தி செய்பவன் ஞானம் கைவரப் பெற்ற பின்பும் பக்தி செய்பவன் என்று நான்கு வகையான பக்தர் இருக்கிறார்கள் அர்ஜுனா என்கிறது கீதை.

ஸூத்ரம் 57 : "உத்தரஸ்மாத் உத்தரஸ்மாத் பூர்வ
பூர்வா ச்ரேயாய பவதி"

சொல்லப்பட்ட பலவிதமான பக்தியில் பின்னால் சொல்லப்பட்ட பக்தியினும் அதை அடுத்து சொல்லப்பட்ட பக்தியானது உயர் நன்மையை அளிக்கக்கூடியதாயிருக்கிறது.

மேலே நாரத பகவானால் சொல்லப்பட்ட மூன்றுவித பக்தியில் ராஜஸ பக்தியினும் தாமஸ பக்தி உயர்நிலை என்றும் ஸாத்வீக பக்தி இவ்விரண்டிலும் உயர்நிலையிலுள்ளது என்கிறார் நாரதர். ஆர்த்தனாக, அர்த்ததார்த்தீயாக பக்தி செய்வதைக் காட்டிலும் அதாவது பொருள் வேண்டியும், தன் துன்பங்கள் விலக வேண்டியும் பக்தி செய்யும் நிலையிலும் ஞானம் வேண்டி பக்தி செய்யும் நிலையே உயர்வானதல்லவா?

தனக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் துயரங்களில் விடுதலை வேண்டி பகவான் ஸ்ரீக்ருஷ்ணனை குந்தி துதிக்கிறார். ஆனால் அத்தகைய ஆரம்ப நிலையில் செய்யப்பட்ட துதியானது முடிவில் "க்ருஷ்ணா துன்பம் விலக்க நீ வருவாய் எனில் எங்களுக்கு அடிக்கடி துன்பம் வரட்டும் என்று ப்ரார்த்திக்கும் நிலைக்கு கொண்டு சென்றது. தந்தையின் அன்புக்காக ஏங்கி துருவன் தவம் செய்தான். ஆயின் ஞானம் ஏற்பட்டு யார் என் இதயத்துள் புகுந்து எனது அந்தராத்மாவாக இருந்து உறங்கிக்கிடந்த என் வாக்கையும் என் இந்திரியங்களையும் தட்டி எழுப்பி இப்போது என் எதிரில் வந்து காட்சி தரும் உன்னையும் காண வைத்தானோ அத்தகையவனான பகவானுக்கு - உனக்கு நமஸ்காரம் என்ற துதி செய்யும் நிலையை அடைகிறான். இப்படி பக்தியானது படிப்படியாக உயர்ந்து உன்னத நிலைக்கு வரும்போது ஒன்றை ஒன்று மிஞ்சி உத்தமமாக ஆகிறது.

Koviloor Digital Library

ஸீத்ரம் 58 : "அன்யஸ்மாத் ஸௌலப்யம் பக்தௌ"!!

மற்ற எல்லா மார்க்கங்களைக் காட்டிலும் பக்தி மார்க்கம் எளிதானது, அனுசரிக்கக்கூடியது என்கிறார் நாரதர்.

பகவானை அடையப் போடப்பட்ட பாதைகள் பலப்பல. மூன்று விதமான பக்தியிலும் இந்தப் பாதைகளில் செல்லலாம். முக்கியமாக த்யானம், யாகயஞ்ஞாதி கர்மங்கள், அர்ச்சராதி மார்க்கங்களான அபிஷேகம், ஆராதனை, அர்ச்சனை போன்றவைகள் இவைகளில் எல்லாம் ப்ரயாசை அதிகம். த்யானம் எனில் மன அடக்கம் தேவை. இது எவ்வளவோ காலங்களில் ஏற்படுத்திக் கொண்ட பயிற்சியின் பலனால் வருவது. யாகயஞ்ஞாதி கர்மங்களுக்கு ப்ரயாசையும், தனமும், இன்னபிற ஸாதனங்களும் தேவை. இதுபோலவே அர்ச்சராதி மார்க்கத்திலும், பக்திக்குத் தேவையோ எனில் இறைவன்பால் ஏற்படும் அனுராகம் மட்டுமே. இதையே விஷ்ணு புராணத்தில்,

"த்யாயன் க்ருதே யஜன் யஞ்ஞைஸ்
த்ரேதாயாம் த்வாபரேச்சயன்
யதாப்னோதி ததப்னோதி
கலௌ ஸங்கீர்த்ய கேசவம்"

என இறைவனுடைய திருநாமங்களை உள்ளன்போடு சொல்லுவதே பக்தி என்றாகிறது. இதில் ஏதும் ப்ரயாசை இல்லை என்பதால் இதுவே சுலபமானது, அனுஷ்டிக்கத்தக்கது.

ஸுத்ரம் 59 : "ப்ரமாணந்ததரஸ்யா (அ)னபேக்ஷத்வாத்
ஸ்வயம் ப்ரமாணத்வாத்" !!

"பக்தியை நிரூபிக்க வேறு ப்ரமாணம் தேவை இல்லை.
பக்தியே தனக்குத்தானே தெளிவான ப்ரமாணயிருக்கிறது"

பக்தியானது, பக்திரஸமானது உள்ளத்தில் உதயமாகி பொங்கி எழுகின்ற போதே பக்தன் தனக்குத்தானே விவரிக்க இயலாத சுகத்தை உணர்கிறான். இந்த ரஸத்தை உணர்கிறான் என்பதற்கு பக்தனுக்கு ஏற்படுகின்ற ஆனந்தமே ப்ரமாணம். பக்தனுக்கு ஏற்படும் மகிழ்ச்சியானது தனக்குத்தானே உணரப்படுவதாய் இருப்பதால் இதை மற்றொன்றைக் கொண்டு நிரூபிக்க வேண்டியதில்லை. கீதையில் "ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்துமவ்யயம்" என்ற வரிகளில் "ப்ரத்யக்ஷாவகமம்" அதாவது கண்கூடாக – ப்ரத்யக்ஷமாய் அனுபவிக்கிறது அல்லது உணர்த்தலுக்கு உரியது என்று பக்தியை விசேஷத்துச் சொல்லுவதை நினைவு கூறலாம்.

Koviloor Digital Library

ஸூத்ரம் 60 : "சாந்தி ரூபாத் பரமானந்த ரூபாச்ச"!!

ப்ரத்யக்ஷமாய் உணரப்படுவது எத்தன்மையது எனில் சாந்தியே வடிவானது. ஆனந்தமே வடிவானது என்கிறார் நாரத பகவான். சாந்தி வடிவமானது என்பதற்கு இத்தகைய பக்தனின் முகலாவண்யமே சான்றாகிறது. அமைதியே உருவானவனாக எந்நிலையிலும் நிதானம் தவறாக இருப்பதாலேயே பக்தி இவனுக்கு சாந்தியை கொடுக்கிறது என்பதும் புலனாகிறது. முகத்தின் ஒளிரும் பொலிவின் மந்த காஸத்தின் தன்மையால் இவன் தனக்குள்ளாக அனுபவித்து கொண்டிருக்கும் ஆனந்தமானது வெளிப்படுகிறது. தெளிந்த நீரோடையின் நிதானமும், நடுக்கடலின் அமைதியும், ஆனந்தத்தில் எல்லை நிலமான முகமலர்ச்சியும், இவனது தோற்றத்திலும், செயலிலும் உணரப்படுவதாலேயே பக்தி சாந்தவடிவமாகவும் ஆனந்த வடிவமாகவும் உள்ளது என்று முடிவாகிறது.

ஸூத்ரம் 61 : " லோக ஹானௌ, சிந்தா நகார்யா
நிவேதித ஆத்மலோக வேதத்வாத்" !!

உலகத்திலுள்ள துயர்களையும், துன்பங்களையும், லாப நஷ்டங்களையும் கண்டு பக்தன் கவலைப்படக்கூடாது- கவலைப்படமாட்டான். ஏனெனில் உலகியலிலான காரியங்களையும் ஏன் தனது ஆத்மாவையும் கூட இவன் பகவானுக்கு நிவேதனமாக பகவத் சரணங்களிலே அர்பணித்து விட்டான். தன்னைப் பூர்ணமாக பகவத் ப்ரஸாதமாக்கி தன்னை பகவானிடம் ஒப்புவித்த தன்மையை "அஹம்யந்த்ரோ ரிஷீகேச த்வம் யந்த்ரி கிலகேசவா" என்று நான் கருவி மட்டுமே, கருவியை இயக்கும் கர்த்தா நீ அல்லவா என்று இருக்கும் பக்தனுக்கு உலகியல்படி இவனுக்கோ, அல்லது உலகிற்கேதானோ ஏற்படும் லாப நஷ்டங்களையும் - மகிழ்ச்சி, துக்கம் ஆகியனவற்றையும் பகவத் ப்ரஸாதம் என்று எடுத்துக் கொள்கிறான். எனவே எந்த நிலையிலும் அசஞ்சலமாய் இருப்பான். கவலைப்படுவதோ – மகிழ்ச்சி கொள்வதோ இவனுக்கு ஸ்பாவம் இல்லை என்றாகிவிடுகிறது. எல்லாம் பகவான் இச்சைப்படியான நியமங்களே என்ற பரிபக்குவ நிலைக்கு தன்னைத்தானே தயார்படுத்திக் கொண்டவனாதலால் கவலையும் இல்லை, மகிழ்ச்சியும் இல்லை. இவனுக்குரிய சொத்தெல்லாம் உள்ளத்தில் பகவத் அனுபவத்தால் அனுகாரத்தால் எப்போதும் ஊறிக்கொண்டிருக்கும் பேரானந்தமும் சாந்தியுமே. உள்ளம் எப்போதும் பேரானந்த அலைமோதும் சமுத்திரமாய் விடுகிறது. சமுத்திரம் கரையை உடைத்துக் கொள்வதில்லையல்லவா? அதுபோல் எந்த நிலையிலும் இவன் உள்ளமும் ஸமபாவனையிலேயே இருந்து விடுகிறது.

Koviloor Digital Library

பகவான் கீதையில்,

"துல்ய நிந்தாஸ்துதிர் மௌநீ ஸந்துஷ்டோ யேன கேனசித்
அநிகேத ஸ்திரமதிர் பக்திமாந்மே ப்ரியோ நர"!! 12-19

எவர் இகழ்ச்சியையும், புகழ்ச்சியையும் சமமாக மதிக்கிறார்களோ, பகவானை எப்போதும் மனதில் சிந்தித்து இருக்கிறார்களோ தனது உடல்கூறு உபாதைகள் எவ்வாறாயினும் மகிழ்ச்சி கொள்கிறார்களோ, இருக்கும் இடத்திலும் பற்றற்று இருக்கிறார்களோ, நிலையான புத்தியுடனானவர்களோ அவர்களே எனக்கு பிரியமானவர்கள் என்கிறார்.

ஸூத்ரம் 62 : "நதத ஸித்தௌ லோகவ்யஹாரோ ஹேய:
கிந்து பலத்யாகஸ் தத்ஸாதனஞ்ச கார்யமேவ"

பக்தன் இந்த ப்ரேம பக்தி நிலையினை அடையும் வரையிலும் அவனுக்கு லோக ப்ரஞ்ஞையானது இருக்கும். இதனை சொல்ப வைராக்யத்தில் இவனாக தள்ளக்கூடாது. பகவத் சரணத்தில் திடவிஸ்வாசம் ஏற்படும் வரையிலும் மனது சஞ்சலத்துக்கு உட்படத்தான் செய்யும். எனவே இவன் தன் லௌகிக வைதீக கடமைகளை செவ்வனே செய்து வரவேண்டியது அவசியம். இக்கடமைகளை இவன் செய்து கொண்டே பலனில் சித்தத்தை செலுத்தாமல் ஈஸ்வரார்ப்பணமாக செய்து வர வேண்டும். அதே நேரத்தில் பக்தி சாதனைகளையும் விடாமல் செய்து வரவேண்டும். தன்னைத்தானே ப்ரேமபக்த நிலைக்கு எண்ணிக்கொண்டு இவனுக்குரிய கடமைகளைத் தவறவிடக்கூடாது. இவனாக கடமைகளை தியாகம் செய்வதும் கூட அதுவும் கர்மமாகவே முடியுமே தவிர பகவத் ப்ரேரணையாகாது. ஆனால் கடமைகளை ஆற்றுவதில் பலனை எதிர்பார்த்து போராடும் மனநிலை வந்தால் அது பக்த லட்சணங்களிலிருந்து தவறியது ஆகும். "மமமாயா துரத்யயா" என்ற கீதை வாக்யப்படி மாயை கடப்பதற்கு அரிதானது என்பதால் பூர்ண பக்தி நிலையினை அடையும்வரை மனமானது உலக விஷயங்களில் ஈடுபடத்தான் செய்யும். ஆனால் விவேகியான பக்தன் "இதுவும் பகவத் ஸங்கல்பம்" என்று சரண்யபாவத்துடன் நேரும் கடமைகளை செய்வான். இவ்வாறு தியாக புத்தியுடன் ஆற்றும் கடமைகள் கூட பக்தி ஸாதனமாக ஆகிவிடும் அழகையும் பார்க்கலாம். பகவான் கீதையில்,

"தஸ்மாத ஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர
அஸக்தோ ஹ்யாசரன்கர்ம பரமாப்நோதி பூருஷ்"!! 3-19

"எப்பொழுதும் செய்ய வேண்டிய கடமைகளை பற்றின்றி செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருந்தால் பற்றற்ற நிலையில் கடமையாற்றுபவன்

பரமாத்மாவை அடைகிறான்" என்கிறது.

ஸுத்ரம் 63 : "ஸ்திரி, தன, நாஸ்திக சரித்ரம் நஸ்ரவணீயம்"

பெண்கள் விஷயமான வார்த்தைகளையும், பணம் ஈட்டுவதிலேயே குறிக்கோளாக கொண்ட பேச்சுக்களையும் நாத்திகர்களுடைய பேச்சுக்களையும் கேட்கவே கூடாது என்கிறார் தேவரிஷி.

மனத்தை எவ்வளவு தூய்மைப்படுத்தி வைத்திருந்தாலும் விஷயவாஸனா சப்தங்கள் பக்தனை மார்க்கம் தவற வைத்துவிடும் என்ற பயம் நாரதருக்கு உண்டு போலும். திடமான மனதில் பால் உணர்ச்சியை தூண்டும் கதைகளோ, நாடகங்களோ காமத்தை தூண்ட ஹேதுவாகும். பொருளில் பேராசை கொண்டவர்களின் உறவினால் ஏற்படும் பேச்சுவார்த்தைகள் மனதிலும், பேராசையை தோற்றுவித்துவிடும். நாத்திகர்களின் உறவினை முற்றிலுமாக விலக்கிவிட வேண்டும். "ஸஜ்ஜன ஸங்கம் பஜரே" என்பதைக்காட்டிலும் "துஸ்ஜன ஸங்கம் த்யஜரே" என்பது மிகமிக அனுஷ்டிக்கத்தக்கது. ஒருமையுடன் நின் திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும் என்பதை விட "உள்ளொன்று வைத்து புறம் ஒன்று கூறுவோர் உறவு கலவாமை வேண்டும்" என்பது நினைவில் கொள்ளத்தக்கது. இதனையே திருவருட்பாவில் இராமலிங்க வள்ளலார்,

"காம உட்பகைவனும் கோபவெங் கொடியனும்
கனலோப முழு மூடனும்
கடுமோக வீணனும் கொடுதமெனும் துட்ட
கண்கெட்ட ஆங்காரியும்
ஏமமறுமாச்சர்ய விழலனுங் கொலையென்று
இயம்பு பாதகனுமாமிவ்
எழுவரும் இவர்குற்ற உறவான பேர்களும்
எனைப் பற்றிடாமல் அருள்வாய்"

என்று பகவானிடம் ப்ரார்த்திப்பதை காணலாம்.

ஸுத்ரம் 64 : "அபிமான தம்பாதிகம் த்யாஜ்யம்" !!

"பக்தன் கர்வம், தற்பெருமை இவைகளை விட்டுவிட வேண்டும் " என்கிறார் நாரதர்.

பக்தனுக்குரிய எல்லா குணங்களும் கைவரப்பெற்று ஆனால் தான், "பக்தன்" என்ற எண்ணம் மேலாங்கி விட்டால் பலனில்லை அல்லவா. எனவேதான் மஹனீயர்கள் எல்லாம் மஹான்களாக இருந்தும் தன்னைப்

Koviloor Digital Library

பாபி என்றும் ஞானஹீனன் என்றும், பக்தி ஹீனன் என்றும் சொல்லி வந்திருக்கிறார்கள். தற்பெருமைபட்டுக்கொள்ளாத பக்தன்தான் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளமாட்டான். பல துறைகளிலும் வெற்றி பெற்றவர்கள் கர்வத்தாலும், தான் என்ற அகந்தையாலும், அழிந்துபட்டதையும் ப்ரேம பக்தர்கள் மட்டும் எதற்கும் கர்வப்படாது, தன்னைப்பற்றி ப்ரகடனப் படுத்திக்கொள்ளாத நிலையிலும் இன்றும் சுடர் விளக்காக பிரகாசித்துக் கொண்டிருப்பதையும், சரித்திரமே சான்று பகிர்கின்றது.

பகவான் கீதையில்,

> "இந்திரியார்த்தேஷீ வைராக்யம நஹங்கார ஏவ"

என்றும்,

> "அகங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் பரிக்ரஹம்
> விமுச்ய நிர்மம: சாந்தோ ப்ரம்ம பூயாய கல்பதே" !! 18-53

கர்வத்தையும், வலிமையையும், கர்வத்தையும் காமத்தையும், கோபத்தையும் நீக்கி எப்பொழுதும் த்யானத்தில் நிலைத்திருந்து தற்பெருமை இல்லாமல் இருப்பவன் ப்ரம்ம பூதனாகிறான் என்றும் சொல்லப்படுகிறது.

ஸுத்ரம் 65 : "ததர்பிதா கிலாசார: ஸன் காமக் க்ரோத
அபிமானாதிகம் தஸ்மின் ஏவ கரணீயம்" !!

பக்தன் தான் செய்யும் கர்மாக்களையும், அந்த கர்மாக்களின் பலன்களையும் பகவானிடத்தே அர்ப்பணம் செய்வது போலவே தன்னுள் ஏற்படும் காம (ஆசைகள்), கோபம் (பகைமை), கர்வம் முதலியனவைகளையும் பகவானிடத்திலேயே கொள்ள (செலுத்த) வேண்டும் என்கிறார் நாரதர்.

பலன்களை கருதாமல் கர்மாக்களைச் செய்வது பக்தி செய்வது என்பது பக்தனுக்குரிய ஸ்பாவிகம் என்று ஏற்கனவே முன் ஸுத்திரங்களில் கூறிவிட்டதால் பக்தனுக்கு ஏற்படும் ஆசை, கோபம், கர்வம், இவைகளையும் பகவான்பால் திருப்பிட வேணும். முன் ஸுத்திரங்களின் பக்தலக்ஷணங்களை பரக்கக் பேசியபின் என்ன விஷயத்தில் பக்தனுக்கு காம, க்ரோதம், அபிமானாதிகம் ஏற்பட்டுவிடும் என்று நாரதர் எதிர்பார்க்கிறார் என்று புரியவில்லை. வெளி உலக விஷயமாக பக்தனுக்கு ஆசையோ, கோபமோ, ஏற்பட வாய்ப்பே இல்லை என்பது முடிந்த முடிவாகிறது. எனவே இத்தகைய மாறுபட்ட உணர்ச்சிகளும், உணர்வுகளும் கூட ஏற்பட பகவத் விஷயம் தான் காரணமாய் இருக்க வேண்டும். ஆசை என்பது பகவானை நேரில் பார்க்க துடிக்கும் துடிப்பு. இதை கைகூடாதபோது ஏற்படும் கோபம்

Koviloor Digital Library

பக்தனுக்கு ஒருக்கால் ஏற்படலாம். இந்த தனது ப்ரார்த்தனை கைகூடி வர தாமதமாகும் போது த்வேஷமும் கூட பகவான் மீது ஏற்படும். இத்தகைய நிலையில் தான் இருப்பதால் கர்வமும் சற்று வரலாம். இவைகள் எல்லாவற்றையுமே இவன் பகவான் மேல்கொண்டு சேர்க்க வேண்டும் என்பதால் இந்த பக்தன் நிலையும் வரவேற்க்கத்தக்கதாகும்.

ஸூத்ரம் 66 : "த்ரிரூப பங்கபூர்வகம் நித்யதாஸ நித்ய காந்தா பஜனாத்மகம்வா ப்ரேமைவகார்யம் ப்ரேமைவகார்யம்" !!

ஸூத்ரம் 56ல் விவரிக்கப்பட்ட முக்குணங்களையும் வெல்வதின் மூலம் பகவானிடம் அன்பு செய்வதிலும், பகவானைத் தன்னுடைய எஜமான் தான் தாஸன் என்றும் பகவானைத் தன் ப்ராணகாந்தன் தான் அவனுடைய ப்ரேமைக்குரியவன். என்றும் எண்ணி செய்யக்கூடிய அன்பு ஒன்றே அனுஷ்டிக்கத்தக்கது அன்பு ஒன்றே அனுஷ்டிக்கத்தக்கது என்கிறார் தேவரிஷி நாரதர்.

எவ்விதம் எஜமான் ஏவிய வேலையை வேலைக்காரன் செய்கிறானோ அதுபோல் தனக்கு உரிய கடமைகள் யாவையுமே எஜமானாகிய பகவான் தனக்கு இட்ட பணி என்ற கடமை உணர்வுடன் செயல்படுவான். கணவன் தன்னை எப்படி ஆள்கிறானோ, அதுவே என் பாக்கியம் என்ற உத்தம மனைவியின் நிலையில் பகவான் எவ்விதமாக என்னை ஆட்படுத்தினாலும் அது என் பாக்கியமே என்று காந்த பாவபக்தன் தன்னை பகவானிடம் ஒப்படைத்துக் கொண்டுவிடுவான். எல்லாவற்றுக்கும் சிகரமாக ப்ரேமையுடன் கூடிய ஸங்கீர்த்தன ரூபமாக பகவானை ஆராதிப்பதையே எல்லாவற்றிலும் சிறந்தது என்பதால் அதுவே அனுஷ்டிக்கத்தக்கது அதுவே அனுஷ்டிக்கத்தக்கது என்று இரண்டு தடவை வலியுறுத்திக் கூறுகிறார். நாமஸங்கீர்த்தனம் (பஜனம்) என்பது பகவானுடைய கல்யாண குணங்களை பரக்கப்பாடுவது. இதில் பக்தன் அடையும் பேரானந்தம் வேறு எதிலும் அவனுக்கு கிட்டமுடியாது. ப்ரயாசை இல்லாமலே இவனது முக்கரணங்களும் ஒருமைப்பட்டு, உள்ளம் குழைந்து மனம் நெகிழ்ந்து, தொண்டை தழுதழுக்க பக்தன் இத்தகைய பஜனானந்தத்தில் அடையும் ஆனந்தம் எத்தகையது என்பது ஸ்வானுபவம் அல்லவோ! நாரதர் எப்பொழுதுமே நாமகீர்த்தனம் செய்பவராதலால் அதன் அருமையையும், பெருமையையும் உணர்ந்து தான் உணரும் ஆனந்தம் எல்லா ப்ரேம பக்தர்களுக்கும் லபிக்கட்டும் என்ற உதார குணத்தால் அழுந்தச் சொல்கிறார். எல்லா பக்தியிலும் தாஸ பக்தியும் காந்தாபாவ பக்தியும் உயர்ந்தது. அதனினும் சிறந்ததும் அனுஷ்டிக்க லகுவானதும் பரிபூர்ணப் ப்ரேம பக்தியின் வடிவமான நாமஸங்கீர்த்தனமே என்பது நாரதர் அபிப்ராயம்.

Koviloor Digital Library

ஸூத்ரம் 67 : "பக்தா ஏகாந்தினோ முக்யா:" !!

ஏகாந்த பக்தர்களே சிறந்தவர்கள். ஏனெனில் பக்தி ஒன்றே அவர்களது நோக்கம், லட்சியம் எல்லாம் பக்தியின் பல்வேறு பரிமாணங்களை இதற்கு முன் கூறிவந்த நாரதர் இங்கே ஏகாந்த பக்தியை முக்கியமாக சொல்கிறார். ஏகாந்த பக்தி இங்கே அனன்ய பக்தி என்று விசேஷ அர்த்தம் கொள்ளப்படவேண்டும். ப்ரம்ம வாதிகளையும், சூரியமண்டல மத்ய வர்த்தியாக வழிபடும் ஏகாந்தவாதிகளையும், இங்கே கொள்ளாமல் தன் இஷ்ட தெய்வத்தின் பால் தன் மனதைப் பறிகொடுத்து இஷ்ட தெய்வத்தைத் தவிர வேறு தெய்வங்களை எக்காரணம் கொண்டும் நினைத்தும் பார்க்கமாட்டானோ அத்தகைய பக்தியை இங்கே "ஏகாந்தினோ" என்று சொல்லால் சொல்லப்படுகிறது.

அத்தகைய ஏகாந்த பக்தர்களை ச்ரேஷ்டமானவர்கள் எல்லா தெய்வங்களும் ஒன்றே என்ற ஸமபாவனை உலகியலில் மிகச் சிறப்பானது தான் எனினும் பக்தன் விஷயத்தில் இது தனி. ஏகாந்த பக்தியால் ஈடுபட்ட பக்தர்கள் வெளிப்படுத்திய பாவங்கள் அவர்களது க்ரந்தங்களிலும் கீர்த்தனங்களிலும் மணிமகுடமாக பிரகாசிக்கிறது. மறந்தும் நாயன்மார்கள் 63வரில் ஒருவர்கூட விஷ்ணுவைப் பாடவில்லை. ஆழ்வார்கள் பன்னிருவரில் யாரும் சிவனைப்பாடவில்லை. இவர்களிடம் விஷ்ணுத்துவேஷம் - சிவத்துவேஷம் சிறிதளவும் கிடையாது என்பதற்கு அவர்கள் பாடல்களே சான்று. ஆழ்வார்கள் விஷ்ணுவை 108 திவ்ய தேசங்களில் தேடித் தேடிச் சென்று பாடியதில் தொண்டரடிப் பொடிஆழ்வார் என்ற விஷ்ணு சித்தர் ஸ்ரீரங்கநாதனைத் தவிர வேறு எந்த பெருமாளையும் பாடவில்லை. விஷ்ணு பக்தியிலும் கூட இந்த ஏகாந்த நிலை. அவதாரங்களில் ராமபக்தர்கள் - க்ருஷ்ண பக்தர்கள் தனித்தனி. துளஸிதாஸ், ராமதாஸ் போன்ற ராமபக்தர்களுக்கு ராமன் தவிர வேறு தெய்வமில்லை. பக்த மீரா, லீலாசுகர், ஸூர்தாஸ் போன்றவருக்கு க்ருஷ்ணன் தவிர வேறு தெய்வமில்லை. இதனால் இவர்கள் பக்திநிஷ்டை பிரகாசமாயிற்றே தவிர வேறு இல்லை. பக்த ப்ரஹ்லாதனும் ஏகாந்த பக்திர் கோவிந்தே யத்ஸர்வத்ர தத்க்ஷணம்" என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. இதனை சொல்ல வந்த ஸ்ரீமத்பாகவத மஹாபுராணம்,

" நபார மேஷ்ட்யம் நமஹேந்ரதிஷ்ண்யம்
நஸார்வபௌமம் நரஸாதி பத்யம்
நயோக சித்திர் அபுனர்பவம்வா
மய்யர்ப்பிதாத் மேச்சதி மத் விநாந்யத்" !!

பக்தியின் ஏகாக்ரதையால் என்னிடம் மனதை சமர்ப்பித்தவன் பிரம்ம பதவியையோ, இந்திர பதவியையோ பூவுலகமாளும் சக்ரவர்த்தி

Koviloor Digital Library

பதவியையோ, பாதாளத்தின் ஆட்சியையோ, ஏன் மோக்ஷத்தையோ கூட விரும்பமாட்டான். என்னைத்தவிர வேறு எதிலும் அவனுக்கு விருப்பமில்லை. இந்த ஸ்ரீமத் பாகவதத்தின் சாரத்தையே ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் தனது கீர்த்தனங்களில் ஒன்றில்,

"காமயே நாஹம் சாம்ராஜ்ய ஸித்தம்
காமயே நாஹம் பாரமேஷ்ட்யப் ப்ராப்திம்
காமயே நாஹம் கைவல்ய முக்திம்
காமயே ததவை சரணப்ஜ பக்திம்"

என்கிறார்.

ஸூத்ரம் 68 : "கண்டாவரோத ரோமாஞ்சாச்ருபி:
பரஸ்மரம் லபமான: பாவயந்தி குலானி ப்ருதி வீஞ்ச" !!

இந்த ஏகாந்த பக்தி நிஷ்டர்களின் நிலையினைக் கூறவந்த நாரதர் இவர்கள் ஒருவருக்கொருவர் பகவானைப் பற்றிய ஸல்லாபத்திலேயே ஈடுபட்டு, குரல் தழுதழுக்க, மேனி சிலிர்க்க, ஆனந்தக்கண்ணீர் பெருக பகவத் குணங்களிலேயே மூழ்கிப் போவார்கள். இத்தகைய உத்தம சீலர்களாலல்லவோ புவனமும் பாவனமடைகிறது என்கிறார்.

கண்டாவரோத ரோமாஞ்சஸ்ரூபி என்கின்றதையே ஸ்வாமி நம்மாழ்வார்.

" அழுவன் தொழுவன் ஆடிக்காண்பன்
பாடி அலற்றுவன்
தழுவல் வினையால் பக்கம் நோக்கி
நாணிக் கவிழ்ந்திருப்பன் .... என்றும்

கங்குலும் பகலும் கண்துயின்றறியாள்
கண்ண நீர் கைகளால் இறைக்கும்
சங்கு சக்கரங்கள் என்றே கைகூப்பும்
தாமரைக் கண் என்றே தளரும்
எங்கனே தரிக்கேன் உன்னை விட்டென்றும்
இருநிலம் கை துழா விருக்கும் ...."

என்றும் இன்னும் பல பாசுரங்களாலும், ப்ரேம பக்தர்களின் ஏகாந்த நிஷ்ட நிலையினை வர்ணிக்கிறார். "காதலாகி கசிந்து உருகி கண்ணீர் மல்கி" என்ற "சம்பந்தர் தேவாரமும்" இதையே உணர்த்துகிறது. பரஸ்பரம் லபமானா என்பதை ஸ்ரீமத்பகவத் கீதையில்,

Koviloor Digital Library

"மத் சித்தா மத்கதப்ராணா
போதயந்த: பரஸ்பரம்
கதயந்தஸ்ச மாம்நித்யம்
துஷ்யந்தி ச ரமந்திச" !! 10-9

என்னிடமே தன் சித்தத்தை செலுத்தியவர்களும் என் கதைகளிலே உயிரையே வைத்திருப்பவர்களுமான பக்தர்கள் தங்களுக்குள்ளேயே என்னைப் பற்றிய குணங்களையும் எனது ப்ராபாவங்களையும் பேசிக்கொண்டே எப்பொழுதும் இன்புற்று மகிழ்ந்த வண்ணம் என்னிடமே இன்புறுகிறார்கள். (என்னுடைய நாமங்கள் குணங்கள் பிரபாவங்கள் லீலைகள், தத்துவங்கள், ஸ்வரூபங்கள், இவைகளைப்பற்றி தங்களுக்குள் பேசி மகிழ்வதினால்) என்று கூறுகிறது.

இத்தகைய மஹனீயர்கள் உலகெங்கும் சஞ்சரித்து பகவானின் ப்ரபாவங்களை வெளிப்படுத்துவதால் அல்லவோ இவர்கள் பாதம்பட்ட பூமியானது பரிசுத்தமாகிறது.

ஸூத்ரம் 69 : "தீர்தி குர்வந்தி தீர்த்தானி, ஸுகர்மீ குர்வந்தி கர்மாணி, ஸச்சாஸ்த்ரீ குர்வந்தி சாஸ்த்ராணி" !!

இத்தகைய மஹான்களாலேதான் புண்ணிய நதிகள் மேலும் புண்ணியமடைகின்றன. எல்லா கர்மங்களும் ஸத்கர்மங்களாகின்றன. சாஸ்திரங்கள் எல்லாம் மேலும் புனிதமாகின்றன என்கின்றார் நாரதர்.

ஹரிதாஸர்களான ஸாதுக்கள் சாதாரண நதியினில் ஸ்நானம் செய்தாலும்கூட அந்த நதி புண்ணிய தீர்த்தமாக மாறிவிடும்போது புண்ணிய நதிகள் இந்த ஸாதுக்கள் தன் திருவடிகளை நனைக்கும்போது ஹரிபாததீர்த்தம் ஹரி தாஸபாத தீர்த்தமாகி முன்னிலும் ஸ்ரேஷ்டமாவதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது. பாவிகள் தங்கள் பாவங்களை இந்த புண்ணிய நதியில் கரைக்கும்போது கரைக்கப்பட்ட பாவங்களை இல்லாமல் போக்கும் தபஸ் இவர்களிடமல்லவா உள்ளது. இவர்கள் தனியாக கர்மாக்கள் ஏதும் செய்ய வேண்டுமா என்ன? எதைச்செய்தாலும் அதை ஈஸ்வராப்பணமாக இந்த ஸாதுக்கள் செய்வதாலேயே செய்யும் எல்லாக் காரியங்களுமே ஸத்கர்மாக்கள் அல்லவா? இவர்கள் தன் திருவாய் மலர்ந்து எதைச் சொன்னாலும் அதுவே திருவாய்மொழி ஆகிவிடும். எல்லாமே புராண ஸாரமாக இருக்கும்போது இவர்கள் புண்ணிய புராணங்களையே கூறும்போது அது எத்தகைய மேன்மையடைகிறது.

இவர்களது மேன்மையை வர்ணிக்க வந்த ஸ்ரீமத் பாகவதம்

Koviloor Digital Library

" நஹ்யம்மயானி தீர்த்தானி
நதேவா ம்ருச்சிலாமயா
தேபுனந்து உருகாலேன
தர்ஸனாதேவ ஸாதவ: "

புனித நதிகளை தேடிச்சென்று புண்ணியம் கிட்டுவதும் அர்ச்சாவதார பகவானை கோவில் கோவிலாக சென்று வழிபட்டு கிடைக்கும் புண்ணியமும் மஹான்களை தர்ஸனம் செய்வதாலேயே கிடைத்து விடுகிறது.

என்கிறது.

ஸாதுக்களே புண்ணிய தீர்த்தங்கள், ஸாதுக்கள் எது செய்யினும் அது ஸத்கர்மாக்கள். ஸாதுக்களின் அருள்வாக்கான வார்த்தைகளே சாஸ்திரங்கள், இதிகாச புராணங்கள் என்பதே இந்த ஸுத்திரத்தின் ஹ்ருதயம்.

ஸுத்ரம் 70 : "தன்மயா:" !!

மேலே கூறப்பட்ட ஸுத்திரத்தின் நிதர்சனத்தை நிலைநாட்டும் வண்ணம் நாரதமகரிஷி கூறுகிறார்.

ஏன்எனில் ஸாதுக்கள் தன்மயர்களாக இருக்கிறார்கள் என்று

எப்போதும் இறைவனுடனேயே ஒன்றிய நிலையில் அவனது நினைவாகவே எப்பொழுதும் ஆழ்ந்து போய் இருப்பவர்களாயும் மனம் - வாக்கு – காயம் ஆகிய த்ரிகரணங்களையும் எக்காலத்தும் எந்நேரத்தும் பகவத் சிந்தனையிலேயே ஒடுக்கியவர்களாயும் இருப்பதால் இவர்களை "தன்மயர்கள்" என்கிறார். மனமோ எல்லா நேரத்திலும் இறை சிந்தனையில், வாக்கோ மூச்சுக்கு மூச்சு பகவந் நாமம் சொல்வதில், காயமாகிய சரீரமோ இந்த இரண்டுக்கும் அனுசரணையான காரியங்களில் மட்டும் என்பதால்,

இந்த மஹனீயர்களே தீர்த்தங்கள்
இந்த மஹனீயர்களே ஸத்கர்ம பலன்கள்
இந்த மஹனீயர்களே இதிகாஸ புராணங்கள்

என்பதால் இவர்களே நடமாடும் கோவில்கள் - புண்ணிய தீர்த்தங்கள் - புராண சாஸ்திரங்கள்.

ஸுத்ரம் 71 : "மோதந்தே பிதரோ, ந்ருத்யந்தே தேவதா: ஸனாதா சேயம் பூர்ப்வதி" !!

இத்தகைய மஹனீயர்களான ஸாதுஸ்ரேஷ்டர்களை கண்டு அவர்களின் முன்னோடிகளான ப்த்ருக்கள் ஆனந்தப்படுகிறார்கள்.

Koviloor Digital Library

தேவதைகள் மகிழ்ச்சியால் நடனமாடுகிறார்கள். பூமாதேவியானவள் ஒரு சிறந்த புருஷனை அடைந்தவளாகிறாள் என்கிறார் நாரதர்.

இந்த ஸாதுக்கள் உலகின்கண் சாதாரணமாக காணக்கிடைக்க மாட்டார்கள். இதுபோன்ற மஹனீயர்கள் அவதரித்ததால் இவர்களது முன்னோர்களான பித்ருக்கள் நம்குலத்தில் இப்படி ஒரு புண்ணிய ஆத்மா பிறந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைவதில் வியப்பு என்ன. அத்தைத் தின்று அங்கே கிடக்கும் கோடானுகோடி மக்களில் இவன் ஒருவனே பூஜிக்கத்தக்கவன் அல்லவா? எனவே இவனது ப்த்ருக்கள் பூரித்துப்போகிறார்கள். தேவதைகளைப் பற்றி கேட்கவும் வேண்டுமா! லோகாயதமான மக்களைக்கண்டு மனம் சலித்துப்போன தேவர்கள் இதுபோன்ற உத்தமஸாதுக்களைக் கண்டு மனம் குதூகலித்து ஆனந்தப்பட்டு நர்த்தனம் கூட செய்வார்கள். இதற்கு நாரதரே உதாரணம். துருவன், ப்ரஹ்லாதன் போன்ற பக்தர்களைக் கண்டுதானே அதே நினைவில் தானே இன்றும் வீணையும் கையுமாக உலகமனைத்திலும் நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டு திரிந்து வருகிறார். பூமாதேவியோ பொறுமையின் சிகரமாக இருந்தும்கூட உலகத்தின் நிலைகண்டு கண்ணீர் வடிக்கிறாள். பகவத் பக்தி இல்லாத இத்தனை பாவிகளான மக்களைச் சுமக்கிறோமே என மனம் புண்படுகிறாள். அவளது கண்ணுக்கு இத்தகைய மஹான்கள் தென்பட்ட உடனேதான் இந்த பாவிகளின் சுமையையும் மறந்து இவன் ஒருவனைக் கண்டே மகிழ்ச்சி அடைகிறாள். இந்த பக்தனின் சரணம் தன்மீது பட்டதே என எண்ணி பூரித்துப்போகிறாள். பக்தனின் வாழ்க்கையானது பித்ருக்களாலும், தேவர்களாலும், பூமாதேவியாலும் கொண்டாடப்படுகிறது.

"விஸ்ருஜ்ய லஜ்ஜாம் யோகீதே மன்னாமனி நிரந்தரம்
குலகோடி ஸமாயுக்த: லபதே மாமகம்பதம்"

என்றும்

"நாஹம் வஸாமிவைகுண்டே நயோகிஹ்ருதயே ரவௌ
மத்பக்த்யா எத்ரகாயந்தி தத்ர திஷ்டாமி நாரத"

என்றும் புராணங்கள் கூறுகின்றன.

ஸூத்ரம் 72 : " நாஸ்திதேஷு ஜாதி-வித்யா-ரூப-குல-தன க்ரியாதி பேத:"!!

இத்தகைய மஹான்களுக்குள் எந்த பேதங்களும் இல்லை. ஜாதியினாலோ, கல்வி அறிவினாலோ, புற அழகினாலோ, குலபரம்பரயினாலோ, பணம்பதவி இவைகளினாலோ, ஞானிகளுள் -

Koviloor Digital Library

பக்தர்களுள் - பேதம் இல்லை என்கிறார் நாரதர்.

பக்தர்கள் எந்த வர்ணத்தாராயினும் கல்வியினில் மேதையாகினும் மற்று புத்தக அறிவே இல்லாதவராயினும், அழகுள்ளவராயினும், குரூபியாயினும், எக்குலத்தவராயினும், செல்வந்தராயினும், ஏழையாயினும், சேவிக்கத்தக்கவர்கள் என்பதே இதன் உட்கருத்து. மஹான்கள் தங்களுக்குள்ளும் வேற்றுமை பாராட்டமாட்டார்கள் என்பதும் மட்டுமல்ல சாதாரண மனிதர்களிடம் கூட இத்தகைய வேற்றுமையை எண்ணமாட்டார்கள். பக்தி என்ற தனித்தன்மை ஒன்றினால் மட்டுமே பக்தன் ஸேவிக்கத்தக்கவன். இந்த ஒரு பெருமை தவிர வேறு எந்த பெருமையினாலும் இவனுக்கு சிறப்பில்லை.

ஸுத்ரம் 73 : "யதஸ்ததீயா:"

ஏனெனில் பக்தன் பகவானைச் சேர்ந்தவனே. பக்தன் பகவானிலும் வேறுபட்டவனல்ல. பக்தனும், பகவானும் ஒன்றே என்ற நிலைக்கு நாரதர் பக்தனை ஏற்றி வைக்கிறார். இன்னும் சொல்லப்போனால் பகவான் பக்தனுக்கு கட்டுப்பட்டவன் என்கிறது ஸ்ரீமத்பாகவதம். "துர்வாஸமுனிவர் அம்பரிஷ மகராஜனிடம் அபசாரப்பட்டுவிட, விஷ்ணுசக்ரம் முனிவரைத் துரத்துகிறது. ப்ரமலோகம், சிவலோகம் சென்றும் முனிவருக்கு அபயம் கிடைக்காததால் வைகுண்டலோகம் சென்று ஸ்ரீமன் நாராயணனைச் சரணமடைகிறார். ஸ்ரீமன் நாராயணனோ மகரிஷியிடம்

"அஹம் பக்தபராதினோ ஹ்யஸ்வந்த்ர இவத்விஜ
ஸாதுபிர் க்ரஸ்தஹ்ருதயோ பக்தைர் பக்தஜனப்ரிய:"

என்று துர்வாஸமுனிவரிடம் "ஸ்வாமி நான் பக்தனுக்கு அடிமை. அவன் விஷயத்தில் எனக்கு எந்த சுதந்திரமும் கிடையாது. பக்தர்களின் ஹ்ருதயத்தில் வசிப்பவன் நான் என்பது உமக்குத்தெரியாதோ என்று கூறிவட முனிவர் பக்தனான அம்பரிஷனையே சரணமடைய அம்பரிஷன் வேண்டுகோளுக்கு இணங்கி சுதர்ஸனசக்ரம் ஸமாதானமடைந்தது என்ற கதையின்மூலம் பக்தன் வேறு பகவான் வேறு அல்ல என்ற ஸுத்திரத்தின் ஸாரத்தை கூறுகிறது.

ஸுத்ரம் 74 "வாதோ நாவலம்ய:"

பக்தன்வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடக்கூடாது என்கிறார் நாரதர்.

பக்தன் உலகியல் விஷயமான வாதப்பிரதிவாதங்களில் ஈடுபடமாட்டான் என்பதை நாரதர் அறிவார். இங்கே பகவத்

Koviloor Digital Library

ஸம்பந்தமாகவேனும் வாதம்செய்யக்கூடாது என்பது உணர்த்தப்படுகிறது. பகவத் விஷயமாகவே வாதப்பிரதிவாதங்கள் என்பதால் பல கருத்துக்களை சொல்லவேண்டியதான நிலையில் மற்றவர் மறுத்துச் சொல்வதால் பகவத்விஷயமாக பல அபிப்ராயங்கள் தேவையில்லை. இந்த சர்ச்சைகளால் எந்த முடிவும் எட்டிவிடப்போவதில்லை. வீண்ப்ரயாசை பக்தனுக்கு எதற்கு என்ற கவலையே நாரதருக்கு. இந்த வீண்விவகாரங்களால் நேரம்தான் வீணாகுமே தவிர கண்டபலன் வேறில்லை. இந்த வாக்குவாதத்தினால் பகவத் குணமும் பாழாகி அதனால் ஏற்பட இருந்த பரமானந்தமும் இல்லை என்றாகி வீணான மனவருத்தங்களுக்கு ஆட்படவேண்டியது வரும். எனவே இருக்கும் நிம்மதியை விற்று கவலையை வாங்குகின்றவனாக பக்தன் ஆகிவிடக்கூடாது என்பதாலேயே வீண்விவாதங்கள் விலக்கத்தக்கவை ஆகின்றன.

விஷயங்களைத் தெரிந்துகொள்ள செய்யப்படும் சம்பாஷணைகள் வேறு. தன் கொள்கையை வலியுறுத்தும் விவாதங்கள்வேறு. இதில் இரண்டாவது வாதப் பிரதிவாதங்களையே நாரதர் சொல்கிறார். வீண்விவாதங்களால் பயன்ஏதும் இல்லை. பயன்துய்க்க எண்ணுபவனுக்கோ விவாதமே தேவைஇல்லை. வீணாக ஒருவன்பால் தன் எண்ணங்களையும், கொள்கைகளையும் திணிக்க வேண்டிய அவசியமே இல்லை. அது ஆத்மார்த்தமான விஷயமானாலும் கூட. மேலும் பக்தன் விவாதத்தில் வீணாகும் நேரத்தில் ஆயிரம் நாமங்கள் ஜபித்துவிடுவான் என்பதால் வீண்விவாதங்கள் வீண்பிரயாசையே.

ஸூத்ரம் 75 : "பாகுல்யா வகாசா – தநிய தத்வாச்ச" !!

பகவானைப் பற்றிய வாக்குவாதமேயாயினும் அவைகள் மிகுந்த அபிப்ராய பேதத்திற்கு இடமளிப்பதாலும் எந்த ஒரு முடிவுக்கும் வர இயலாததாலும் தவிர்க்கப்பட வேண்டியவையே. கருத்துக்கள் ஆனந்தம். அத்வைதம் - த்வைதம் - விசிஷ்டாத்வைதம் எல்லா மார்க்கங்களுக்குமே வேதமே அடிப்படையாயினும் இதில் புகுந்து வாதம் செய்ய முற்பட்டால் இதற்கு ஒரு முடிவு உண்டோ!

ஸீத்ரம் 76 : "பக்தி சாஸ்ராணி மனனீயானி. தத்உத்போதக கர்மாண்ணயபி கரணியானி" !!

பக்தியினைக் கூறும் நூல்களையே பக்தன் படித்துவர வேண்டும். அந்த பக்தி சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள பக்திக்கு அனுசரணையான காரியங்களையே செய்து வர வேண்டும் என்கிறார் நாரதர்.

Koviloor Digital Library

உலகில் படிக்க வேண்டிய நூல்கள் ஆனந்தம் யோகயாகக்ரியை விஷயமான நூல்கள், யாகயஞ்ஞாதி கர்மாக்கள் பற்றிய நூல்கள் என்று பல்வேறு தலைப்புகளிலே சாஸ்திரங்கள் பரக்கக்கிடைக்கின்றன. இதில் பக்தனுக்கு நாட்டம் செல்லாது என்பதாலேயே ஸ்ரீமத்பகவத்கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற பக்தியை உத்கோஷிக்கும், போஷிக்கும் நூல்களே பக்தனுக்கு போக்யமாயிருக்கும். ஏற்கனவே பக்திக்கனல் கனிந்து நிற்கும் பக்தனுக்கு மேலும் மேலும், பக்தி விஷயமான சாஸ்த்திரங்களே மன நிறைவைத் தருவதாகவும் அனுஷ்டிக்கக் கூடியதாகவும் அமையும். பக்தனின் மனம்போல பக்தி சாஸ்த்திரங்கள் சொல்லும் சாதனைகளை அனுஷ்டிப்பது இவனுக்கு விருப்பமானதாகவும், லகுவானதாகவும் ஆகிவிடுகிறது.

ஸூத்ரம் 77 : "சுக துக்க இச்சாலாப இத்த்யக்தே
காலேப்ரதீக்ஷமாணே க்ஷணார்த்தமபி வயர்த்தம் நநேயம்" !!

சுகம் - துக்கம் ஆசை - லாபம் ஆகிய உணர்வுகளைப் புறம்தள்ளி (இடம்தராமல்) பகவானின் அருள் சுரக்கும் காலத்தை எதிர்பார்த்து, வினாடி நேரத்தையும் வீணாக்காமல் (பகவத் சிந்தனையிலேயே) இருக்க வேண்டும் பக்தன் என்கிறார் நாரதர்.

பக்தனுக்கு இயற்கையாகவே எல்லாவற்றையும் சமமாக நோக்கும் குணம் கைவரப் பெற்றவன் என்றாலும் மீண்டும் பக்தனைச் ஜாக்கிரதைப்படுத்துகிறார் நாரதர். சுக, துக்க, ஆசை, லாப உணர்ச்சிகளுக்கு கூட பக்தன் தன் மனதில் இடம்தரலாகாது. அரை நொடியேனும் இந்த உணர்வுகள் இவன் மனதில் உட்புகுமானால் அந்த அரைநொடி பகவத் சிந்தனையை இவன் மறந்தவனாகிறான் என்பதால் வினாடி நேரம் கூட வீணாக்காமல் பகவதனுபவத்தில் இருக்க வேண்டும். இதனாலேயே மேலே சொல்லப்பட்ட சில ஸூத்திரங்களில் வாதப் பிரதிவாதங்கள் கூடாதென்றும், பக்தி சம்பந்தமான நூல்களையே படிக்க வேண்டும் என்று சொன்னார் என்று புரிகிறது. பகவத் அருள் எந்த நேரத்தில் எப்படி சுரக்கும் என்பது எவருக்கும் புரிந்துகொள்ள முடியாத ஒன்று என்பதாலேயே அருளை எதிர்பார்த்து எப்போதும் இருந்து ஒருநொடி கூட வீணாக்கக்கூடாது. இவ்வாறு கணநேரமும் வீணாகாமல் பக்தி சாதனைகளை செய்து வரும் பக்தனுக்கு பகவானது இன்னருள் சுரக்கும் நேரத்தில் அதை பெற்றுக்கொள்ள இவன் தயார் நிலையில் இருப்பானன்றோ!

ஸூத்ரம் 78 : "அஹிம்ஸா-ஸத்ய-சௌச-தயா-ஆஸ்திக்யம்
ஆதி - சாரித்ர்யாணி - பரிபாலனீயானி"!!

"அகிம்ஸை, ஸத்யம், சுத்தம், தயை (இரக்கம்) தெய்வ விஸ்வாஸம்

Koviloor Digital Library

ஆகிய நற்பண்புகளைப் போற்றி வளர்த்து காப்பாற்றி வரவேண்டும்" என்கிறார் நாரதர்.

பக்தனுக்கு இத்தகைய குணங்கள் இன்றியமையாதவை. இக்குணங்கள் பக்தனை மேலும், அவனது லட்சியத்தில் ஊக்குவிக்கும். பக்தனின் லட்சியத்தை அடைவதில் இவைகள் எல்லாம் மைல்கற்கள் அவனது பாதையில் இக்குணங்கள் எல்லாம் துணைவரும். இவைகளை பக்தன் துணையாகக் கொள்ள வேண்டும். அவனது இலட்சிய மார்க்கத்துக்கு இவைகளே வழித்துணையாக இருக்கும் என்றும் சொல்லலாம்.

ஸூத்ரம் 79 : "ஸர்வதா ஸர்வபாவேன நிச்சிந்தைர்
பகவானேவ பஜனீய: "!!

"எப்பொழுதும் எல்லா பாவங்களுடனும், வேறுவித சிந்தனையும் இல்லாமல் பகவானையே போற்றித் துதித்து வரவேண்டும்" என்கிறார் தேவரிஷி.

எல்லா நேரத்திலும் முழுமனத்துடனும், உள்ளன்புடனும் வேறு வெளிஉலக சிந்தனைகள் ஏதுமின்றி, உலகாயத எண்ணங்கள் எதுவுமின்றி சஞ்சலமனத்துடன் அல்லாது அசஞ்சலமாக இறை வழிபாடு செய்ய வேண்டும். இறைவனே நிரந்தரமானவர், வழிபடத்தக்கவர், நினைவில் கொள்ள வேண்டியவர், என்பதை பக்தன் அறிவான் என்பதால் இவனை எந்த எண்ணங்களும் தீண்டாமல் சஞ்சலமற்ற மனத்துடன் பகவத் அனுபவத்திலேயே இருப்பது இவனது ஸ்வாபாவிகம். இதையே திருவள்ளுவர்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை – அப்பற்றினை
பற்றுக பற்றை விடற்கு.

என்கிறார்.

பகவான் கீதையில்,

"தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேன பாரத 18-62
தத்ப்ரஸாதாத்பராம் சாந்திம் ஸ்தாநம் ப்ராப்யஸி ஸாஸ்வதம்" !!

"அர்ஜுனா! எல்லா வகைகளிலும் நீ பகவானையே சரணமடைவாயாக. அந்த பகவான் தன் அருளினால் நீ உயர்ந்த அமைதியையும் நிலையான பரம பதத்தையும் அடைவாய்" !!

என்கிறார்.

Koviloor Digital Library

ஸூத்ரம் 80 : "ஸகீர்த்யமான: சீக்ரமேவ ஆவிர்பவதி
அனுபாவயதி ச பக்தான்" !!

பகவானின் நாமகுண வைபவங்களைப் பாடி, ஆடி, நாமகீர்த்தனம் செய்யும் பக்தனுடைய விஷயத்தில் பகவான் விரைவாகவே இப்பக்தனுக்கு (காட்சிகொடுத்து) அருள் செய்கிறார்.

இத்தகைய ஸங்கீர்த்தனமயமான பக்தனுக்கு பகவான் செய்யும் அருள் பகவத்தர்சனம் தவிர வேறு என்ன இருக்க முடியும். லோகவேதங்களை கடந்துவிட்ட, ஆசாபாசங்களைத் துறந்துவிட்ட, சுக – துக்க – லாப – நஷ்ட விஷயங்களில் ஸமபாவனையுடன் கூடிய பக்தன் விஷயத்தில் வேறு என்ன வகையான அருளுக்கு பக்தன் ஆசைப்படப்போகிறான். எனவே, பகவத்தர்சனமே பகவானது அருள் என்றாகிறது. பக்தன் தன்னை எல்லா விஷயங்களிலிருந்தும் விலக்கிக்கொண்டு நாம ஸங்கீர்த்தனத்துடன் மட்டுமே தன்னை ஆட்படுத்திக் கொண்டு, நாமம் தரும் போதையில் ஆனந்த பரவசனனாகி ஆடிக்களித்து தன் நிலைமறந்த நிலையில் பகவான் இவனுக்கு ஸன்னிஹிதனாகி தன் த்வ்ய சௌந்தர்யத்தைக் காட்டியருளி தெய்வீக பேரானந்தத்திலேயே பக்தனை திளைக்கச் செய்துவிடுகிறான். பகவத் தர்சனானந்தத்தையும் இந்த தர்சன அனுபூதியினால் ஏற்படுகின்ற ஆனந்த பரவச நிலையுமே பக்தனுக்கு பலனாகி விடுவதால் பக்தன் அந்த நிலையிலேயே எப்போதும் பகவான் நாமங்களைப் பாடி, ஆடி ஆனந்த பரவச நிலையில் நிலைத்தவனாகி விடுகிறான்.

ஸ்ரீமத்பாகவதத்தில் நாரதமகரிஷி தனது அனுபவத்தை வியாஸரிடம் கூறும் பொழுது,

"த்யாயத சரணாம் போஜம் பாவ நிர்ஜித சேதஸா
ஔத்கண்ட்யாஸ்ருகலாக்ஷஸ்ய ஹ்ருத்யாஸீன்மே ஸனைர் ஹரி:
ப்ரேமாதிபரநிர்பின்ன புலகாங்கோதி நிர்வ்ருத:
ஆனந்தஸம்ப்லவே லீனோ நாபஸ்யமுபயம் முனே:" !!

பக்தி பரவசமான மனதுடன் தர்சனத்துக்கு நீர் பெருகும் கண்களுடன் ஏங்கி நின்ற என் ஹ்ருதயத்தில் பகவான் மெள்ள மெள்ளக் காட்சி தந்தார். ப்ரேமானந்தமடைந்தவனாய், புளகாங்கிதத்துடன் இன்பத்தில் திளைத்திருந்த நான் ஆனந்தப் பரவசத்தில் அங்கே பகவான் ஹரியைத்தவிர என்னையோ, மற்ற எதையுமோ காணவில்லை என்கிறார்.

ஸூத்ரம் 81 :

"த்ரிஸத்யஸ்ய பக்திரேவ கரீயஸீ பக்திரேவ கரீயஸீ " !!

Koviloor Digital Library

"முக்காலத்தும் பக்தியே சிறந்தது பக்தியே சிறந்தது" என்கிறார் நாரதர்.

இதுகாறும் பல்வேறு வகையிலும் பக்தியின் பெருமையினை பரக்கக் கூறிவந்த நாரதர் முத்தாய்ப்பாக எக்காலத்தும் பக்தியே சிறந்தது, பக்தியே சிறந்தது என ப்ரதிஞ்ஞையிட்டு கூறுகிறார். பக்தியே சிறந்தது என்பது மட்டுமல்ல. அதுவே அனுஷ்டிக்க சுலபமானது. தேச கால பரிச்சேதம் இல்லாமல், காலதேச வர்த்தமானம் இல்லாமல் எக்காலத்தும், எவ்விடத்தும் பக்தியே கைக்கொள்ளத்தக்கது என்பதாலேயே சிறந்தது. மனம், வாக்கு, காயம் இம்மூன்று கரணங்களையும் தன்ப்ரயாசை இல்லாமலே ஒருநிலைப்படுத்தி த்யான சக்தியை தானே தருகிறது என்பதனால் பக்தியே சிறந்தது. ஜாதி, குலம், தனம், வயதுக்கிரமம் இல்லாமல் குழந்தைகளும், பெரியவர்களும், ஆண்களும், பெண்களும் எவ்வித பேதமுமின்றி அனுஷ்டிக்கத்தக்கது என்பதிலும் பக்தியே சிறந்தது. இதிகாச புராணங்களிலும், ஏன் வேதத்திலும் கூட சிறப்பாக கூறப்பட்டதாலும், வியாஸபகவான் தொடங்கி இக்காலத்திலும் இருந்து வந்த இருந்து வருகிற மகான்கள் எல்லோராலும், அனுஷ்டிக்கப்பட்டதும், அனுஷ்டிக்கும்படி எல்லோருக்கும் உபதேசிக்கப்பட்டதுமான வழி இதுவே ஆகையால் பக்தியே சிறந்தது பக்தியே சிறந்தது என அறுதியிட்டு நாரதர் கூறிவிட்டார். அடையவேண்டிய பொருள் பகவான், அதற்குரிய எளிமையான வழி உள்ளன்போடு செய்யப்படுகின்ற "ப்ரேமபக்தி" என்பது இங்கே நிரூபிக்கப்பட்ட உண்மையாயிற்று.

ஸூத்ரம் 82: "குணமஹாத்ம்யா ஸக்தி - ரூபா ஸக்தி
பூஜாஸக்தி - ஸ்மரணாஸக்தி – தாஸ்யாஸக்தி
ஸக்யா ஸக்தி – காந்தா ஸக்தி
வாத்ஸல்யாஸக்தி – ஆத்மநிவேதனாஸக்தி
பரம விரஹாஸக்தி - ரூபா ஏகத
ஆப்யே கத சதா பவதி" !!

(பக்தி என்பது – பக்தி பாவம் எனப்படுவது பொதுவாக அடிப்படையில் ஒன்றாகவும் ஒரே உணர்வாகவும் தோன்றிய போதிலும் இது பதினோறு வகைப்பட்ட பிரிவு உடையதாக நாரதர் இந்த ஸூத்திரத்தில் இவ்வாறு சொல்லுகிறார்.)

1. குண மஹாத்ம்யா ஸக்தி :-

இறைவனுடைய குண விசேஷங்களைக் கேட்டு மகிழ்வுறும் பக்தி.

கதாஸ்ரவணம் என்னும் ப்ரஹ்லாத ஸ்வாமியின் ஸ்வரண பக்தியாகும். பகவானின் அனந்த கல்யாண குணங்களைக் கேட்டு காது நிரம்பி, மனமும் நிரம்பி, இதனால் மகிழ்ச்சியும் நிரம்பி, பக்தனை

Koviloor Digital Library

பகவத்குணங்களை மீண்டும் மீண்டும் கேட்கத்தூண்டும். கேட்பவன், சொல்பவன் இருவருக்கும் இந்த நிலையே. சொல்லும் பக்தன் சொல்லி மாளமாட்டான். இன்னும் சொல்லமாட்டோமோ, இன்னும் சொல்லமாட்டோமோ என்று ஏங்கித் தவிப்பானேயன்றி சொல்லிவிட்டோம் என்று திருப்தி அடையமாட்டான். கேட்கும் பக்தனுக்கும் இதே நிலைதான். எத்தனை தடவைகள் கேட்டாலும் அலுக்காமல் மேலும் மேலும் கேட்கவே பகவத் தாகமுள்ளவனாய் இருப்பான். சொல்லுவதற்கு தாபமும், கேட்பதற்கு தாபமும் உடைய இரண்டு பக்தர்கள் சேர்ந்து விட்டாலே அவர்களுக்கு இன்பம், மோக்ஷம் என்பது தனியாக இல்லை. சுக முனியும் பரீட்சித்து ராஜனும்போல. இதையே ஸ்ரீமத் பாகவதம்,

"நிவ்ருத்த தர்ஷைர் உபகீயமானாத்
பவௌஷதாச் ச்ரோத்ர மானோபிராமாத்
த உத்தமஸ்லோக குணானுவாதாத்
புமான் விரஜ்யேத விநாபஸுக்நாத்"

என்றும்,

"ததேவ ரம்யம் ருசிரம் நவம் நவம்
ததேவ ஸஸ்வந் மனஸோ மஹோத்ஸவம்
ததேவ ஸோகார்ணவ ஸோஷணம் ந்ருணம்
யத்உத்தம ஸ்லோக யாஸோ அனுகியதே" !!

என்று கூறுகிறது.

2. ரூபா ஸக்தி :-

"பகவானின் த்வ்யமங்கள ரூபத்தைகண்டு மகிழும்பக்தி"

எங்கெல்லாம் பகவத் ஸ்வரூபம் வர்ணிக்கபடுகிறதோ அங்கெல்லாம் பக்தன் அவ்வடிவழகை மானஸீகமாக ஆனால் நேருக்குநேர் கண்டுவிடுகிறான். பின் ஒவ்வொரு கோயிலாக தேடித் தேடிச் சென்று எம்பெருமான் தன் வடிவழகில் மனம் பறிகொடுக்கிறான். இந்தக் கோவிலின் அர்ச்சாவதாரங்கள் இவனுடன் நேரிலேயே பேசும். அந்த அர்ச்சாவதார பகவத் ஸ்வரூபத்தை கல்பிதம் என்று பக்தன் எண்ணுவதில்லை. பகவானை நேரில் பார்ப்பது போலவே இந்த அர்ச்சாவதார அழகில் சொக்கிப் போகிறான்.

மலர்ந்து விழிக்கும் கண்கள், எடுப்பான சம்பகநாஸி, முறுவலிக்கும் திருவாய், சிவந்த உதடுகள், உள்ளே முத்துமுத்தான வரிசைப்பற்கள், அழகான கதுப்பான கன்னங்கள், பளிச்சென்ற கழுத்து, திரண்டு அகன்ற தோள்கள், அதில் வாகாக இறங்கும் மார்பு, மயக்கும் இடுப்பு, நீண்ட

Koviloor Digital Library

புஜங்கள், அழகழகான விரல்கள், முத்துப்போல் பளபளக்கும் நகங்கள், தலையில் ரத்னக்கிரீடம், அதில் படபடக்கும் மயிற்பீலி, தோள்வளைகள், மார்பில் வைஜயந்தி வனமாலை, கைகளில் மூன்று மடிப்புள்ள திருவயிறு, அதை சுற்றிய முப்புரிநூல், கங்கணம், விரல்களில் மோதிரம், இடுப்பில் அரைஞாண், கால்களில் தண்டை கொலுசு, இடுப்பில் அழகான வெண்பட்டு, மார்பில் ஹரிசந்தனம், அழகிய பீதாம்பரம், மயக்கும் மந்தஹாஸம், கருணையை வர்ஷிக்கும் பார்வை, அகன்ற நெற்றியில் கஸ்தூரி திலகம், கண்களில் தீட்டியமை, சுருள்சுருளாக சுகந்தம் வீசும் அளகபாரம் பக்தனால் வைத்த கண்ணை எடுக்க முடியவில்லை. அந்த அர்ச்சாவதார சௌந்தர்யத்திலேயே மயங்கி விடுகிறான் ஆழ்வார்களைப்போல.

3. பூஜாஸக்தி :

இது பகவானை ஆராதிக்கும் பூஜாமார்க்கம். பகவானே நேரில் வந்து தனது ஆராதனத்தை ஏற்றுக் கொள்வதுபோன்ற பாவம். பகவானுக்கு எண்ணைக்காப்பு, மஞ்சள்பொடி, மாபொடி, சுகந்த திரவிய சூரணங்கள், பால், தயிர், நெய், தேன் இவைகள் கொண்டு அபிஷேகங்கள். நிறைவாக ஸுகந்தமான சந்தானபிஷேகம், தூபம் போட்டு பகவானை உலர்த்தி, பட்டாடை கொண்டு அலங்கரித்து, ஆபரணங்கள் அணிவித்து, மைதீட்டி மலர்மாலை சூட்டி, மலர்கொண்டு அர்சித்து, தூய தீபங்களால் உபசாரம் செய்து, பலவித நிவேதனங்கள் படைத்து, கற்பூர ஹாரத்தி எடுத்து பகவான் தன் சிரமம் தீர சத்ர சாமரங்களால் விசிறி, பகவானை சயனிக்கப்பண்ணி .... பூஜாவிதிகள் என்பது சடங்குகள் அல்ல. பக்தனுக்கு உணர்வு பூர்வமான அனுபவங்கள். உதாரணம் ப்ரேமிக பக்தர்களைப்போல.

4. ஸ்மரணஸக்தி :

பகவான் நினைவில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அதிலேயே மூழ்கிவிடும் வகையிலான பக்தி.

பகவானில் கல்யாண குண வைபவங்களை காதுகுளிர கேட்டாயிற்று. அவன்தன் திவ்ய மங்கள ரூபத்தை கண்குளிர பார்த்தாயிற்று. அவன் உபசாரங்கள் மனம் நிறைய செய்தாயிற்று. இவைகளையே மீண்டும் மீண்டும் நினைத்தபடியே, நினைத்து நினைத்து ஆனந்தப்பட்டபடியே பொழுதினை கழிக்கலாயிற்று. இதுவே ஸ்மரணபக்தி.

5. தாஸ்யா ஸக்தி :

இறைவனுக்குத் தொண்டு செய்வதிலே காணும் இன்பமே தாஸ்ய பக்தி. ஏற்கனவே அனுபவித்தபடி அர்ச்சாவதாரமே ப்ரத்யட்ச பகவான் என்பதால் அவன் குடிகொண்டுள்ள கோயிலில் செய்யும் கைங்கரியங்களே தாஸ்யம்.

Koviloor Digital Library

கோயிலில் குடிகொண்ட பகவானுக்கோ அல்லது தன் இல்லத்தில் எழுந்தருளியுள்ள பகவானுக்கோ எல்லாவிதமான பணிவிடைகளும் செய்தல். அதிகாலையில் நல்ல பசும்பாலைக் காய்ச்சி சர்க்கரை கலந்து திருப்பள்ளி எழுச்சி பாடி இளஞ்சூட்டில் பகவானுக்கு சமர்ப்பித்தல், சந்தனம் அரைத்து பூஜை, பகவானுக்கு அமுது படைத்தல், பகவான் செவிகுளிர நாமஸங்கீர்த்தனம், பின்பகவானை ஊஞ்சலில எழப்பண்ணி டோலோத்ஸவம், பின் ஸயனோத்ஸவம், இதுவே தாஸ்யம் ராமானுஜரைப்போல.

6. ஸக்யஸக்தி :

பகவானை நண்பனாய்க் கொண்டு பக்தி செய்தல்.

இது பாலகோபாலன் விஷயத்தில் பொருந்தும். தன்னை ஒரு மாடுமேய்க்கும் இடைப்பையனான ஸ்ரீதாமாவாகவோ, பலபத்ரனாகவோ எண்ணிக்கொண்டு கண்ணன் தன் பாலலீலைகளில் மனம் பறிகொடுத்து இந்த லீலைகளில் மானஸீகமாக தானும் கலந்து கொண்டு இன்புறும் நிலையே ஸக்யம்.

7. காந்தா ஸக்தி :

பகவானை நாயகனாகவும், தன்னை நாயகியாகவும் எண்ணி உறவாடும் நிலையே காந்தாபாவம். இந்த ப்ரேமபாவத்தின் நிலையினை வார்த்தைகளால் விளக்க முடியாது. வார்த்தைகளில் அடங்காது. அவரவர் ஸ்வானுபவமே ப்ரமாணம் என்பதால் ஆண்டாளைப் போல், ஸ்வாமி நம்மாழ்வாரைப் போல் மஹாப்ரபு க்ருஷ்ண சைதன்யரைப்போல் எல்லாவற்றுக்கும் மேலாக கோபிகளைப்போல் என்று மட்டும் சொல்ல முடியும்.

8. வாத்ஸல்யாஸக்தி :

பகவானை குழந்தையாக எண்ணி மகிழும் பக்தி.

தானே யசோதை என்ற எண்ணத்தில் குட்டிக் கண்ணனை தொட்டிலில் இட்டு தாலாட்டுவதும், பாலூட்டி சீராட்டுவதும், விதவிதமாக அலங்காரம் செய்து ஆனந்தப்படுவதுமான பக்திரஸமே வாத்ஸல்யம். பெரியாழ்வாரைப்போல.

9. ஆத்ம நிவேதின ஸக்தி :

பகவானே கதி என்றெண்ணி மனம் வாக்கு காயம் மட்டுமல்லாது தன் ஆத்மாவையே பகவத் அர்ப்பணம் பண்ணிவிடும் சரணாகதி தத்துவமே இங்கு பக்தியாக சொல்லப்படுகிறது.

Koviloor Digital Library

எதுவும் பகவான் செயல் என்று தன்னையே பகவானிடம் ஒப்படைத்துவிட்டால் தனக்கென்று ஏதும் இல்லை என்றும், நிகழ்பவை எல்லாம் பகவத்ப்ரீதிகரம் என்ற ஹ்ருதய பரிபாகமே ஆத்ம நிவேதனம் - பாகவதத்தில் சொல்லப்பட்ட ஜடபரதரைப்போல

10. தன்மயா ஸக்தி :

பகவான் வேறு தான் வேறு அல்ல என்ற நிலையில் தன்னிலேயே பகவானைக் காணும் பக்தநிலை.

இத்தகைய பக்தனுக்கு ப்ரக்ருதி என்றோ, பகவான் என்றோ, தான் என்றோ பேதம் இல்லை. எல்லாம் தானாக, தானே எல்லாமாகத் தெரியும் பகவானுடன் இரண்டறக்கலந்த நிலை.

சுகர், ஜடபரதர் போன்ற பரமஹம்சர்கள் இதற்கு உதாரணம்.

11. பரம விரஹா ஸக்தி :

பகவான் தன் ப்ராணன். இவனைப்பிரிய முடியாது என்ற நிலையில் பிரிவிலே உண்டாகிற விரஹ வேதனையே இங்கு பக்தி ரூபமாக சொல்லப்படுகிறது.

பகவத்ஸ்மரணம், பகவன் நாமஸங்கீர்த்தனம், பகவத்படனம், பகவத் தர்சனம் என்று இல்லாமல் எந்த ஒரு நொடியும் இருக்குமானால் அந்த நொடி நேரத்திலும் கூட விரஹத்தால் மனம் நொந்து போகும் நிலையையே இங்கே பக்தியாக சொல்லப்படுகிறது. கோபிபாவம் என்பதுவும் இதுவே.

ப்ரேமை என்பது ஒன்றே எனினும் இதுபல வழிகளில் பீரிட்டுக் கிளம்புகிறது. பக்தர்களின் மனநிலைக்கேற்ப இந்த ப்ரேமபக்தியானது மேற்சொன்ன பக்தி நிலைகளில் எதுஒன்றாகவோ பரிணமிக்கிறது. பக்தியின் நிலைப்பாடுதான் வெவ்வேறே தவிர பக்தியின் பாவமும் பக்தனின் நிலையும் ஒன்றே. உலகியலில் உருவாகும் இந்த பதினோறு வகை பக்தி வழியிலேயே ஏதோன்றின் மூலமும் பக்தன் பகவானின் பூர்ணக்ருபைக்கு பாத்திரமாகி விடுவான் என்பதையே இங்கே தேவரிஷி சுட்டிக்காட்டுகிறார்.

ஸூத்ரம் 83 :

"இத்யேவம் வதந்தி ஜனஜல்ப நிர்பயா ஏகமதா:
குமார -வ்யாஸ-சுக சாண்டில்ய - கர்க்க
- விஷ்ணு - கௌண்டின்ய - சேஷ - உத்தவ
- ஆருணி -பலி - ஹனுமத்-விபீஷண - ஆதய:
பக்த்தாச்சார்யா: " !!

Koviloor Digital Library

"ஸனத்குமாரர் - வியாஸர் - சுகர் - சாண்டில்யர் -
கர்க்கர் - விஷ்ணு – கொண்டின்யர் - ஆதிசேஷன் -
உத்தவர் - ஆருணி – பலி சக்ரவர்த்தி –

"ஹனுமான் - விபீஷணன்" ஆகிய இவர்களே பக்திரஸ சாஸ்த்திரத்தின் குருவாவார்கள். பக்தி மார்க்கத்தின் உத்தமகுணங்களை உலகுக்கு காட்டி அருளியவர்களை இங்கே நாரத மகரிஷி ஸ்மரிக்கிறார். தன்னை இவர்களிடமிருந்து தனித்து காட்டிக்கொள்வதால் அவர்களை தனக்கு பக்தி மார்க்கத்தை காட்டித்தந்த குருவாகவும் கொள்வதாக கொள்ளலாம். மற்றவர்களுக்கு உகப்பில்லை என்பதற்காக உண்மை நிலையினை உலகுக்கு உணர்த்த பயப்படாத உத்தம சீலர்கள் இவர்கள். இதுவே உத்தம சீலர்களின் இலட்சணமும் ஆகும். இவர்களது உபதேசங்களும்

ஏன் வாழ்க்கை தத்துவங்களுமே உலகுக்கு சிறந்த வழிகாட்டி. எனவே தான் நாரதர் இவர்களை பக்தி மார்க்கத்தில் செல்லும் யாவருக்கும் ஒவ்வொருவராக பெயர் சொல்லி காட்டித் தருகிறார்.

1. குமார :-

ஸனத் குமாரர்களையே இங்கே நாரதர் குமார: என்று குறிப்பிடுகிறார். ஸனகர், ஸனந்தனர், ஸனத் ஸுஜாதர், ஸனத்குமாரர் ஆகிய நால்வரும் பிரம்மாவின் மானஸபுத்திரர்கள் என்றும் ஐந்துவயதேயான பாலகர்கள். எப்போதும் ஹரிஸ்சரணம் என்று இருப்பவர்கள். உலகிற்கு ஞானத்தையும், பக்தியையும் புகட்ட வந்த ஆதிகுருமார்கள்.

2. வியாஸர் :-

வசிஷ்டரின் பேரர் - மஹரிஷி பராசரரின் புத்திரர் - வேதத்தை ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்று நான்காக வகுத்தவர். இதிகாஸமான மஹாபாரதத்தையும் பின் பதினெட்டு புராணங்களையும் எழுதியவர். வியாஸாய விஷ்ணு ரூபாய வியாஸ ரூபாய விஷ்ணுவே என்றபடி விஷ்ணுவின் ஞானவதாரம்.

3. சுகர் :-

சுகப்ப்ரம்மம் என்று அழைக்கப்பட்டவர் மகரிஷி. வேதவ்யாஸரின் புத்திரர். "நிகமகல்பதரோர்களிதம்பலம் சுகமுகாத் அம்ருதத்ரவ ஸம்யுதம் பிபத பாகவதம் ரஸமாலயம் முகுரஹோ புவி பாவுகா:"!!

ஸ்ரீமத் பாகவத மஹாபுராணத்தை பரிக்ஷித்துக்கு சொன்னவர் பிறவிஞானி.

Koviloor Digital Library

4. சாண்டில்யர் :-

சூத்ர ப்ரவர்த்தகரான மகரிஷி. சாந்தோக்ய உபநிஷத்தில் சாண்டில்ய வித்தை என்னும் உபாஸனை சொல்லப்படுகிறது. இவரும் பக்தி ஸுத்ரம் 100 கொண்ட பக்தி சாஸ்த்திரம் செய்திருக்கிறார்.

5. கர்க்கர் :-

இவரும் ஒரு மகரிஷி. யது குலத்தோரின் குல புரோஹிதர். ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் பலராமனுக்கும் நாமகரணம் செய்வித்தவர். இவரும் ஒரு பக்தி ஸுத்ரம் செய்திருக்கிறார்.

6. விஷ்ணு :-

இவரும் ஒரு மகரிஷியே. விஷ்ணு ஸ்மிருதி போன்ற சில ஸ்மிருதிகளின் சாஸ்த்திர கர்த்தா.

7. கௌண்டின்யர் :-

இவர் ஒரு கோத்ர ப்ரவர்த்தகர். த்யானத்தின் மூலம் பக்தி நிலை எய்தும் வழியினை விளக்கியவர்.

8. சேஷர் :-

ஆதிசேஷன். ஜோதிப்பணாமுடி ஆயிரத்துடன் ஸ்ரீமன் நாராயணன் பள்ளிகொள்ளும் பரம பாகவதர். நின்றால் குடையாம், இருந்தால் சிம்மாசனமாம், கிடந்தால் படுக்கையாம் என்று பகவானுக்கு பணி செய்யும் பெருமையால் பெருமை கொண்டவர்.

9. உத்தவர் :-

பிரகஸ்தியின் சிஷ்யரும், ஸ்ரீக்ருஷ்ணனின் பிரியமான நண்பரும், விருஷ்டி குலத்து அரசர்களுக்கு நன்மந்திரியுமானவர். பாகவத ஸாரமான உத்தவகீதை ஸ்ரீக்ருஷ்ணனால் இவருக்கு உபதேசிக்கப்பட்டது.

10. ஆருணி :-

மகரிஷி அருணரின் புத்திரர். இயற்பெயர் உத்தாலகர் இவரது பெயர் உபநிஷதங்களில் உள்ளது. ஆனால் க்ருஷ்ண பக்தர்களுக்கு நிம்பார்க்கர் என்ற பெயரில் குரு ஸ்தானத்தில் இருந்து ராதாக்ருஷ்ண பக்தி பத்ததியை அளித்தவர்.

11. பலி :-

பலி சக்கரவர்த்தி. பக்த ப்ரஹ்லாதனுடைய பேரன். நூறுயாகங்கள்

Koviloor Digital Library

செய்து இந்திரனுக்கு சமமான பதவியைப் பெற்றவர். வாமனாவதாரத்தில் தன்னையே பகவான் விஷ்ணுவிற்கு ஆத்ம ஸமர்ப்பணம் செய்து பகவானை பாதாள லோகத்தில் தன் வீட்டு காவல்காரராக பகவத் அபிமானத்தில் ஆக்கிக் கொண்டவர்.

12. ஹனுமான் :-

ஸ்ரீபக்த ஹனுமான் என்று பாரெங்கும் பூஜிக்கப்படும் ராமதாஸன். எங்கெல்லாம் ராமநாமம் ஒலிக்கின்றதோ அங்கெல்லாம் கூப்பிய கைகளுடன் பொங்கும் ஆனந்தக் கண்ணீருடன் பக்தர்களை கடாக்ஷிப்பவர். புத்திர்பலம் யாசோதைர்யம் நிர்பயத்வம் அரோகத அஜாட்யம் வாக்குபடுத்வஞ்ச ஹனுமத் ஸ்மரணோபவேத்.

13. விபீஷணர் :-

சத்தியத்திற்காகவும், நேர்மைக்காகவும், உடன் பிறந்தவனையும், சொந்த நாட்டையுமே தியாகம் செய்தவர் சரணகதி தத்துவத்தின் பிதாமகன் என்று கூட சொல்லலாம். விபீஷண சரணகதி ப்ரசித்தமானது.

இவர்களில் பலி, வியாஸர், ஹனுமான், விபீஷணன் ஆகியோர் பக்தி தத்துவத்தை நிலைநாட்டி இன்றும் என்றும் சிரஞ்சீவியாக இருந்து கொண்டிருப்பவர்கள்.

ஸூத்ரம் 84 : "ய இதம் நராதப்ரோக்தம் சிவானு சாஸனம்
விஸ்வஸிதி ச்ரத்தத்தே ஸப்ரேஷ்ட்டம்
லபதே ஸப்ரேஷ்ட்டம் லபத இதி" !!

நாரதரால் கூறப்பட்ட இந்த மங்களகரமான (சிவ அனுசாஸனம்) (சிவானுசாஸனம்) சிவனால் நாரதருக்கு (சொல்லப்பட்ட) உபதேசிக்கப்பட்ட உபதேசங்களை எவர் நம்பிக்கையுடன் அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் அன்பில் சிறந்தவனான பகவானை அடைகிறார்கள். அன்பில் சிறந்தவனான பகவானை அடைகிறார்கள்.

பக்தி மார்க்கத்திற்கு எல்லோரும் அதிகாரியே என்பதை நாரதர் "ய" (எவன்) என்ற சொல்லால் குறிக்கிறார். இதுவரை தான் கூறிவந்தவைகளை "சிவானுசாஸனம்" என்ற வார்த்தையால் இந்த விஷயங்கள் எல்லாம் தன்னால் கூறப்பட்டவை அல்ல என்றும் சிவபெருமான் உட்பட முன் பெரியோர்கள் சொன்னதை அனுசரித்து கூறப்பட்டவை என்றும் சொல்கிறார். "விச்வஸித்" என்ற வார்த்தையால் நம்பிக்கையுடன் அனுஷ்டிக்க வேண்டும் என்றும் சொல்கிறார். அப்படி நாரத மகரிஷியால் முன்னோர்கள் வழியில் சொல்லப்பட்ட மங்களகரமான உபதேச மொழிகளை எவர்

Koviloor Digital Library

உள்ளன்புடனும், நம்பிக்கையுடனும், சிரத்தையுடனும் அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் கருணைக் கடலாகிய, ப்ரியதமனாகிய பரமபுருஷனை அடைகிறார்கள். அந்த உத்தம பக்தனே தன் அன்புக்கடலாகிய ப்ரேமநிதியாகிய பகவானை அடைந்து பரமானந்த சுகத்தைப் பெருகிறான்.

"பகவானைக் காட்டித்தரும் காமதேனு ப்ரேம பக்தியே
ப்ரேமபக்தியே பகவானை அடைய சிறந்த மார்க்கம்
ப்ரேம பக்தியே பக்தனையும் பகவானையும் கூட்டி வைக்கிறது."

"உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரரு சுடரொடி தொழுதெழன் மனனே"

முடிவுரை

இங்கே கூறப்பட்டவைகள் எல்லாம் கேட்க பரமானந்தமானது. ஆனால் இந்த குணங்களை அனுஷ்டிக்க முயற்சிக்கலாம். முயற்சி திருவினையாக்கும். ஆனால், இந்த குணங்கள் தனக்கு இல்லையே என்று எண்ணி கவலை கொள்ளவேண்டாம். இத்தகைய குணங்களோடு வாழ்ந்து காட்டிய மஹனீயர்கள் கூட்டம் ஒரு பெருவெள்ளமாகவே இருக்கிறது. அவர்கள் தம் சரித்திரங்களே நமக்கு உஜ்ஜீவனம். ஆதர்சமானவை. அமைதியையும், ஆறுதலையும் தரவல்லவை. அவர்கள் சரித்திரங்களைக் கேட்டு மனம் நெகிழ்ந்து நம் கண்களில் பனிக்கும் கண்ணீரே நாம் நாரத பக்தி ஸூத்திரங்களைப்படித்து, கேட்டு அனுபவித்ததின் பயன், பலன் எல்லாம். இன்றும் இந்த கோரமான கலியிலும் ஸாதுக்கள் இல்லாமல் இல்லை. ஆங்காங்கே அபூர்வமாக இருக்கிறார்கள். அவர்களைத் தேடிச்சென்று அவர்கள்தம் ஸங்கத்தில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். ஸாதுஸங்கம் இல்லை எனில் உலகில் பகவத் அனுபவங்களுக்கு வாய்ப்பே இல்லை. ஸாதுஸங்கமே நமக்கு சகலவிதமான நற்குணங்களையும் தரவல்லது. நாரதர் கூறிய பக்தி லக்ஷணங்கள் பரிபூரணமாக நிரம்பியவர்களே ஸாதுக்கள். இவர்கள் நேரடி ஸங்கம் கிட்டாவிட்டாலும்கூட இந்த ஸங்கத்தில் உள்ள எவர்ஸங்கமாவது கிட்டினாலும் பேரானந்தமே. அதுவே நமக்கு சகலவிதமான புருஷார்த்தங்களையும் தரவல்லது. உலகியலில் உழன்று உழன்று களைத்து விட்டவர்களுக்கு மட்டுமே அவர்கள் புகலிடம். இன்னும் உலக விஷயங்களில் மேய்ந்து கொண்டும் விஷயானுபவ சுகங்களையே சாஸ்வதம் என்றும் எல்லாவிதத்திலும் தன்னைத்தானே பெரியவன் என்றும் எண்ணிக் கொண்டிருக்கும் கோடானுகோடி மக்களுக்காக அல்ல இந்த

Koviloor Digital Library

ஸ்தஸங்கபாக்யம். "மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொண்டதோர் வையம் தன்னோடும் கூடுவதில்லை காண்" என்றபடி உலகினைப்பார்த்தும் தன்னைப்பார்த்தும் நொந்து, மனம்வருந்தி, தன்னைப்பற்றிய அகந்தை உணர்வுகள் மறைந்து மக்கிபோகும் நிலையில் உள்ளவர்களுக்கே ஸாதுஸங்கம் லபிக்கும். ஸாதுஜங்கத்தின் மகிமையைத்தான் நாரத மகரிஷி எவ்வளவு கூறிவிட்டார். அது அனந்தம். நம் இகபர சுகங்களுக்கும் மட்டுமல்ல நம் ஆத்ம ஸுகத்திற்கும் இதுவே விருந்து. லௌகீக பேராசைகளுக்கும் இதுவே மருந்து.

ஸத்ஸங்கம், நாமகீர்த்தனம் இவ்விரண்டுமே உலகம் உய்ய போடப்பட்ட பாதை. இந்தப்பாதையில் பயணிக்கும் எவரும் தடம் புரள்வதில்லை. நிச்சயமாக எண்ணிய இலக்கை சென்றடைவார்கள்.

அத்தகைய ஸங்கம் வேண்டுமே என்ற தாபம் முதலில் ஏற்பட வேண்டும். இந்த தாபம் வரவழிவகுப்பது தான் நாமஸங்கீர்த்தனம். வாய்விட்டுக்கூறி பகவானின் நாமங்களை உச்சரித்தால் இருண்ட உலகில் வெளிச்சம் தெரியும். மேலும் நாமஸங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தால் ஸாதுக்கள் தேடி வருவார்கள். ஸாதுக்கள் தேடிவரும் தினமே ஸுதினம். அன்று உலக அமுக்கும் மாயையும் விலகி தெளிவான ஞானம் கிட்டும். ஆத்மஸாக்ஷாத்காரத்திற்கும் வழிவகுக்கும். பகவன் நாமருசியும், ஸத்ஸங்க ருசியும் வளரும். இது பகவத்தர்சனத்தில் கொண்டு சேர்க்கும்.

சமர்ப்பணம்

கம்பநாட்டாழ்வார் தான் ராமகாதையை எழுதத்துவங்கும்முன் சொல்கிறார். எப்படி ஒரு பூனையாவது சமுத்திரத்தின் தண்ணீரை தன் நாக்கினால் நக்கி நக்கி வற்றவைத்து விட வேண்டும் என்று எண்ணுகிறதோ அதுபோல் நான் ராமாயணம் என்னும் சமுத்திரத்தை என் நாக்கு என்னும் அளவுகொண்டு அளந்திட முயற்சிக்கிறேன் என்கிறார்.

ஸ்ரீமத் பாகவதத்தில் நிமிமகராஜனுக்கு உபதேசம் செய்யவந்த நவயோகிகளில் ஒருவரான த்ருமிலர். பகவானின் அனந்த கல்யாண குணங்களைச் சொல்ல எண்ணி சொல்ல ஆரம்பிக்கும் பொழுது பிரமித்துப் போகிறார். ஒரு சமுத்திரத்தின் கரையில் ஒரு சிட்டுக்குருவியானது நின்று கொண்டு ஒரு அருகம்புல்லை வாயில் கவ்விக்கொண்டு அந்த அருகம்புல்லின் நுனியால் சமுத்திரத்தின் நீரை எடுத்து எடுத்து கரையில் விட்டு, ஒருக்கால் அது சமுத்திரத்தை வற்ற வைத்தாலும் வைத்துவிடலாம். சமுத்திரக்கரையில் இருக்கும் மணலை ஒவ்வொன்றாக எண்ணினாலும் எண்ணிவிடலாம். வானத்திலிருந்து சண்டமாருதமாக சூறைக்காற்றுடன் கூடிய

Koviloor Digital Library

பெருமழைபெய்யும் போது விழும் தூற்றல்களை, எண்ணினாலும் எண்ணிவிடலாம். ஆனால் ஹே பகவன் உன்னுடைய கல்யாண குணங்களை எவரால் சொல்ல இயலும் என்று பிரமித்துப்போகிறார்.

ஆனால் அடியேன், எளியவன், ஞானம் ஏதுமில்லாதவன், சாதாரணமனிதனின் ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டு கிடக்கும் நான், நாரதரின் பக்தி ஸூத்திரத்திற்கு விரிவுரை எழுதுகிறேன். ஆனால் இது எவர்பொருட்டும் இல்லை. யாருக்காகவும் இல்லை. என் இதயத்தில் ஸ்புரித்த எண்ணங்களுக்கு வார்த்தைகளால் வடிவம் தந்திருக்கிறேன். இது என் சந்தோஷத்திற்காகவே. எவருக்கும் எதையும் தெரிவிக்கவோ, போதிக்கவோ இல்லை. அதற்குரிய தகுதியும், யோக்யதையும், ஞானமும் எனக்குக் கிடையாது. “ஆசை பற்றி அறையலுற்றேன். மற்றில் காசில் கொற்றத்து ராமன் கதையறோ” என்று கவியரசர் கம்பர் சொன்னதுபோல் என் ஆசையே இங்கே எழுத்தாக உருவம் எடுத்திருக்கிறது.

உலகத்தில் க்ரதங்கள் அனந்தம். அதை சொன்னவர்களும் அனந்தம், அவர்கள் சொற்கேட்டு அத்தகைய மஹனீயர்களின் சம்பந்தம் லவலேசமேனும் எங்கோ, எப்போதோ என் முன்னோர்களுக்குக் கிட்டியதின் பயனே இந்த வரிகள். இதைப் படிப்போர் எவருக்கேனும் இதில் சிறிதளவாவது ஆத்ம விஸ்வாஸம் உண்டாகுமேயானால் அதன் பெருமைஎல்லாம் அந்த மஹனீயர்களுக்கே. குறைகள் அத்தனையும் எனக்கே. “அஹம் யந்த்ரோ ஹ்ருஷிகேச த்வம்யந்த்ரி கிலகேசவ” என்று ஆத்ம நிவேதன ஸ்தோத்திரத்தில் ஸத்குரு ஸ்ரீஸ்ரீகிருஷ்ண ப்ரேமி மஹராஜ் பிராத்திக்கிறார். “எல்லாச் செயல்களுக்கும் ப்ரவர்த்தகன் பகவானே அதை செய்யும் கருவியே நான்” என்பதில் பூர்ண விஸ்வாஸம் எனக்கு உண்டு என்பதால் எல்லாப் பெருமையும் பகவானுக்கே.

> *“கலியில் நாமகீர்த்தனம் தான் கதி. நமக்கு பக்தியில்லாவிட்டாலும், ஞானமில்லாவிட்டாலும், விரக்தியில்லாவிட்டாலும், கர்மயோகமில்லாவிட்டாலும், சிரத்தையில்லாவிட்டாலும், தபஸ் இல்லாவிட்டாலும், நன்னடத்தை இல்லாவிட்டாலும், சக்தி இல்லாவிட்டாலும், எது இல்லாவிட்டாலும் அதற்குக் காரணம் நம்மிடம் நாம ஜபம் போதவில்லை என்பதேயாகும். ஏனெனில் நாம ஜபம் பூரணமாக இருந்தால் மேற்சொன்ன யாவும் நம்மிடம் இருக்கும். கலியில் இது ஒன்றுதான் வேண்டும்.”*
>
> - மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library



Sri Malaiappa Swamy Tirumala